ஸ்ரீ சங்கர பக்த ஜன சபா

(ஸ்தாபிதம்: 20—4—61)

மேல மாம்பலம் : : சென்னை-33

ஸ்ரீ சங்கரஜயந்தி விழாமலர்—1973

ஸ்ரீ

ஸ்ரீகுருப்யோ நம:

ஸ்ரீ சங்கர பக்த ஜன சபா

(ஸ்தாபிதம் : 20—4—61)

மேலமாம்பலம் — சென்னை-33

பிரமாதீச [1973]

ஸ்ரீ சங்கர ஜயந்தி மலர்

பதிப்பாசிரியர் :

சங்கரனன்பர்க்கடிமை

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

ஸ்தாபகர் - பணியாளர்

(சிவபுராணப் பிரவசன ஞான பூஜகர்)

பிரசுரம் :

ஸ்ரீ சங்கர பக்த ஜன சபா

19, போஸ்டல் காலனி 1-வது தெரு,

மேலமாம்பலம், சென்னை-33

வெளியீடு நன்னாள் 19—8—73

விலை ரூ. 2-50

ஸ்ரீ குரு பாதுகாப்யாம் நம:

குரு வந்தனம்

—:o:—

ஸதாசிவ ஸமாரம்பாம் சங்கராசார்ய மத்யமாம்
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம்.

ச்ருதி ஸ்ம்ருதி புராணனும் ஆலயம் கருணாலயம்
நமாமி பகவத்பாத சங்கரம் லோக சங்கரம்.

ஜகதாம் குருவர்யஸ்ய காமகோட்யதிபம் சிவம்
சந்த்ரசேகர யோகீந்த்ர தேசிகம் ஸமுபாஸ்மஹே.

Ramayana Publishing House

10-G Edward Elliots Road,
MADRAS-4.

An unique offer for a free supply of
the following books:

One complete set of Valmiki Ramayanam (Bala to Yuddhakanda in 8 Volumes) & Srimad Bhagavatham with word for word meaning (Sanskrit-Tamil) & some minor publications in the course of five years

Deposit a sum of Rs. 500/- for a period of 5 years which will carry interest at 6½% per annum. You get back the principal amount with interest and the above books free of cost, the value of which will come to more than Rs. 200/-

உ

பொருளடக்கம்

விஷயம்	பக்க எண்
1. குரு வந்தனம், சமர்ப்பணம், அட்டைப் பட விளக்கம் முதலியன	(i)—(xvi)
2. ஸ்ரீமுகம், நமது சபை, ஆண்டறிக்கை முதலியன	1—16
3. ஸ்ரீ கணேச கவசம்	17
4. ஸ்ரீ விச்வநாதாஷ்டகம்	29
5. ஸ்ரீ ஹாலாஸ்யேசாஷ்டகம்	36
6. கௌரீ தசகம்	44
7. தசச்லோகீஸ்துதி	51
8. சிவ நாமாவல்யஷ்டகம்	73
9. தாரித்ர்ய தஹந சிவஸ்தோத்ரம்	78
10. ஸ்ரீ சுப்ரஹ்மண்ய புஜங்கப்ரயாத ஸ்தோத்ரம்	84
11. ஞானயோகம்	97
12. Essential Hindu Rituals	135
13. Agni Purana	141
14. கார்ய காரணம்	149
15. அப்பரும் அப்பூதியடிகளும்	157
16. ஆத்மபூஜா	169
17. Vedantic Thoughts from Upanishads	177
18. சிவாலய உற்சவ விளக்கம்	185
19. தர்மசாஸ்த்ர ப்ரவசன ஸாரம்—1	197
20. தர்மசாஸ்த்ர ப்ரவசன ஸாரம்—2	209
21. ஆதிசங்கரர் மஹிமை	217
22. The Currency of Dharma	225
23. எம்பெருமானின் திருவடிப் பெருமை	231
24. நோய் தீர்க்கும் மந்திரத் திருப்புகழ்	237
25. Bellagonda Ramaraya	241

ஷடாரண்ய மாஹாத்ம்யம்

அல்லது

அருமறை நிறைந்த ஆறு காடுகள்

வித்வான், வேதசாஸ்த்ர விசாரத, க்ருஹ்யயக்ஞ,
காண்வரத்னம், வேதாசார்ய, புராணாசார்ய, தர்ம
சாஸ்த்ராசார்ய, சதபதப்ரவீண ஜ்யோதிஷாசார்ய,
கீர்வாண சுரபி

பிரம்மஸ்ரீ வட இலுப்பை E. J. குமாரஸ்வாமி
தீக்ஷிதர் அவர்களால் எழுதப்பட்ட அரிய
ஆராய்ச்சி நூல்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் ஸ்ரீமுகத்துடன் கூடிய விரைவில் வெளியிடப்படும். பிரதிகள் தேவையுள்ளவர்கள் செப்டம்பர் மாதம் 15 தேதிக்கு மேல் 30 காசுகள் தபால் தலையுடன் நமக்கு எழுதவும்:

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா
19, டெலிபோஸ்ட் காலனி I தெரு
மேலமாம்பலம், சென்னை-33.

சிவாப்யாய நம:



அட்டைப்பட விளக்கம்

''வாசஸ்பதி'' எழுதியது

இமவான் மகளாக பார்வதி என்ற திருநாமத்துடன் தவஞ்செய்த தேவியை பரமேச்வரன் அத்தவத்தைக் கண்டு மகிழ்ந்து, திருமணஞ் செய்துகொள்ள இமயமலைக்கு எழுந்தருளினர். அப்போது வடபுறம் தாழ்ந்து தென்புறம் உயர்ந்தது. அதனைச் சமமாக்கி உலகத்தைக் காப்பதற்காக அகஸ்தியரைத் தென் திசையில் பொதியமலைக்குச் செல்லுமாறு ஏவினர். திருமணக் காட்சியைத் தரிசிக்காது செல்ல நேரிடுகிறதே என்ற அகஸ்தியரது வருத்தத்தைத் தீர்க்க அகஸ்தியருக்கு தென்திசையில் திருமணக் காட்சியை இறைவர் காண்பித்தார். வேதாரண்ய க்ஷேத்ரத்திலும் அகஸ்தியர் பார்வதி - பரமேச்வரர்களது திருமணக்

காட்சியைக் கண்குளிரக் கண்டு தரிசித்தார். இறைவ
னது மணவாளத் திருவுருவம் சுவாமிக்குப் பின்புறம்
கர்பக்கிருஹத்துக்குள்ளேயே இருக்கிறது. இங்ஙனம்
அகஸ்தியர் வேதாரண்ய க்ஷேத்திரத்தில் திருமணக்
கோலத்தைத் தரிசித்த காட்சியையே ஓவியர் மிக
அழகிய வண்ணப்படமாகத் தீட்டி, அதனை மேட்டூர்
கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமி
டெட், மேட்டூர்டாம்-2 நிறுவனத்தார் இவ்வருஷ
காலண்டராகப் பிரசுரித்தனர். அவர்களது அனுமதி
யுடன் நாம் அவ்வழகிய படத்தை இவ்வருஷ மலரின்
அட்டைப்படமாகப் பிரசுரித்துள்ளோம். அனேகமா
ஒவ்வொரு வருஷமும் அவர்களது காலண்டர் படமே
நமது அட்டைப் படமாக அமைவது குறிப்பிடத்
தக்கது.

வேதாரண்யேச்வரர் என்ற திருநாமத்துடன் இறைவரும், வீணாகானவிதூஷணி என்கிற நாமத்துடன் அம்பிகையும் இங்கு கோயில்கொண்டுள்ளனர். இத்தலத்துக் கோயிலில் நெய்யுண்ண வந்த ஒரு எலி அபுத்தி பூர்வமாகத் திரியைத் தூண்ட அதனால் அவ் விளக்கு நன்கு பிரகாசிக்க, இப்புண்ணியத்தால் மறு பிறப்பில் அந்த எலி மஹாபலிச் சக்கரவர்த்தியாகப் பேறுபெற்றதாகப் புராணங்கள் கூறுகின்றன. வேதங்கள் பூசித்ததால் வேதாரண்யம் எனப் பெயர்பெற்றது. அங்ஙனம் வேதங்கள் பூசித்த காலத்தில் அவை அடைத்த கதவு திறக்கப்படாமலேயே இருக்க, அத்தலத்துக்கு விஜயம் செய்த அப்பரும் சம்பந்தரும் முறையே திறக்கவும் அடைக்கவும் பாடி அற்புதம் நிகழ்த்திய தலம். இத்தலத்து துர்கை சன்னதி விசேடமானது.

சிவ சிவ

ஷண்மதஸ்தாபகர்
ஸ்ரீ ஜகத்குரு ஆதிசங்கர பகவத்பாதர்கள்

ஷண்மத ரக்ஷகர்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள்

ஸ்ரீகணேசாய நம:

ஸ்ரீகணேச புராணத்தில் அடங்கிய

ஸ்ரீ கணேச கவசம்

॥ श्री गणेशकवचम् ॥

தமிழ் உரை:

ஞானபாஸ்கர, சிவோத்கர்ஷவர்ஷக

பிரம்மஸ்ரீ P. N. நாராயண சாஸ்திரிகள்

श्री गौर्युवाच—ஸ்ரீ கௌர்யுவாச—கௌரீ சொன்னாள்:—

एषोऽतिचपलो दैत्यान् बाल्येपि नाशयत्यहो ।
अग्रे किं कर्म कर्तेति न जाने मुनिसत्तम ॥ १ ॥

ஏஷோதி சபலோ தைத்யாந்
பால்யேபி நாசயத்யஹோ ।
அக்ரே கிம் கர்ம கர்த்தேதி
நஜாநே முநிஸத்தம ॥

மிக வேகமான இந்தச் சிறுவனை யானைமுகத்தோன் இளம்பிராயத்திலேயே அரக்கர்களை அழிக்கி

ருன். மேற்கொண்டு என்ன காரியம் செய்வானென்று எனக்குத் தெரியவில்லை என்று முனிவரிடம் கௌரீதேவி கூறுகிருள்.

दैत्या नानाविधादुष्टास्साधु देवद्रुहःखलाः ।
अतोस्यकण्ठेकिञ्चित्त्वं रक्षार्थं बद्धुमर्हसि ॥ २ ॥

தைத்யா நாநாவிதாதுஷ்டா:
ஸாது தேவத்ருஹ: கலா: ।
அதோஸ்ய கண்டே கிஞ்சித்வம்
ரக்ஷார்த்தம் பத்துமர்ஹஸி ॥

பலவகையாயும் துஷ்டர்களாயும் தேவர்களைத் துன்புறுத்துகிற அரக்கர்கள் கொடியவர்களாயிருக்கின்றனர். ஆகையினுல் நீர் இவருடைய கழுத்தில் ஏதாவது பாதுகாப்பாக ரக்ஷை செய்யவேண்டும்.

मुनिरुवाच—முனிருவாச—முனிவர் சொன்ஞர்:—

ध्यायेत् सिंहगतं विनायकममुं दिग्बाहुमाद्येयुगे
त्रेतायान्तु मयूरवाहनममुं षड्बाहुकं सिद्धिदम् ।
द्वापरेतुगजाननं युगभुजं रक्ताङ्गरागं विभुं
तुर्येतु द्विभुजंसिताङ्गरुचिरं सर्वार्थदं सर्वदा ॥ ३ ॥

த்யாயேத் ஸிம்ஹகதம் விநாயகமமும்
திக்பாஹுமாத்யேயுகே
த்ரேதாயாந்து மயூரவாஹநமமும்
ஷட்பாஹுகம் ஸித்திதம் ।
த்வாபரேது கஜாநநம் யுகபுஜம்
ரக்தாங்கராகம் விபும்

துர்யேது த்விபுஜம் ஸிதாங்கருசிரம்
ஸர்வார்த்ததம் ஸர்வதா ॥

க்ருதயுகத்தில் ஸிம்மவாகனத்துடன் நான்கு கைகளைக் கொண்டவராயும், த்ரேதாயுகத்தில் மயில் வாகனத்துடன் ஆறு கைகளைக்கொண்டு எல்லா ஸித்திகளைக்கொடுப்பவராயும், த்வாபரயுகத்தில் யானை முகத்தோனும் சிவப்பு சந்தனத்தை அணிந்து எங்கும் நிறைந்தவராயும் கலியுகத்தில் இரண்டு கைகளை யுடையவராய் அழகிய வெளுத்த சரீரத்தைக்கொண்டு எப்பொழுதும் எல்லாவற்றையும் கொடுப்பவராயும் தியானிக்க வேண்டும்.

विनायकश्शिखां पातु परमात्मा परात्परः ।
अतिसुन्दरकायस्तु मस्तकं सुमहोत्कटः ॥ ४ ॥

விநாயக: சிகாம்பாது
பரமாத்மா பராத்பர: ।
அதிஸுந்தர காயஸ்து
மஸ்தகம் ஸுமஹோத்கட: ॥

எல்லாருக்கும் நாயகனான கணபதி தலையின் பின்புறத்தையும், பரமாத்மாவாயும் தனக்கு மேலில்லாதவரும் மிகவும் அழகான சரீரத்தை உடையவரும் மதம் பிடித்த யானை போன்றவருமான கணபதி நடுத்தலையையும் காக்கட்டும்.

ललाटं कश्यपः पातु भ्रूयुगं तु महोदरः ।
नयने फालचन्द्रस्तु गजास्यस्त्वोष्ठपल्लवौ ॥ ५ ॥

லலாடம் கச்யப: பாது
ப்ரூயுகம் து மஹோதர: ।
நயநே பாலசந்த்ரஸ்து
கஜாஸ்யஸ்த்வோஷ்ட பல்லவௌ ॥

கச்யபர் நெற்றியையும் மஹோதரர் இரண்டு புருவங்களையும் பாலசந்த்ரர் கண்களையும் யானை முகத்தோன் இரண்டு உதடுகளையும் காக்கட்டும்.

जिह्वां पातु गजक्रीडः चुबुकं गिरिजासुतः ।
वाचं विनायकः पातु दन्तान् रक्षतु दुर्मुखः ॥ ६ ॥

ஜிஹ்வாம்பாது கஜக்ரீட:
சுபுகம் கிரிஜாஸுத: ।
வாசம் விநாயக: பாது
தந்தான் ரக்ஷது துர்முக: ॥

யானை போன்று விளையாடுகிறவர் நாக்கையும் மலைமகளின் மகன் கன்னத்தையும் விநாயகன் சொல்லையும் துர்முகன் பற்களையும் காக்கட்டும்.

श्रवणौ पाशपाणिस्तु नासिकां चिन्तितार्थदः ।
गणेशस्तु मुखं कण्ठं पातु देवोगणाधिपः ॥ ७ ॥

ச்ரவணௌ பாசபாணிஸ்து
நாஸிகாம் சிந்திதார்த்தத: ।
கணேசஸ்து முகம் கண்டம்
பாது தேவோ கணாதிப: ॥

பாசத்தை கையில் கொண்டவர் காதுகளையும் எல்லாவற்றையும் கொடுப்பவர் மூக்கையும் கணேசர் முகத்தையும் தேவனான கணக்கூட்டத் தலைவர் கழுத்தையும் காக்கட்டும்.

स्कन्धौ पातु गजस्कन्धः स्तनौ विघ्नविनाशनः ।
हृदयं गणनाथस्तु हेरम्बो जठरं महान् ॥ ८ ॥

ஸ்கந்தௌபாது கஜஸ்கந்த:
ஸ்தநௌவிக்நவிநாசந: ।
ஹ்ருதயம் கணநாதஸ்து
ஹேரம்போ ஜடரம் மஹாந் ॥

கஜஸ்கந்தர் (யானை போன்ற தோளையுடையவர்) தோளையும் ஸ்தனங்களை விக்னங்களைப் போக்கடிப்பவரும் கணநாதர் ஹ்ருதயத்தையும் மிகப்பெரியவரான ஹேரம்பர் வயிற்றையும் காக்கட்டும்.

धराधरः पातुपार्श्वौ पृष्ठं विघ्नहरः शुभः ।
लिङ्गं गुह्यं सदा पातु वक्रतुण्डो महाबलः ॥ ९ ॥

தராதர: பாதுபார்ச்வௌ
ப்ருஷ்டம் விக்நஹர: சுப: ।
லிங்கம் குஹ்யம் ஸதாபாது
வக்ரதுண்டோ மஹாபல: ॥

பூமியைத் தாங்குகிறவர் இரண்டு பக்கங்களையும் விக்னங்களைப் போக்கடிப்பவர் பின் பக்கத்தையும் மறைவிடங்களை வக்ரதுண்டரும் காக்கட்டும்.

गणक्रीडो जानुजङ्घे ऊरू मङ्गलमूर्तिमान् ।
एकदन्तो महाबुद्धिः पादौ गुल्फौ सदावतु ॥ १० ॥

கணக்ரீடோ ஜாநுஜங்கே
ஊரூ மங்கள மூர்த்திமான் ।
ஏகதந்தோ மஹாபுத்தி:
பாதௌ குல்பௌ ஸதாவது ॥

கணங்களுடன் விளையாடுகிறவர் முழங்கால் கணுக்கால்களையும் மங்களவடிவானவர் துடைகளையும் சிறந்த புத்திமானுன ஏகதந்தர் கால்பாதங்களையும் உள்ளங்கால்களையும் காப்பாற்றட்டும்.

क्षिप्रप्रसादनोबाहूपाणी आशाप्रपूरकः ।
अंगुलीश्च नखान् पातु पद्महस्तोऽरिनाशनः ॥ ११ ॥

க்ஷிப்ரப்ரஸாத நோ பாஹூ
பாணீ ஆசாப்ரபூரக: ।
அங்குளீச்சநகாந் பாது
பத்மஹஸ்தோऽரிநாசந: ॥

விரைவில் அருள்புரிபவர் கைகளையும் நினைத்ததையெல்லாம் கொடுப்பவர் உள்ளங்கைகளையும், விரல்களையும் நகங்களையும், தாமரையைக் கையில் கொண்ட பகைவனை அழிப்பவர் காக்கட்டும்.

सर्वाङ्गानि मयूरेशो विश्वव्यापी सदावतु ।
अनुक्तमपि यत् स्थानं धूमकेतुस्सदावतु ॥ १२ ॥

ஸர்வாங்காநி மயூரேசோ
விச்வவ்யாபீ ஸதாவது ।
அநுக்தமபியத் ஸ்தாநம்
தூமகேதுஸ்ஸதாவது ॥

மயூரேசர் எல்லா உடல் பாகங்களையும் உலகெங்கும் நிறைந்தவரான தூமகேது சொல்லாது விட்டுப் போன உடல் பாகங்களையும் காப்பாற்றட்டும்.

आमोदस्त्वग्रतः पातु प्रमोदः पृष्ठतोऽवतु ।
प्राच्यां रक्षतु बुद्धीशः आग्नेय्यां सिद्धिदायकः ॥१३॥

ஆமோதஸ்த்வக்ரத: பாது
ப்ரமோத: ப்ருஷ்டதோவது ।
ப்ராச்யாம் ரக்ஷது புத்தீச:
ஆக்நேய்யாம் ஸித்திதாயக: ॥

ஆமோதர் முன்புறமும் ப்ரமோதர் பின்புறமும் கிழக்கில் புத்தீசரும் ஆக்நேயத்தில் ஸித்திதாயகரும் காக்கட்டும்.

दक्षिणस्यामुमापुत्रो नैर्ऋत्यां तु गणेश्वरः ।
प्रतीच्यां विघ्नकर्ताव्यात् वायव्यां गजकर्णकः ॥ १४ ॥

தக்ஷிணஸ்யாமுமாபுத்ரோ
நைர்ருத்யாம் து கணேச்வர: ।
ப்ரதீச்யாம் விக்நகர்த்தாவ்யாத்
வாயவ்யாம் கஜகர்ணக: ॥

தெற்கில் உமையின் புதல்வனும் தென்மேற்கில் கணேச்வரரும் மேற்கில் விக்னங்களைப் போக்கடிப்பவரும் வடமேற்கில் கஜகர்ணகரும் காப்பாற்றட்டும்.

कौबेर्यां निधिपः पायादैशान्यामीशनन्दनः ।
दिवाव्यादेकदन्तस्तु रात्रौ सन्ध्यासु विघ्नहृत ॥ १५ ॥

கௌபேர்யாம் நிதிப:
பாயாதைசாந்யாமீசநந்தந: ।
திவாவ்யாதேகதந்தஸ்து
ராத்ரௌ ஸந்த்யாஸு விக்நஹ்ருத் ॥

வடக்கில் குபேரனும் வடகிழக்கில் ஈசகுமாரனும் பகலில் ஏகதந்தரும் இரவிலும் ஸந்தியிலும் விக்னங்களைப் போக்கடிப்பவரும் காப்பாற்றட்டும்.

राक्षसासुरवेतालग्रहभूतपिशाचतः ।
पाशांकुशधरः पातु रजस्सत्वतमस्स्मृतीः ॥ १६ ॥

ராக்ஷஸாஸுரவேதாள-
க்ரஹபூதபிசாசத: ।
பாசாங்குசதர: பாது
ரஜஸ்ஸத்வதம:ஸ்ம்ருதீ: ॥

பூத பிசாசுகள் பிரும்மராக்ஷஸ் பிறரால் செய்யப்பட்ட எல்லா செய்வினைகளையும் பாசத்தையும் அங்குசமும் கையில் கொண்டவர் விலக்கி காப்பாற்றட்டும்.

ज्ञानं धर्मं च लक्ष्मीं च लज्जां कीर्तिं तथा कुलम् ।
वपुर्धनञ्च धान्यं च गृहं दारान्सुतान् सखीन् ॥ १७ ॥

ஞாநம் தர்மஞ்ச லக்ஷ்மீஞ்ச
லஜ்ஜாம் கீர்த்திம் ததா குலம் ।
வபுர்த்தநஞ்ச தாந்யஞ்ச க்ருஹம்
தாரான் ஸுதான் ஸகீன் ॥

அறிவு, தர்மம், லக்ஷ்மி, வெட்கம், புகழ், தன் குலம், உடல், செல்வம், தானியங்கள், வீடு, மனைவி, பிள்ளைகள், நண்பர்கள் ஆகியவர்களைக் காப்பாற்றட்டும்.

सर्वायुधधरः पौत्रान् मयूरेशोऽवतात्सदा ।
कपिलोऽजाविकम्पातु गजाश्वान् विकटोऽवतु ॥ १८ ॥

ஸர்வாயுததர: பௌத்ரான்
மயூரேசோவதாத் ஸதா ।
கபிலோ ஜாவிகம் பாது
கஜாச்வான் விகடோவது ॥

எல்லா ஆயுதங்களுமுடைய மயூரேசர் எப்பொழுதும் பேரன்களையும், ஆடு முதலியவைகளையும், யானை குதிரைகளையும் விகடரும் காப்பாற்றட்டும்.

भूर्जपत्रे लिखित्वेदं यः कण्ठे धारयेत्सुधीः ।
न भयं जायते तस्य यक्षरक्षः पिशाचतः ॥ १९ ॥

பூர்ஜபத்ரே லிகித்வேதம் ய:
கண்டே தாரயேத் ஸுதீ: ।
நபயம் ஜாயதே தஸ்ய
யக்ஷரக்ஷ: பிசாசத: ॥

எவனொருவன் இந்த கவசத்தை பூவரசன் பட்டையில் எழுதி கழுத்தில் கட்டிக்கொள்ளுகிருனோ அந்த புத்திமானுக்கு யக்ஷ, ராக்ஷஸ பிசாசுகளிடமிருந்து பயம் கிடையாது.

त्रिसन्ध्यं जपते यस्तु वज्रसारतनुर्भवेत् ।
यात्राकाले जपेद्यस्तु निर्विघ्नेन फलं लभेत् ॥ २० ॥

த்ரிஸந்த்யம் ஜபதே யஸ்து
வஜ்ரஸாரதநுர்ப்பவேத் ।
யாத்ராகாலே ஜபேத்யஸ்து
நிர்விக்நேந பலம் லபேத் ॥

எவன் காலை நடுப்பகல் மாலையிலும் ஜபிக்கிருனோ அவன் வஜ்ரம் போன்ற உடலை அடைவான். யாத்திரையில் ஜபித்தால் தடையில்லாமல் காரியம் நடைபெறும்.

युद्धकाले पठेद्यस्तु विजयञ्चाप्नुयाद् ध्रुवम् ।
मारणोच्चाटनाकर्षस्तम्भमोहनकर्मणि ॥ २१ ॥

யுத்தகாலே படேத்யஸ்து
விஜயஞ்சாப்நுயாத் த்ருவம் ।
மாரணோச்சாடநாகர்ஷ
ஸ்தம்பமோஹநகர்மணி ॥

யுத்த ஸமயத்தில் படித்தால் நிச்சயம் வெற்றியடைவான் மாரணம், உச்சாடநம், ஆகர்ஷ்ணம், ஸ்தம்பன, மோஹந காரியங்களில்.

सप्तवारं जपेदेतत् दिनानामेकविंशतिम् ।
तत्तत्फलमवाप्नोति साधको नात्रसंशयः ॥ २२ ॥

ஸப்தவாரம் ஜபேதேதத்
திநாநாமேகவிம்சதிம் ।
தத்தத்பலமவாப்நோதி
ஸாதகோ நாத்ரஸம்சய: ॥

ஏழு தடவை வீதம் இருபத்தோருநாட்கள் படித்தால் அந்தந்த பலனை பக்தன் அடைவான், இதில் சந்தேகமில்லை.

एकविंशतिवारञ्च पठेत्तावद्दिनानियः ।
कारागृहगतं सद्यो राज्ञावध्यञ्च मोचयेत् ॥ २३ ॥

ஏகவிம்சதிவாரஞ்ச
படேத்தாவத்திநாநிய: ।
காராக்ருஹகதம்ஸத்யோ
ராக்ஞாவத்யஞ்ச மோசயேத் ॥

முன் போல் இருபத்தொரு நாட்கள் தினமும் இருபத்தொருமுறை படித்தால் சிறையிருந்தாலும், தூக்கு தண்டனை அடைந்திருந்தாலும் விடுபடுவான்.

राजदर्शनवेलायां पठेद्यस्तु त्रिवारतः ।
स राजानं वशं नीत्वा प्रकृतींश्च सभां जयेत् ॥ २४ ॥

ராஜதர்சந வேளாயாம்
படேத்யஸ்துத்ரிவாரத: ।
ஸ ராஜாநம் வசம் நீத்வா
ப்ரக்ருதீம்ச்ச ஸபாம் ஜயேத் ॥

அரசனைப் பார்க்கும்பொழுது மும்முறை படித்தால் ராஜாவசமாகி ஸபையையும் ஸபையிலுள்ளவர்களையும் ஜயிப்பான்.

इदं गणेशकवचं कश्यपेन समीरितम् ।
मुद्गलाय च तेनाथ माण्डव्याय महर्षये ॥ २५ ॥

இதம் கணேசகவசம்
கச்யபேந ஸமீரிதம் ।
முத்கலாய ச தேநாத
மாண்டவ்யாய மஹர்ஷயே ॥

இந்த கணேச கவசம் கச்யப முனிவரால் சொல்லப்பட்டது. பிறகு அவராலேயே முத்கலர் மஹர்ஷியான மாண்டவ்யர் ஆகியவர்களுக்கு உபதேசிக்கப்பட்டது.

मह्यं सप्राहकृपया कवचं सर्वसिद्धिदम् ।
नदेयं भक्तिहीनाय देयं श्रद्धावते शुभम् ॥ २६ ॥

மஹ்யம் ஸப்ராஹக்ருபயா
கவசம் ஸர்வஸித்திதம் ।
நதேயம் பக்திஹீநாய
தேயம் ச்ரத்தாவதே சுபம் ॥

எல்லாவற்றையும் அளிக்கும் இந்த கவசத்தை அவர் எனக்கும் சொன்னார். பக்தியில்லாதவனுக்கு இதைச் சொல்லாதே, சிரத்தையுடன் இருப்பவனுக்கே உபதேசிக்கவேண்டும் என்றார்.

यस्यानेन कृतारक्षा नबाधास्य भवेत्क्वचित् ।
राक्षसासुरवेतालदैत्यदानवसम्भवा ॥ २७ ॥

யஸ்யாநேந க்ருதாரக்ஷா
நபாதாஸ்ய பவேத் க்வசித் ।
ராக்ஷஸாஸுர வேதாள
தைத்யதாநவஸம்பவா ॥

இந்த கவசம் செய்யப்பட்டால் அவனுக்கு பிரம்மராக்ஷஸ வேதாளம் முதலிய எல்லாவித உபத்திரவங்களும் ஒரு இடத்திலும் ஒரு பொழுதும் உண்டாகாது.

இம்மாதிரி கணேச புராணத்தில் சொல்லப்பட்ட
கணேசகவசம் முற்றிற்று.

குறிப்பு :— இது முழுமுதற்கடவுளான விநாயகரைப் பற்றியது. இதை ஒரு குருவைக் கொண்டு உபதேசம் பெற்றால் எல்லாவிதமான தொந்தரவுகளும் நீங்கப்பெற்று மேன்மேலும் சிரேயஸ்ஸை அடைவார்கள்.

சிவமயம்

வேதவியாஸர் அருளிச்செய்த

ஸ்ரீ விச்வநாதாஷ்டகம்

॥ श्री विश्वनाथाष्टकम् ॥

தமிழ் உரை:

ஞான பாஸ்கர, சிவோத்கர்ஷவர்ஷக
பிரம்மஸ்ரீ **P. N.** நாராயண சாஸ்திரிகள்

गङ्गातरङ्गरमणीय जटाकलापं
गौरीनिरन्तरविभूषितवामभागम् ।
नारायणप्रियमनङ्गमदापहारं
वाराणसीपुरपतिं भज विश्वनाथम् ॥ १ ॥

கங்காதாங்கரமணீய ஜடாகலாபம்
கௌரீநிரந்தர விபூஷித வாமபாகம் ।
நாராயண ப்ரியமநங்க மதாபஹாரம்
வாராணஸீ புரபதிம் பஜ விச்வநாதம் ॥

கங்கையாற்றின் அலைகளால் அழகிய ஜடா முடியை உடையவரும் கௌரீ தேவியைத் தன் இடப் பாகத்தில் கொண்டவரும் நாராயணனிடத்தில் அன்பு கொண்டவரும் காமனது கொழுப்பை அடக்கியவரு மான காசியம்பதியில் உறையும் விச்வநாதனை வணங்கு.

वाचामगोचरमनेक गुणस्वरूपं
वागीशविष्णु सुरसेवितपादपीठम् ।
वामेन विग्रहवरेण कलत्रवन्तं
वाराणसीपुरपतिं भज विश्वनाथम् ॥ २ ॥

வாசாமகோசர மநேககுணஸ்வரூபம்
வாகீசவிஷ்ணு ஸுரஸேவித பாதபீடம் ।
வாமேநவிக்ரஹவரேண களத்ரவந்தம்
வாராணஸீ புரபதிம் பஜ விச்வநாதம் ॥

வாய்ச்சொற்களுக்கு எட்டாத பல குணங்களா லான உருவத்தை உடையவரும் நான்முகன் திருமால் தேவர்களால் வணங்கப்பெற்ற திருவடிகளை உடைய வரும் இடப்பாகத்தில் பாதி உருக்கொண்ட மனைவியை உடையவரும் காசி க்ஷேத்ரத்தலைவனுமான விச்வ நாதரை வணங்கு.

भूताधिपं भुजग भूषण भूषिताङ्गं
व्याघ्राजिनाम्बरधरं जटिलं त्रिणेत्रम् ।
पाशांकुशाभयवरप्रदशूलपाणिं
वाराणसीपुरपतिं भज विश्वनाथम् ॥ ३ ॥

பூதாதிபம் புஜக பூஷண பூஷிதாங்கம்
வ்யாக்ராஜிநாம்பரதரம் ஜடிலம் த்ரிணேத்ரம் ।
பாசாங்குசாபய வரப்ரத சூலபாணிம்
வாராணஸீ புரபதிம் பஜ விச்வநாதம் ॥

பூதக்கூட்டத்தலைவரும் பாம்புகளை அணிகலன்களாய்க் கொண்ட உடலை உடையவரும் புலித்தோலை அணிந்தவரும் ஜடையை உடையவரும் முக்கண்ணரும் பாசம் அங்குசம் வரதம் அபயம் சூலம் ஆகியவைகளைக் கையில் கொண்டவருமான காசியம்பதியில் உறையும் விச்வநாதரை வணங்கு.

शीतांशुशोभित किरीट विराजमानं
फालेक्षणाऽनलविशोषितपञ्चबाणम् ।
नागाधिपाऽरचितभासुरकर्णपूरं
वाराणसीपुरपतिं भजविश्वनाथम् ॥ ४ ॥

சீதாம்சு சோபித கிரீட விராஜமாநம்
பாலேக்ஷணாநல விசோஷிதபஞ்ச பாணம் ।
நாகாதிபாரசித பாஸுர கர்ணபூரம்
வாராணஸீபுரபதிம் பஜவிச்வநாதம் ॥

பிறைச்சந்திரனால் அழகியகிரீடத்தினால் விளங்குபவரும் நெற்றிக்கண்ணால் எரிக்கப்பட்ட காமனை உடையவரும் பாம்பினால் செய்யப்பட்ட காது அணிகலனை உடையவரும் காசியம்பதித் தலைவருமான விச்வநாதனை வணங்கு.

पञ्चाननं दुरितमत्तमतङ्गजानां
नागान्तकं दनुजपुङ्गवपन्नगानाम् ।

दावाऽनलं मरणशोकजराटवीनां
वाराणसीपुरपतिं भज विश्वनाथम् ॥ ५ ॥

பஞ்சாநநம் துரிதமத்த மதங்கஜாநாம்
நாகாந்தகம் தநுஜபுங்கவ பந்நகாநாம் ।
தாவாநலம் மரணசோகஜராடவீநாம்
வாராணஸீ புரபதிம் பஜ விச்வநாதம் ॥

பாவமாகிற கொழுத்த யானைக்கு சிங்கம் போன்றவரும் அரக்கர்களாகிற பாம்புகளுக்கு கருடனுயிருப்பவரும் இறப்பு, துயரம், கிழத்தன்மை ஆகிய காடுகளுக்கு காட்டுத் தீயானவருமான காசியம் பதியில் உறையும் விச்வநாதரை வணங்கு.

तेजोमयं सगुणनिर्गुणमद्वितीयं
आनन्दकन्दमपराजितमप्रमेयम् ।
नादात्मिकं सकलनिष्कलमात्मरूपं
वाराणसीपुरपतिं भजविश्वनाथम् ॥ ६ ॥

தேஜோமயம் ஸகுண நிர்க்குணமத்விதீயம்
ஆனந்தகந்தமபராஜித மப்ரமேயம் ।
நாதாத்மிகம் ஸகள நிஷ்களமாத்மரூபம்
வாராணஸீபுரபதிம் பஜவிச்வநாதம் ॥

ஒளியே உருவானவரும் குணத்தோடு கூடியவரும் குணமற்றவரும் இரண்டற்ற பரம்பொருளானவரும் நாதத்தின் உருவானவரும் கலை,கலையற்றது என்கிற ஆத்ம உருவானவரும் காசியம்பதியின் தலைவருமான விச்வநாதரை வணங்கு.

आशां विहायपरिहृत्यपरस्यनिन्दां
पापेरतिं च सुनिवार्यमनस्समाधौ ।
आदाय हृत्कमलमध्यगतं परेशं
वाराणसीपुरपतिं भज विश्वनाथम् ॥ ७ ॥

ஆசாம் விஹாய பரிஹ்ருத்ய பரஸ்யநிந்தாம்
பாபேரதிஞ்ச ஸுநிவார்ய மநஸ்ஸமாதௌ ।
ஆதாய ஹ்ருத்கமல மத்யகதம் பரேசம்
வாராணஸீபுரபதிம் பஜவிச்வநாதம் ॥

ஆசையைவிட்டு பிறரை தூஷிப்பதை நிறுத்தி பாபம் செய்வதை விட்டு மனதை ஸமாதியில் நிலைக்கச்செய்து தன் இருதய தாமரையில் வஸிக்கும் காசி விச்வநாதனை வணங்கு.

रागादिदोषरहितं स्वजनानुराग-
वैराग्यशान्तिनिलयं गिरिजासहायम् ।
माधुर्य धैर्यसुभगं गरलाभिरामं
वाराणसीपुरपतिं भज विश्वनाथम् ॥ ८ ॥

ராகாதி தோஷரஹிதம் ஸ்வஜநாநு ராக
வைராக்ய சாந்தி நிலயம் கிரிஜாஸஹாயம் ।
மாதுர்யதைர்ய ஸுபகம் கரளாபிராமம்
வாராணஸீபுரபதிம் பஜ விச்வநாதம் ॥

ஆசை முதலிய தோஷங்களற்று தன் ஜனங்களிடத்திலன்புடன் வைராக்யம் அமைதிக்கு இருப்பிடமாயும் மலையரசன் மகளுடன் கூடி இனிமையாயும்

தைர்யத்துடனும் கழுத்தில் விஷத்துடனும் விளங்குகிற காசிநாதனை வணங்கு.

वाराणसीपुरपतेः स्तवनं शिवस्य
व्यासोक्तमष्टकमिदं पठते मनुष्यः ।
विद्यां श्रियं विपुलसौख्यमनन्तकीर्तिं
संप्राप्य देहविलये लभते च मोक्षम् ॥ ९ ॥

வாராணஸீ புரபதே: ஸ்தவநம் சிவஸ்ய
வ்யாஸோக்தமஷ்டகமிதம் படதே மநுஷ்ய:
வித்யாம் ச்ரியம் விபுலஸௌக்யமநந்த கீர்த்திம்
ஸம்ப்ராப்யதேஹவிலயே லபதே ச மோக்ஷம் ॥

வியாஸமுனிவரால் இயற்றப்பட்ட காசிக்ஷேத்திரத்தலைவரான சிவபெருமானுடைய இந்த எட்டு சுலோகங்களை படிக்கும் மனிதன் படிப்பு செல்வம் குறைவற்ற ஸுகம் மாசில்லாத புகழ் இவைகளை அடைந்து உடல் போகும் ஸமயம் மோக்ஷமெனும் மேலான வீட்டை அடைவான்.

विश्वनाथाष्टकमिदं यः पठेच्छिवसन्निधौ ।
शिवलोकमवाप्नोति शिवेन सहमोदते ॥ १० ॥

விச்வநாதாஷ்டகமிதம்
ய: படேச்சிவஸந்நிதௌ ।
சிவலோகமவாப்நோதி
சிவேந ஸஹ மோததே ॥

விச்வநாதருடைய இந்த எட்டு சுலோகங்களை சிவபெருமானுடைய சந்நிதியில் படிப்பவன் சிவ

லோகம் அடைந்து சிவபெருமானோடு மகிழ்ச்சியுடனிருப்பான்.

காசிமாநகரமே மோக்ஷபுரி என்று பெயர் பெற்றது. அங்கு உடலை விடுபவர்களுக்கு விச்வநாதர் அருளால் மறுபிறவி கிடையாது. காசியையும் விச்வநாதரையும் நேரில் அடையமுடியாதவர்கள் வாயினாலேயே இரண்டையும் சொல்லிக்கொண்டிருந்தாலும் மோக்ஷம் கிட்டும் என்பது புராணங்களின் அசைக்கமுடியாத முடிவு. நான்கு புருஷார்த்தங்களை ஒருங்கே அளிக்க வல்ல பெருமை அந்த முக்கண்ணனுக்கே உண்டு. அசைவதும் அசையாததுமான இந்த எல்லாம் அவராலேயே நிறைந்திருக்கிறது என்று உபநிஷத் கூறுகிறது. க்ஷேத்ரம், தெய்வம், நதி எல்லாவற்றுலும் சிறந்து ஹிந்து மத மூலபுருஷரான வியாஸ முனிவரால் இயற்றப்பட்ட இந்தவிச்வநாதாஷ்டகம்என்னும் சிவன் துதி மிக மிக உயர்ந்தது என்று கூறவா வேண்டும். எல்லோரும் படித்துபயன்பெற்று பார்வதி ஸமேதனை பரமேசனின் அருள் நோக்கை அடைய வேண்டுகிறேன்.

சுபம்

உ

1. விநாயகர் ஸ்தோத்ர மாலை

2. காரிய சித்தி தரும் கணபதி ஸ்தோத்ரம்

மேற்கண்ட இரு நூல்களும் வேண்டுவோர் 20 காசுகள் தபால்தலை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்,

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா,
மேல மாம்பலம்—சென்னை-33.

உ

சிவமயம்

ஸ்காந்த மஹாபுராணம் சங்கரஸம்ஹிதை

ஹாலாஸ்ய மாஹாத்ம்யத்திலடங்கிய

ஸ்ரீ ஹாலாஸ்யேசாஷ்டகம்

॥ श्रीहालास्येशाष्टकम् ॥

தமிழ் உரை:

ஞானபாஸ்கர, சிவோத்கர்ஷவர்ஷக

பிரம்மஸ்ரீ **P. N.** நாராயண சாஸ்திரிகள்

शैलाधीशसुतासहाय सकलाम्नायान्तवेद्यप्रभो
शूलोग्राग्रविदारितान्धक सुरारातीन्द्रवक्षस्थल ।
कालातीतकलाविलासकुशल त्रायेत ते सन्ततं
हालास्येश कृपा कटाक्षलहरीमामापदामास्पदम् ॥ १ ॥

சைலாதீச ஸுதாஸஹாய
ஸகலாம்நாயாந்த வேத்யப்ரபோ
சூலோக்ராக்ரவிதாரிதாந்தக
ஸுராராதீந்த்ர வக்ஷஸ்தல ।
காலாதீத கலாவிலாஸ
குசல த்ராயேத தே ஸந்ததம்
ஹாலாஸ்யேச க்ருபாகடாக்ஷ லஹரீ
மாமாபதாமாஸ்பதம் ॥

மலையரசனின் மகளான உமையோடு கூடியவரே வேதசாஸ்திரங்களால் அறியப்படுகிற பிரபுவே, தேவர்களின் வைரியான அந்தகன் என்னும் அரக்கனைப் பிளந்த கூர்மையான சூலத்தை உடையவரே, காலத்தை வெல்கிற கலையைப் பரப்புகிறவரே, மதுரை மாநகரில் கோயில் கொண்டுள்ளவரே உன் கருணையாகிற வெள்ளப்பெருக்குடைய உன் கண்கள் ஆபத்திற்கெல்லாம் இருப்பிடமாயிருக்கும் என்னை எப்பொழுதும் காப்பாற்றட்டும்.

कोलाच्छछदरूप माधव सुरज्येष्ठादिदूरांघ्रिक-
नीलार्धाङ्ग निवेश निर्जरधुनी भास्वज्जटामण्डल ।
कैलासाचलवास कामदहन त्रायेत ते सन्ततं
हालास्येश कृपाकटाक्षलहरीमामापदामास्पदम् ॥ २ ॥

கோலாச்சச்சதரூப மாதவ
ஸுரஜ்யேஷ்டாதி தூராங்க்ரிக
நீலார்த்தாங்க நிவேச நிர்ஜரதுநீ
பாஸ்வஜ்ஜடாமண்டல ।
கைலாஸாசலவாஸ காமதஹந
த்ராயேத தே ஸந்ததம்
ஹாலாஸ்யேச க்ருபாகடாக்ஷலஹரீ
மாமாபதாமாஸ்பதம் ॥

வெண்மையான பற்களைக் கொண்ட பன்றி உருவான லக்ஷ்மியின் கணவரான திருமால், நான்முகன் முதலியவர்களாலும் அடையமுடியாத திருவடிகளை உடையவரே, உமையைப் பாதி உடலாய்க் கொண்டவரே, தேவநதியான கங்கையை முடியில் கொண்டவரே, கயிலை மலையில் வசிப்பவரே, காமனை எரித்தவரே, மதுரையம்பதியில் உறைகிறவரே,

கருணைவெள்ளப் பெருக்குடைய உன் கண்கள், ஆபத்திற்கிடமாயிருக்கும் என்னை எப்பொழுதும் காப்பாற்றட்டும்.

फालाक्षिप्रभवप्रभञ्जनसखप्रोद्यत्स्फुलिङ्गच्छटा
तूलानङ्गकचारुसंहननसन्मीनेक्षणावल्लभ ।
शैलादप्रमुखैर्गणैस्तुतगुण त्रायेत ते सन्ततं
हालास्येश कृपाकटाक्षलहरी मामापदामास्पदम् ॥ ३ ॥

பாலாக்ஷிப்ரபவ ப்ரபஞ்ஜநஸக
ப்ரோத்யத்ஸ்பு லிங்கச்சடா
தூலா நங்கக சாருஸம்ஹநந
ஸந்மீநேக்ஷணவல்லப ।
சைலாதப்ரமுகைர்கணைஸ்துதகுண
த்ராயேத தே ஸந்ததம்
ஹாலாஸ்யேச க்ருபாகடாக்ஷலஹரீ
மாமாபதாமாஸ்பதம் ॥

நெற்றிக் கண்ணிலிருந்து உண்டான அக்னி ஜ்வாலையினால் காமனை எரித்தவரே மீனாக்ஷியின் நாயகனும் நந்திகேச்வரர் முதலியவர்களால் துதிக்கப்பட்ட குணங்களையுடைய ஹாலாஸ்ய நாதரே, உன் கண் பார்வையின் கருணை வெள்ளம் ஆபத்து நிறைந்த என்னை எப்பொழுதும் காப்பாற்றட்டும்.

मालाकल्पितमालुधानफणसन्माणिक्य भास्वत्तनो
मूलाधारजगत्त्रयस्यमुरजिन्नेत्रारविन्दार्चित ।
सालाकारभुजासहस्रगिरिश त्रायेत ते सन्ततं
हालास्येश कृपाकटाक्षलहरी मामापदामास्पदम् ॥ ४ ॥

மாலாகல்பித மாலுதா நபணஸன்
மாணிக்ய பாஸ்வத்தநோ
மூலாதார ஜகத்ரயஸ்ய முரஜிந்
நேத்ராரவிந்தார்ச்சித ।
ஸாலாகார புஜா ஸஹஸ்ரகிரிச
த்ராயேத தே ஸந்ததம்
ஹாலாஸ்யேச க்ருபாகடாக்ஷலஹரி
மாமாபதாமாஸ்பதம் ॥

ஒளிவிடுகிற ரத்னங்களைத் தலையில் கொண்ட பாம்புகளை மாலையாகக் கொண்ட உடலையுடையவரே, மூவுலகிற்கும் ஆதாரமானவரே, முரன் என்னும் அரக்கனையழித்த திருமாலின் கண்ணுகிற தாமரையால் பூஜிக்கப்பட்டவரே, தேக்கு மரத்திற்கு ஒப்பான ஆயிரக்கணக்கான கைகளையுடைய மதுரை நாயகனுன உன் திருவிழிகளின் கருணை வெள்ளம் என்னை எப்பொழுதும் காப்பாற்றட்டும்.

बालादित्यसहस्रकोटि सदृशोद्यद्वेगवत्यापगा
वेलाभूमिविहारनिष्टविबुधस्रोतस्विनीशेखर ।
बालावर्ण्यकवित्व भूमिसुखद त्रायेत ते सन्ततं
हालास्येशकृपा कटाक्षलहरीमामापदामास्पदम् ॥ ५ ॥

பாலாதித்ய ஸஹஸ்ரகோடி
ஸத்ருசோத்யத்வேகவத்யாபகா
வேலாபூமி விஹாரநிஷ்ட
விபுதஸ்ரோதஸ்விநீ சேகர ।
பாலாவர்ண்ய கவித்வ பூமிஸுகத
த்ராயேத தே ஸந்ததம்
ஹாலாஸ்யேச க்ருபாகடாக்ஷலஹரி
மாமாபதாமாஸ்பதம் ॥

ஆயிரக்கணக்கான இளம் சூரியர்களின் ஒளிக் கொப்பானவரும், வைகை நதிக்கரையில் விளையாடுபவரும், தேவநதியான கங்கையை முடியில் கொண்டவரும், வர்ணிக்க முடியாத கவிதா சக்தியைக் கொடுக்கிற ஹாலாஸ்யக்ஷேத்ரதலைவருமான உன்கண்களின் கருணைவெள்ளம், ஆபத்து நிறைந்த என்னை எப்பொழுதும் காப்பாற்றட்டும்.

कीलालावनिपावकानिलनभश्चन्द्रार्कयज्वाकृते
कीलानेकसहस्रसंकुलशिखिस्तम्भ स्वरूपामित ।
चोलादीष्टगृहाङ्गनाविभवद त्रायेत ते सन्ततं
हालास्येश कृपाकटाक्षलहरी मामापदामास्पदम् ॥ ६ ॥

கீலாலாவநிபாவகாநில நபச்
சந்த்ரார்க யஜ்வாக்ருதே
கீலாநேக ஸஹஸ்ரஸங்குல சிகி
ஸ்தம்ப ஸ்வரூபாமித ।
சோளாதிஷ்ட க்ருஹாங்கநாவிபவத
த்ராயேத தே ஸந்ததம்
ஹாலாஸ்யேச க்ருபா கடாக்ஷலஹரீ
மாமாபதாமாஸ்பதம் ॥

ஜலம், பூமி, அக்நி, காற்று, ஆகாயம், சந்திரன், சூரியன், யஜமானன் ஆகிய எட்டு உருவானவரும், பிரளயகால ருத்ரனின் உருவானவரும், க்ருஹ ஸ்த்ரீகளுக்கு செல்வத்தைக் கொடுப்பவரும், மதுரைமாநகரில் உள்ளவருமான இறைவரே! உன் கண்விழிக் கருணை ஆபத்து நிறைந்த என்னைக்காப்பதாக.

लीलार्थाञ्जलिकमेव चरतां साम्राज्यलक्ष्मीप्रद-
स्थुलाशेष चराऽचरात्मकजगत्स्थूणाष्टमूर्तेगुरो ।

तालाङ्कानुज फल्गुनप्रियकर त्रायेत ते सन्ततं
हालास्येश कृपाकटाक्षलहरी मामापदामास्पदम् ॥ ७ ॥

லீலார்த்தாஞ்ஜலிகமேவ சரதாம்
ஸாம்ராஜ்ய லக்ஷ்மீப்ரத
ஸ்தூலாசேஷ சராசராத்மக ஜகத்
ஸ்தூணாஷ்ட மூர்த்தே குரோ ।
தாலாங்கானுஜ பல்குன ப்ரியகர
த்ராயேத தே ஸந்ததம்
ஹாலாஸ்யேச க்ருபாகடாக்ஷலஹரீ
மாமாபதாமாஸ்பதம் ॥

விளையாட்டாகவே கைகூப்பி வணங்கியவர்களுக்குப் பெரிய ராஜ்ய லக்ஷ்மியைக் கொடுப்பவரே, அசைவதும் அசையாததுமான எல்லா உலகையும் நிறைந்து எட்டு உருவமாய் விளங்குபவரே, அர்ஜுனனுக்கு அருள் புரிந்தவரே, மதுரைமாநகரில் உறையும் கடவுளே, ஆபத்து நிறைந்த என்னை உன் கண்களின் கருணை வெள்ளம் எப்பொழுதும் காப்பாற்றட்டும்.

हालास्यागत देवदैत्यमुनिभिर्गीतापदानक्वण-
ल्लीलाकोटिमनोहराङ्घ्रिकमलानन्दापवर्गप्रद ।
श्रीलीलाकरपद्मनाभवरद त्रायेत ते सन्ततं
हालास्येश कृपाकटाक्षलहरी मामापदामास्पदम् ॥

ஹாலாஸ்யாகத தேவதைத்யமுநிபிர்
கீதாபதாநக்வணல்
லீலாகோடி மனோஹராங்க்ரி
கமலாநந்தாபவர்கப்ரத ।

ஸ்ரீலீலாகர பத்மநாபவரத
த்ராயேத தே ஸந்ததம்
ஹாலாஸ்யேச க்ருபாகடாக்ஷலஹரீ
மாமாபதாமாஸ்பதம் ॥

மதுரை மாநகருக்கு வந்த தேவர், அரக்கர், முனிவர்களால் பாடப்பட்ட கதைகளால் திருவிளையாடல்களைக் கொண்டு திருவடித் தாமரைகளாலேயே, ஆனந்தம் மோக்ஷத்தையும் கொடுப்பவரே, லக்ஷ்மியின் இருப்பிடமான திருமாலுக்கு அருள் புரிபவரே, மதுரை மாநகர் உறைபவரே, ஆபத்து நிறைந்த என்னை உன் திருவிழிகளின் கருணைவெள்ளம் எப்பொழுதும் காப்பாற்றட்டும்.

लीलानादर मोहतः कपटतो यद्वाकदम्बाटवी
हालास्याधिपतीष्टमष्टकमिदं सर्वेष्टसन्दोहनम् ।
आलापानफलान्विहायसततं सङ्कीर्तयन्तीहते
तेलाक्षार्द्रपदाबलाभिरखिलान् भोगान् लभन्ते सदा ॥

லீலாநாதர மோஹத: கபடதோ
யத்வா கதம்பாடவீ
ஹாலாஸ்யாதிபதீஷ்டமஷ்டகமிதம
ஸர்வேஷ்டஸந்தோஹநம் ।
ஆலாபாநபலாந் விஹாய ஸததம்
ஸங்கீர்த்தயந்தீஹதே
தேலாக்ஷார்த்ர பதாபலாபிரகிலாந்
போகாந் லபந்தே ஸதா ॥

விளையாட்டாகவோ ஆதரவில்லாமலோ, கபடமாகவோ எப்படியாவது கதம்ப வனத்தில் உள்ள மதுரைமாநகர் உறையும் ஈசனின் இந்த எட்டு சுலோ

கங்கள் எல்லா இஷ்டத்தையும் கொடுப்பதை பிரயோஜனமில்லாத பேச்சுக்களை விட்டு எவன் இங்கு பாடுகிருனோ அவன் எல்லா போகங்களையும் ஒருங்கே அடைவான்.

குறிப்பு :- ஹாலாஸ்ய மாஹாத்மியத்தில் குண்டோதரன் செய்ததாய் சொல்லப்படுகிற இத்துதி மிக அரிய கருத்துக்களைக் கொண்டு விளங்குகிறது. இதைப் பக்தியுடன் படித்து மீனாக்ஷி ஸமேதனான ஸ்ரீஸுந்தரேசப் பெருமானின் அருளை அடைய வேண்டுகிறேன்.

உ

சிவமயம்

விபூதியும் ருத்ராக்ஷமும்

உபன்யாஸக சக்கரவர்த்தி, அம்ருதவாக்வர்ஷி,

பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்

அவர்கள் எழுதியது.

விபூதி ருத்ராக்ஷ மஹிமைகள் சுருதி, ஸ்ம்ருதி, புராண இதிஹாஸ பிரமாணங்களுடன் எழுதப்பட்டுள்ளது.

விலை. 40 காசுகள் — தபாலில் 50 காசுகள்

கிடைக்குமிடம்:

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

19, டெலிபோஸ்ட் காலனி 1வது தெரு,

மேலமாம்பலம், சென்னை-600033.

சிவமயம்

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர்கள் அருளிய

கௌரீ தசகம்

॥ गौरीदशकम् ॥

தமிழ் உரை:
ஞான பாஸ்கர, சிவோத்கர்ஷவர்ஷக
பிரம்மஸ்ரீ **P. N.** நாராயண சாஸ்திரிகள்

लीलालब्धस्थापितलुप्ताखिललोकां
लोकातीतैर्योगिभिरन्तश्चिरमृग्याम् ।
बालादित्यश्रेणिसमानद्युतिपुञ्जां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ १ ॥

லீலா லப்தஸ்தாபித லுப்தாகிலலோகாம்
லோகாதீதைர் யோகிபிரந்தச்சிர ம்ருக்யாம் ।
பாலாதித்யச்ரேணி ஸமான த்யுதி புஞ்ஜாம்
கௌரீமம்பாம்புருஹாக்ஷீமஹமீடே ॥

மறைந்து போன எல்லா உலகையும் விளையாட்டாகவே மறுபடி நிலைநிறுத்தியவளும், உலக விஷயங்களைத் தாண்டி நிற்கும் யோகிகளால் தேடப்படுகிற

வளும், இளஞ் சூரியனுக்கு ஒப்பான அழகுடையவ ளும், செந்தாமரைபோன்ற கண்களையுடைய தாயுமான கௌரியைத்துதிக்கிறேன்.

प्रत्याहारध्यान समाधिस्थितिभाजां
नित्यं चित्ते निर्वृतिकाष्ठां कलयन्तीम् ।
सत्यज्ञानानन्दमयीं तां तनुरूपां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ २ ॥

ப்ரத்யாஹாரத்யான ஸமாதிஸ்திதிபாஜாம்
நித்யம் சித்தே நிர்விருதிகாஷ்டாம் கலயந்தீம் ।
ஸத்யக்ஞானநந்தமயீம் தாம் தனுரூபாம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥

ப்ரத்யாஹாரம், த்யாநம், ஸமாதி நிலையை அடைந்த யோகிகளின் மனதில் நித்யம் அமைதியைத் தோற்றுவிப்பவளும், ஸத்யம், ஞாநம், ஆனந்தம் என்று உபநிடதங்களில் கூறப்பட்டுள்ள ப்ரம்மமாயும், உருவத்தோடு கூடியும், செந்தாமரைக்கண்களை உடைய தாயான கௌரியைத் துதிக்கிறேன்.

चन्द्रापीडानन्दितमन्दस्मितवक्त्रां
चन्द्रापीडालंकृतनीलालकभाराम् ।
इन्द्रोपेन्द्राद्यर्चितपादाम्बुजयुग्मां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ३ ॥

சந்த்ராபீடாநந்தித மந்தஸ்மித வக்த்ராம்
சந்த்ரா பீடாலங்க்ருத நீலாலக பாராம் ।
இந்த்ரோபேந்த்ராத்யர்சித பாதாம்புஜயுக்மாம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥

சந்திரன், நிலவு போன்ற புன் சிரிப்பும், பிறைச் சந்திரனை முடியில் கொண்டும், இந்திரன், வாமனர் முதலியோரால் வணங்கப்பட்ட திருவடிகளையுடைய செந்தாமரைக்கண்களை உடைய தாயான கௌரியைத் துதிக்கிறேன்.

आदिक्षान्तामक्षरमूर्त्या विलसन्तीं
भूते भूते भूतकदम्बप्रसवित्रीम् ।
शब्दब्रह्मानन्दमयीं तां तटिदाभां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ४ ॥

ஆதி க்ஷாந்தா மக்ஷர மூர்த்யா விலஸந்தீம்
பூதே பூதே பூதகதம்ப ப்ரஸவித்ரீம்
சப்தப்ரம்மானந்த மயீம் தாம் தடிதாபாம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீ மஹமீடே ॥

அ முதல் க்ஷ வரையான எழுத்து வடிவானவளும், ஒவ்வொரு படைப்பிலும் ஜீவர்களை உண்டு பண்ணுகிறவளும், சப்த ப்ரம்மம் என்கிற வேதவடிவானவளும், மின்னல் போன்ற காந்தியுடைய செந்தாமரைக் கண்களைக்கொண்ட தாயான கௌரியைத் துதிக்கிறேன்.

मूलाधारादुत्थितवीथ्या विधिरन्ध्रं
सौरं चान्द्रं व्याप्य विहारज्वलिताङ्गीम् ।
येयं सूक्ष्मात्सूक्ष्मतनुस्तां सुखरूपां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ५ ॥

மூலாதாராதுத்திதவீத்யா விதிரந்த்ரம்
ஸௌரம் சாந்த்ரம் வ்யாப்யவிஹாரஜ்வலிதாங்கீம் ।
யேயம் ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்மதனுஸ்தாம் ஸுகரூபாம்
கௌரீ மம்பாமம்புருஹாக்ஷீமஹ மீடே ॥

மூலாதாரத்திலிருந்து கிளம்பி பிரும்ம, விஷ்ணு, ருத்ர முடிச்சுகளை நீக்கி சூரிய, சந்திர கலைகளில் நிறைந்து, மிக மிக ஸூக்ஷ்மமாய் சுகமே வடிவான செந்தாமரைக் கண்களைக் கொண்ட தாயான கௌரியைத் துதிக்கிறேன்.

नित्यः शुद्धो निष्कल एको जगदीशः
साक्षी यस्याः सर्गविधौ संहरणे च ।
विश्वत्राणक्रीडनलोलां शिवपत्नीं
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ६ ॥

நித்ய : சுத்தோ நிஷ்கல ஏகோ ஜகதீச:
ஸாக்ஷீ யஸ்யா : ஸர்கவிதௌ ஸம்ஹரணே ச ।
விச்வத்ராணக்ரீடனலோலாம் சிவபத்னீம்
கௌரீ மம்பாமம்புருஹாக்ஷீமஹ மீடே ॥

எப்பொழுதுமுள்ளவனும் சுத்தனும் உருவற்றவனும் உலகிற்கு ஈசனும் ஒருவனுமான பரம் பொருள் உலகைப்படைத்து காத்தல் அழித்தல் என்னும் காரியங்களைச் செய்கிற உனக்கு ஸாக்ஷியாக இருக்கிறார். விளையாட்டாகவே இவ்வுலகைக் காப்பாற்றும் சக்தி உடைய சிவனின் மனைவியான செந்தாமரைக் கண்களைக் கொண்ட தாயான கௌரியைத் துதிக்கிறேன்.

यस्याः कुक्षौ लीनमखण्डं जगदण्डं
भूयो भूयः प्रादुरभूदुत्थितमेव ।
पत्या सार्धं तां रजताद्रौ विहरन्तीं
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ७ ॥

யஸ்யா: குக்ஷௌ லீனமகண்டம் ஜகதண்டம்
பூயோ பூய: ப்ராதுரபூதுத்திதமேவ
பத்யா ஸார்தம் தாம் ரஜதாத்ரௌ விஹரந்தீம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹ மீடே ॥

எவளுடைய வயிற்றில் ஸகல உலகங்களும் அடங்கியிருந்து பின்னர் வெளிவருகிறதோ, வெள்ளி மலையில் கணவருடன் வசிக்கின்ற அப்படிப்பட்ட தாயான செந்தாமரைக் கண்களையுடைய கௌரியைத் துதிக்கிறேன்.

यस्यामोतं प्रोतमशेषं मणिमाला
सूत्रे यद्वत्क्वापि चरं चाप्यचरं च ।
तामध्यात्मज्ञानपदव्या गमनीयां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ८ ॥

யஸ்யாமோதம் ப்ரோதமசேஷம் மணிமாலா
ஸூத்ரே யத்வத்க்வாபி சரம் சாப்யசரம் ச ।
தாமத்யாத்ம ஞானபதவ்யா கமனீயாம்
கௌரீ மம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥

கயிற்றில் கோர்க்கப்பட்ட மணிமாலை போல் அசைவதும் அசையாததுமான உலகம் அனைத்தும் எவளிடத்தில் நிலைத்து இருக்கிறதோ, அப்படிப்பட்ட

ஆத்ம ஞானத்திஞல் மட்டும் அடையத்தக்க செந்தாமரைக் கண்களைக் கொண்ட தாயான கௌரியைத் துதிக்கிறேன்.

नानाकारैः शक्तिकदम्बैर्भुवनानि
व्याप्य स्वैरं क्रीडति येयं स्वयमेका ।
कल्याणीं तां कल्पलतामानतिभाजां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ९ ॥

நாநாகாரை: சக்தி கதம்பைர்புவஞனி
வ்யாப்ய ஸ்வைரம் க்ரீடதி யேயம் ஸ்வயமேகா
கல்யாணீம் தாம் கல்பலதாமானதி பாஜாம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥

பலவிதமான சக்திக் கூட்டங்களிஞல் உலகில் நிறைந்து ஒரே உருவாய் விளங்குகிற கல்யாணியாயும் வணங்குகிறவர்களுக்கு கல்பதரு மாதிரி வேண்டியதைக் கொடுக்கும் செந்தாமரைக் கண்களைக் கொண்ட தாயாயுமுள்ள கௌரியைத்துதிக்கிறேன்.

आशापाशक्लेशविनाशं विदधानां
पादाम्भोजध्यानपराणां पुरुषाणाम् ।
ईशामीशार्धाङ्गहरां तामभिरामां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ १० ॥

ஆசாபாச க்லேசவிஞசம் விததாஞம்
பாதாம்போஜத்யான பராஞம் புருஷாஞம்
ஈசாமீசார்தாங்கஹராம் தாமபிராமாம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹ மீடே

ஆசையாகிற கட்டினால் ஏற்படுகிற துயரங்களை ஒழித்து திருவடிகளில் வணங்குகிறவர்களுக்கு நன்மையைச் செய்கிற ஈச்வரியும், ஈசனின் பாதி உடலைப் பெற்றவளும் மிக அழகானவளுமான செந்தாமரைக் கண்களைக் கொண்ட தாயான கௌரியைத் துதிக்கிறேன்.

प्रातः काले भावविशुद्धः प्रणिधानात्
भक्त्या नित्यं जल्पति गौरीदशकं यः ।
वाचां सिद्धिं संपदमग्र्यां शिवभक्तिं
तस्यावश्यं पर्वतपुत्री विदधाति ॥ ११ ॥

ப்ராத : காலே பாவ விசுத்த : ப்ரணிதானாத்
பக்த்யா நித்யம் ஜல்பதி கௌரீ தசகம் ய:
வாசாம் ஸித்திம் ஸம்பத மக்ர்யாம் சிவபக்திம்
தஸ்யாவச்யம் பர்வதபுத்ரீ விததாதி

எவனொருவன் காலையில் தூயமனதுடன் பக்தியோடு இந்த கௌரீதசகத்தைப் படிக்கிறானோ அவனுக்கு நல்ல வாக் ஸித்தியும், நிறைந்த செல்வமும், சிவ பக்தியும், பர்வத ராஜ குமாரியான கௌரீ தேவி கொடுத்து அருள்புரிகிறாள்.

---

1. ஜகத்குரு மங்களாசாசனம்
2. குருர்தேவோ மஹேச்வர:

இவ்விரு இலவச வெளியீடுகளும் வேண்டுபவர் 15 காசுகள் தபால் தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா,
மேல மாம்பலம், சென்னை-33.

॥ श्रीः ॥

ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத் பாதாசார்யர்கள் அருளிய

ஸாம்ப பரப்ரம்ம ஸ்தோத்ரம் என்கிற

தசச்லோகீஸ்துதி:

॥ दशश्लोकीस्तुतिः ॥

தமிழ் விரிவுரை:

ஸ்ரீசங்கரனன்பர்க்கடிமை, ஸ்ரீசங்கரபாதசேகரன்

சிவபுராண ஞானபூஜகர்

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

साम्बो नः कुलदैवतं पशुपते साम्ब त्वदीया वयं
साम्बं स्तौमि सुरासुरोरगगणाः साम्बेन सन्तारिताः ।
साम्बायास्तु नमो मया विरचितं साम्बात्परं नो भजे
साम्बस्यानुचरोऽस्म्यहं मम रतिः साम्बे परब्रह्मणि ॥ १ ॥

ஸாம்போ ந: குலதைவதம் பசுபதே
ஸாம்ப த்வதீயா வயம்
ஸாம்பம் ஸ்தௌமி ஸுரா
ஸுரோரககணா: ஸாம்பேந ஸந்தாரிதா: ।

ஸாம்பாயாஸ்து நமோ மயா விரசிதம்
ஸாம்பாத் பரம் நோபஜே
ஸாம்பஸ்யானுசரோஸ்ம்யஹம்
மமரதி: ஸாம்பே பரப்ரம்மணி ॥

ஸாம்பன் எங்கள் குலதெய்வம். பசுபதியாகிய ஸாம்ப! நாங்கள் உன்னைச் சேர்ந்தவர்கள். ஸாம்பனை ஸ்தோத்ரம் செய்கிறேன். ஸாம்பனால் தேவர்கள், அஸுரர்கள், நாகர்கள் முதலியவர்களின் கூட்டங்கள் நற்கதி அடைவிக்கப்பட்டார்கள். என்னால் செய்யப்படும் இந்த நமஸ்காரம் ஸாம்பனுக்கு இருக்கட்டும். ஸாம்பனிற் பிறரை நான் ஸேவிக்கமாட்டேன். நான் ஸாம்பனுடைய வேலைக்காரனாக இருக்கின்றேன். பரப்ரம்மஸ்வரூபமான ஸாம்பனிடத்தில் எனக்கு அன்பு இருக்கட்டும்.

விளக்கம் :— 'ஸாம்பன்' என்பது 'அம்பிகையோடு கூடிய பரமசிவன்' என்று பொருள்படும். ஸாம்பன் என்று வரும் இடங்களிலெல்லாம் இம்மாதிரியே பொருள் கொள்க. இந்த ஸ்தோத்திரத்தில் ஸாம்பன் என்ற பதம் முதல் வேற்றுமையிலிருந்து எட்டாம் வேற்றுமை வரை வருவதைக் காண்க.

1. ஸாம்ப: - ஸாம்பன் - முதல் வேற்றுமை
2. ஸாம்பம் - ஸாம்பனை - இரண்டாம் வேற்றுமை
3. ஸாம்பேன - ஸாம்பனால் - மூன்றாம் வேற்றுமை
4. ஸாம்பாய - ஸாம்பனுக்கு - நான்காம் வேற்றுமை
5. ஸாம்பாத் - ஸாம்பனில் (ஸாம்பனைத் தவிர) ஐந்தாம் வேற்றுமை

6. ஸாம்பஸ்ய - ஸாம்பனுடைய - ஆரும் வேற்றுமை.

7. ஸாம்பே - ஸாம்பனிடத்தில் - ஏழாம் வேற்றுமை.

8. பசுபதே ஸாம்ப - பசுபதியாகிய ஸாம்பனே! எட்டாம் வேற்றுமை (விளி)

அகாரத்தை இறுதியாக உடைய ஆண்பாற் பெயருக்கு (அகாராந்த புல்லிங்கம்) வேற்றுமைகள் சொல்லிக் கொடுப்பவர்கள் இனியாகிலும் ஸாம்ப சப்தம் சொல்லி வைத்து இளமையிலேயே சிவபக்தியைச் சிறுவர்களுக்கு ஊட்டுவார்கள் என நம்புகிறேன்.

विष्ण्वाद्याश्च पुरत्रयं सुरगणा जेतुं न शक्ताः स्वयं
यं शम्भुं भगवन्वयं तु पशवोऽस्माकं त्वमेवेश्वरः ।
स्वस्वस्थाननियोजिताः सुमनसः स्वस्था बभूवुस्ततः
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ २ ॥

விஷ்ண்வாத்யாச்ச புரத்ரயம்
ஸுரகணு ஜேதும் ந சக்தா: ஸ்வயம்
யம் சம்பும் பகவன்வயம் து
பசவோऽஸ்மாகம் த்வமேவேச்வர: ।
ஸ்வஸ்வஸ்தான நியோஜிதா:
ஸுமனஸ: ஸ்வஸ்தா பபூவுஸ்தத:
தஸ்மின்மே ஹ்ருதயம் ஸுகேன
ரமதாம் ஸாம்பே பரப்ரம்மணி ॥

விஷ்ணு முதலிய தேவர்கள் தாங்களாக திரிபுர ஸம்ஹாரம் செய்யச் சக்தியற்றவர்களாக இருந்ததனுல் எந்த சம்புவாகிய பரமேச்வரனைச் சரண

மடைந்து, 'ஸகல ஐச்வர்யங்களும் நிறைந்த பக வானே! நாங்களோ பசுக்கள். எங்களுக்கெல்லாம் நீரே அடக்கியாளக்கூடிய திறன் வாய்ந்த ஈச்வரன்' என்று சரணமடைந்த பிறகு (அந்தத் திரிபுரர்கள் பரமசிவனால் ஸம்ஹரிக்கப்பட்டபடியால்) விஷ்ணு முத லிய தேவர்கள் அவரவர் ஸ்தானங்களில் முன்போல் வைக்கப்பட்டவர்களாக மனக்கவலையற்று சுகமாக இருந்தார்களோ அந்த பரப்ரம்மஸ்வரூபமான ஸாம்ப னிடத்தில் என்னுடைய மனம் இன்பத்துடன் விளை யாடட்டும் (அதாவது இன்புற்றிருக்கட்டும்)

விளக்கம் :— முன்பொரு காலத்தில் திரிபுரர் கள் என்ற அசுரர்கள் மூவுலகையும் ஜெயித்து, இரும்பு, பொன், வெள்ளி ஆகிய மூன்று பட்டினங்கள் வடிவ மாக உலகங்களைப் பீடித்து அழித்து வந்தபோது அவர்களை ஸம்ஹரிக்க விஷ்ணு முதலிய தேவர்கள் சக்தியற்றவர்களாக இருந்தார்கள். அவர்களெல்லோ ரும் ஒன்றுகூடி, பரமசிவன் ஒருவர்தான் திரிபுரர்களை வெல்லக்கூடியவர் என்று தீர்மானித்து அப்பெரு மானைச் சரணடைத்து, "நாங்கள் பசுக்கள்; தேவரீர் எங்களுக்கெல்லாம் தலைவர். அதாவது பசுபதி. எங் களைக் காக்கவேண்டும்'' என்று முறையிட்டார்கள். அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட பரமசிவனும் திரிபுர ஸம்ஹாரம் செய்து விஷ்ணுவாதி தேவர்களை அவரவர்களது ஸ்தானங்களில் நிலைபெறச் செய்தார். தேவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அஸுரர் களாலேயோ மற்றவர்களாலேயோ இடர்கள் நேரும் போது பரமசிவனே அவர்களைக் காப்பாற்றுபவர் என் பது இவ்வரலாற்றினின்று தெரிகிறது. பசுக்கள் என்பது தங்களுடைய நன்மை தீமைகளைக்கூட அறி வதற்கு விசேஷ அறிவில்லாத உயிர்க்கூட்டங்கள். பிரம்ம விஷ்ணுவாதி தேவர்களெல்லாம் பசுக்களே யாவர். பரமேச்வரன் ஒருவரே பதி. வேதத்தில்

பசுபதி என்று பரமேச்வரனே கூறப்பட்டுள்ளார், (ஸ்ரீ ருத்ரம் காண்க) அப்படிப்பட்ட பசுபதியான பரமேச்வரனிடத்தில் நம் உள்ளம் நிலைத்து, அதனால் ஏற்படும் சிவானந்த வெள்ளத்தில் திளைக்கவேண்டும் என்பது இச்சுலோகத்தின் கருத்து.

இந்த திரிபுர ஸம்ஹார வரலாறு 'தேஷாமஸுராணாம்' என்று ஆரம்பிக்கும் யஜுர் வேத மந்திரத்திலும் கூறப்படுகிறது. மற்றும் கந்தபுராணத்துள் தக்ஷகாண்டம் ததீசியுத்தரப் படலத்திலும் காணலாம்.

क्षोणी यस्य रथो रथाङ्गयुगलं चन्द्रार्कबिम्बद्वयम्
कोदण्डः कनकाचलो हरिरभूद्बाणो विधिः सारथिः ।
तूणीरो जलधिर्हयाः श्रुतिचयो मौर्वी भुजङ्गाधिपः
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ ३ ॥

க்ஷோணீ யஸ்ய ரதோ ரதாங்க
யுகலம் சந்த்ரார்க்க பிம்பத்வயம்
கோதண்ட: கனகாசலோ
ஹரிரபூத்பாணோ விதி: ஸாரதி: ।
தூணீரோ ஜலதிர் ஹயா:
ச்ருதிசயோ மௌர்வீ புஜங்காதிப:
தஸ்மின் மே ஹ்ருதயம் ஸுகேன
ரமதாம் ஸாம்பே பரப்ரம்மணி ॥

திரிபுர ஸம்ஹாரம் செய்யப் புறப்பட்ட போது எந்த பரமேச்வரனுக்கு பூமி ரதமாகவும், சந்திர சூர்யர்கள் இரண்டு சக்கரங்களாயும், பொன்மலையாகிற மேரு பர்வதம் வில்லாகவும், திருமால் அம்பாகவும், பிரம்ம தேவன் தேரோட்டியாகவும், ஸமுத்திரம் அம்பறுத்தூணியாகவும் நான்கு வேதங்களே குதிரைகளாகவும்,

நாகராஜனாகிய வாசுகி நாண்கயிருகவும் அமைந்ததோ அப்படிப்பட்ட ஸாம்ப பரமேச்வரனிடத்தில் என்னுடைய உள்ளம் இன்பத்துடன் விளையாடட்டும்.

விளக்கம் :— திரிபுர ஸம்ஹாரத்தின் போது தாங்களும் பயன்படவேண்டுமென்று பிரம்மவிஷ்ணுவாதி தேவர்கள் போர்க்குரிய ஸாதனங்களாக ஆனார்கள். தங்கள் ஸஹாயத்தால்தான் பரமசிவன் திரிபுர ஸம்ஹாரம் செய்யப்போவதாக அகந்தையடைந்தார்கள். ஆனால், பரமேச்வரன் அவர்கள் ஸஹாயமில்லாமலேயே தமது சிரிப்பின் மூலமே திரிபுரங்களை எரித்தார் என்பது புராண வரலாறு.

येनापादित मङ्गजाङ्गभसितं दिव्याङ्गरागैः समं
येन स्वीकृतमब्जसंभवशिरः सौवर्णपात्रैः समम् ।
येनाङ्गीकृतमच्युतस्य नयनं पूजारविन्दैः समं
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ ४ ॥

யேனாபாதித மங்கஜாங்க பஸிதம்
திவ்யாங்கராகை: ஸமம்
யேன ஸ்வீக்ருதமப்ஜஸம்பவ சிர:
ஸௌவர்ண பாத்ரை: ஸமம் ।
யேனாங்கீக்ருதமச்யுதஸ்ய
நயனம் பூஜாரவிந்தை: ஸமம்
தஸ்மின்மே ஹ்ருதயம் ஸுகேன
ரமதாம் ஸாம்பே பரப்ரம்மணி ॥

எந்தப் பரமசிவனால் விஷ்ணு புத்ரனான மன்மதன் சாம்பலாக்கப்பட்டானே எவரால் அந்த சாம்பல் தேவலோகத்திய சந்தனாதித்ரவ்யங்களோடு சமமாகச் செய்யப்பட்டதோ, எவரால் பிரம்மதேவனுடைய

தலை கொய்யப்பட்டுத் தங்கப்பாத்திரங்களுக்குச் சமான மான பிக்ஷாபாத்திரமாக எடுத்துக்கொள்ளப்பட்டதோ எவரால் மஹாவிஷ்ணுவின் கண்ணானது பூஜைக்குரிய தாமரைப்புஷ்பத்துக்குச் சமானமாக ஏற்றுக்கொள்ளப் பட்டதோ அப்படிப்பட்ட பரப்ரம்ம ஸ்வரூபமான ஸாம்ப பரமேச்வரனிடத்தில் என் உள்ளம் இன்ப மாக என்றும் விளையாடிக்கொண்டிருக்கட்டும்.

விளக்கம் :— பரமசிவன் தக்ஷிணாமூர்த்தியாக ஸனகர், ஸனந்தனர், ஸனத்குமாரர், ஸனாதனர் என்ற நான்கு முனிவர்கட்கு ஞானோபதேசம் செய்துகொண் டிருந்தபோது, அம்பிகையானவள் ஹிமவான் மகளாக அவதரித்து பார்வதி என்னும் பெயருடன் பரமனைப் பதியாக அடையத் தவம் செய்துவந்தாள்; இவ்விதம் யோக நிலையிலிருந்த பரமனின் மனதைப் பார்வதி யிடம் ஈடுபடச் செய்ய தேவர்கள் ஏவலால் மன்மதன் அவர்மீது புஷ்ப பாணங்களை எய்தான். அப்போது இறைவர் தன் நெற்றிக் கண்ணைச் சிறிதே திறக்க, மன்மதன் சாம்பலானான் என்பது கந்தபுராண வர லாறு. பார்வதி கல்யாணம் நடைபெற்ற பிறகு அம் மன்மதனைப் பரமசிவனே பிழைத்தெழச் செய்து அவன் மனைவிக்கு மட்டும் உருவத்துடனிருந்து கொண்டு, மற்றவரிடத்தில் அருவத்துடனேயே தன் தொழிலைச் செய்து கொண்டிருக்கட்டும் என விதித் தார். இங்ஙனம் சிவபெருமானால் எரிக்கப்பட்ட தன் புத்திரனைக் காக்கத் திருமாலாலும் முடியவில்லை என் பது ஈண்டு நோக்கத் தக்கது.

ஒரு சமயம் ஐந்து தலைகளோடு பிரம்மதேவன் இருந்தபோது, உச்சித் தலையானது சிவபெருமானை இகழ்ந்தது, உடனே பரமசிவன் பைரவரைக்கொண்டு உச்சித் தலையைக் கொய்தருளினார். செருக்குற்றிருந்த

தேவர்களின் அகந்தையை அடக்குவதற்காக அத்தலை யோட்டினைக்கொண்டு தேவர்களிடம் ரத்த பிக்ஷை பெறுமாறு பைரவரைப் பணித்தார்.

ஒரு சமயம் பரமசிவன் ஜலந்தரன் என்ற அசுரனை ஸம்ஹரிப்பதற்காக தமது கால் பெரு விரலினால் ஒரு சக்கரம் செய்து அதையே சக்கராயுதமாக மாற்றினார். ஜலந்தராசுரன் அச்சக்கரத்தைத் தூக்கித் தலை மீது வைத்துக் கொண்டபோது அது அவனை ஸம்ஹரித்தது. அத்தகைய அரிய சக்கரத்தைச் சிவ பெருமானிடமிருந்து திருமால் பெற விரும்பினார். அதற்காகப் பக்தியுடன் நாள்தோறும் ஆயிரம் மலர்களால் சிவலிங்கத்தை அர்ச்சித்து வழிபட்டு வந்தார். ஒரு நாள் அவருக்கு அனுக்ரஹம் புரிய விரும்பிய இறைவன், பூஜைக்குரிய மலர்களில் ஒன்றை மறைத்துவிட, திருமால் தமது ஒரு கண்ணையே மலராக எடுத்து அருச்சித்து வழிபட, அதற்கு மகிழ்ந்து இறைவன் பிரசன்னராகி அவர் வேண்டியபடி சுதர்சனம் என்ற பெயருள்ள சக்கராயுதத்தையும் அவருக்களித்து அனுக்ரஹம் செய்தார்.

மேற்படி வரலாறுகளில் மன்மதனைப் பற்றியதைக் கந்தபுராணம் உற்பத்திக் காண்டம் காமதகனப் படலத்தும், மற்றையவைகளை அதே புராணம் தக்ஷகாண்டம் ததீசி யுத்தரப் படலத்தும் காண்க. சிவ பெருமானே எல்லாத் தேவர்களையும் அடக்கியாள வல்லவன் என்பது இந்த சுலோகத்தின் கருத்து.

गोविन्दादधिकं न दैवतमिति प्रोच्चार्य हस्तावुभौ
उद्धृत्याथ शिवस्य संनिधिगतो व्यासो मुनीनां वरः ।
यस्य स्तम्भितपाणिरानतिकृता नन्दीश्वरेणाभवत्
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ ५ ॥

கோவிந்தாததிகம் ந தைவத மிதி
ப்ரோச்சார்ய ஹஸ்தாவுபௌ
உத்ருத்யாத சிவஸ்ய ஸந்நிதி
கதோ வ்யாஸோமுனீனும் வர:।
யஸ்ய ஸ்தம்பித பாணிரா நதிக்ருதா
நந்தீச்வரேணபவத்
தஸ்மின் மே ஹ்ருதயம் ஸுகேன
ரமதாம் ஸாம்பேபரப்ரம்மணி ॥

மஹரிஷிகளுக்குள் சிறந்த வியாஸ முனிவரானவர் எந்த சிவஸன்னதியிலிருந்துகொண்டு தனது இரண்டு கரங்களையும் உயரத் தூக்கி கோவிந்தனைக் காட்டிலும் மேலான தெய்வம் இல்லையென்று சொல்லி, பிறகு இறைவனைப் பணியாதவர்களைப் பணியவைக்கும் நந்தீச்வரனுல் அசைவற்றுத் தூக்கியவாறு இருக்கும்படிச் செய்யப்பட்ட கைகளையுடையவராக இருந்தாரோ அப்படிப்பட்ட பரப்ரம்ம ஸ்வரூபமான ஸாம்ப பரமேச்வரனிடத்தில் என் மனம் இன்பத்துடன் ரமிக்கட்டும்.

விளக்கம் :— வேதங்களை வகுத்தும் அதன் கருத்துக்களை 18 புராணங்களாகவும் மஹாபாரதம் என்னும் இதிஹாஸமாகவும் இயற்றியவர் வியாஸ மஹரிஷி. இவர் விஷ்ணுவின் அம்சம்; 18 புராணங்களில் 10 புராணங்களைச் சிவபரமாகச் செய்திருந்தும் மோஹத்தினுல் மதிமயங்கி வியாஸரானவர் சிவஸன்னிதியில் அபத்தமான வார்த்தைகளைப் பேசினுர். அதன் பயனுக நந்தியெம்பெருமானுல் தண்டிக்கப்பட்டார். சிவபெருமானின் பரத்துவத்திற்கு நந்தியெம்பெருமானுல் அசைவற்றிருக்கும்படிச் செய்யப்பட்ட வியாஸ முனிவரின் கரங்களே ஒரு சாட்சியமாக அமைந்தது. இந்த வரலாறு கீழ்க்கண்ட இரு கந்த

புராணச் செய்யுட்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை காண்க.

''ஐயிரு புராண நூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்''

(திருநந்திதேவர் வாழ்த்து)

''பையராவின்மேற் கண்டுயில் பண்ணவன்
றனக்குந்
தையல் பாதிய னேபரம் பொருளெனுந் தன்மை
மையல் மானுடர் உணர்ந்திடமறை முனியெடுத்த
கைய தேயுரைத் திட்டதோர் காசியைக்
கண்டான்''

(வழி நடைப்படலம்)

आकाशश्चिकुरायते दशदिशाभागो दुकूलायते
शीतांशुः प्रसवायते स्थिरतरानन्दः स्वरूपायते ।
वेदान्तो निलयायते सुविनयो यस्य स्वभावायते
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ ६ ॥

ஆகாசச்சிகுராயதே தசதிசா
பாகோ துகூலாயதே
சீதாம்சு: ப்ரஸவாயதே
ஸ்திரதரானந்த: ஸ்வரூபாயதே।
வேதாந்தோ நிலயாயதே
ஸுவிநயோ யஸ்ய ஸ்வபாவாயதே
தஸ்மின்மே ஹ்ருதயம் ஸுகேன
ரமதாம் ஸாம்பே பரப்ரம்மணி॥

எந்த பரமேச்வரனுக்கு ஆகாசம் கேசமாக அமைந்திருக்கிறதோ, பத்து திக்குகளும் வஸ்த்ரம் போல் இருக்கின்றனவோ, குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரன் புஷ்பம்போல் இருக்கிறனோ, நிலைபெற்ற ஆனந்தமே தன்னுடைய உருவமாக இருக்கின்றதோ, உபநிஷத்துக்களே வாசஸ்தலமாக இருக்கின்றதோ, தேவர்களால் செய்யப்படுகிற வணக்கமே இயற்கையாக அமைந்துள்ளதோ அப்படிப்பட்ட பரப்ரம்மஸ்வரூபியான ஸாம்ப பரமேச்வரனிடத்தில் என் மனம் இன்பத்துடன் ரமிக்கட்டும்.

விளக்கம் :— பரமேச்வரன் அங்கிங்கெனுதபடி பரம்பொருளாய் எங்கும் வீற்றிருப்பவர். ஆகையால் அவருக்கு ஆகாயமே தலைமயிராகச் சொல்லப்படுகிறது. 'வ்யோமகேசன்' என்ற திருநாமமும் இதனை வலியுறுத்தும். திகம்பரன் என்னும் திருநாமம் அவர் திக்குகளையே ஆடையாகக் கொண்டவர் என்பதைத் தெரிவிக்கிறது. சந்திரசேகரன், சந்திரமௌலீ என்ற திருநாமங்களும், மதிசூடி, பிறைசூடி, மாதர்பிறைக் கண்ணியான் என்பன போன்ற தேவார வாக்குகளும் எம்பெருமான் தலையில் சந்திரனைப் புஷ்பம்போல் தரித்திருக்கிறர் என்பதைக் காட்டுகின்றன. மேலும் ஆகாசம் சிகையாக அமைந்ததால், அவ்வாகாயத்தில் உள்ள சந்திரன் சிகையில் சூடும் மலர் போன்றவன் என்பதும் பொருத்தமே. பரப்ரம்மஸ்வரூபமானது ஸத், சித், ஆனந்தவடிவமானது என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளபடியால் இங்கு நிலைபெற்ற பேரானந்தத்தையே பரமசிவனுடைய ஸ்வரூபமாக வர்ணிக்கப்பட்டுள்ளது. 'ஆனந்தோ ப்ரஹ்மேதி வ்யஜனத்' என்ற தைத்திரிய உபநிஷத் வாக்யமும் இங்கு கருதற்குரியது. ஸகல உபநிஷத்துக்களின் ஸாரம் சிவதத்வமாகையால் உபநிஷத்துக்களே சிவபெருமானின் இருப்பிடம் என்று சொல்லப்படுகிறது.

वेदान्तेषु यमाहुरेकपुरुषं व्याप्य स्थितं रोदसी
यस्मिन्नीश्वर इत्यनन्यविषयो शब्दो यथार्थाक्षरः ।
अन्तर्यश्च मुमुक्षुभिर्नियमितप्राणादिभिर्मृग्यते
स स्थाणुः स्थिरभक्तियोग सुलभो निःश्रेयसायास्तु वः ॥

என்ற காளிதாசனின் ஸ்தோத்ரமும் இங்கு ஒப்பு நோக்கற்குரியது. தேவர்கள் எப்பொழுதும் பரமசிவன் திருவடிகளில் தங்கள் மணிமுடிகள் தோய வணங்கும் இயல்புடையவர்கள் என்பது कथं पश्येयं मां स्थगयति नमः संभ्रमजुषां निलिम्पानां श्रेणिः निजकनक-माणिक्य मकुटैः என்ற சிவானந்த லஹரி ஸ்லோகத்தால் அறியப்படும்.

विष्णुर्यस्य सहस्रनामनियमादम्भोरुहाण्यर्चयन्
एकोनोपचितेषु नेत्रकमलं नैजं पदाब्जद्वये ।
सम्पूज्यासुरसंहतिं विदलयंस्त्रैलोक्यपालोऽभवत्
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ ७ ॥

விஷ்ணுர்யஸ்ய ஸஹஸ்ர நாம
நியமாதம்போருஹாண்யர்சயந்
ஏகோநோபசிதேஷு நேத்ர
கமலம் நைஜம் பதாப்ஜ த்வயே ।
ஸம்பூஜ்யா ஸுர ஸம்ஹதிம்
விதலயம்ஸ்த்ரைலோக்ய பாலோऽபவத்
தஸ்மின் மே ஹ்ருதயம் ஸுகேன
ரமதாம் ஸாம்பே பரப்ரம்மணி ॥

எந்த பரமசிவனுடைய பாதத்தாமரைகளில் மஹா விஷ்ணுவானவர் ஸஹஸ்ரநாம அர்ச்சனை நியமத்தில் தாமரை மலர்களை அர்ச்சித்துக்கொண்டு வருகையில் சிவ சங்கல்பத்தால் ஒரு புஷ்பம் குறைந்தபோது, தன்னுடைய கண்ணாகிற தாமரையை எடுத்துப் பூஜை

செய்து (அதன்மூலம் சக்கராயுதத்தைப் பெற்று) அஸுரக் கூட்டத்தை அழித்து, மூன்று உலகிற்கும் காவற்கடவுளாக ஆனரோ, அந்த பரப்ரம்மஸ்வ ரூபமான ஸாம்ப பரமேச்வரனிடத்தில் என் ஹிருதய மானது அன்புடன் நிலேத்திருக்கட்டும்.

விளக்கம் :— தாமரை மலருக்குப் பதிலாகக் கண்ணே அர்ச்சித்ததாலேயே திருமாலுக்குத் தாமரைக் கண்ணன் என்ற பெயர் ஏற்பட்டது. அரவிந்தாக்ஷன், புண்டரீகாக்ஷன் என்பன போன்ற நாமங்களே நோக்குக. திருமால் தன் கண்ணேயே தாமரை மலராக அர்ச்சித்த வரலாறு 4வது சுலோகம் விளக்கவுரையில் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வரலாற்றினே வலியுறுத் தும் சில பாடல்களேக் கீழே கொடுத்துள்ளோம்.

"அவன்சலந் தரனேவிட்டும் ஆழியை வாங்கப் பன்னள்
சிவன்கழல் வழிபட் டோர்நாள் செங்கணே மலராச் சாத்த
உவந்தனன் விடைமேல் தோன்றி அப்படை உதவப் பெற்று
நிவந்தனன் அதனல் வையம் நேமியான் என்ப மாதோ.

(ததீசியுத்தரப் படலம்—297: கந்தபுராணம்)

"பாராழி வட்டம் பகையால் நலிந்தாட்ட ஆடிப்
பேராழி யானதிடர் கண்டருள் செய்தல் பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்டவர்க்குப்
போராழி யீந்த புகழும் புகழுற்ற தன்றே.

(திருஞானசம்பந்தர் தேவாரம்)

மாலாயிரங் கொண்டு மலர்க்கண் ணிடஆழி
ஏலா வலயத்தோ டீந்தான் உறைகோயில்

சேலா கியபொய்கைச் செழுநீர்க் கமலங்கள்
மேலா லெரிகாட்டும் வீழி மிழலேயே
(திருஞான சம்பந்தர் தேவாரம்)

சலமுடைய சலந்தரன்றன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்றன் நயனமிடந் தரனடிக்கீழ்
அலராக இட ஆழி அருளினன்காண் சாழலோ.
(திருவாசகம்-திருச்சாழல்)

மேலும் வைணவர்களுடைய பரமபிரமாணமான திருவாய்மொழியிலும் ''செக்கர்வானச் சடையோன் சேவடிக் கீழந்நாளின், மெய்க்கணிட்டுச் சக்கர நீ பெற்ற விளையாட்டே போல்'' என்ற வரிகளில் இவ்வரலாறு பற்றிக் கூறப்பட்டுள்ளது என்றும் ஆனல் அவ்வரிகள் இப்பொழுதைய அச்சிட்ட பிரதிகளில் காணப்படவில்லையென்றும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்ட 'சுருதி சூக்திமாலை' என்னும் நூலில் ஹரதத்தாசார்யர் சரிதம் 7ம் பக்கம் அடிக் குறிப்பிலிருந்து தெரிய வருகிறது.

शौरिं सत्यगिरं वराहवपुषं पादाम्बुजादर्शने
चक्रे यो दयया समस्तजगतां नाथं शिरोदर्शने ।
मिथ्यावाचमपूज्यमेव सततं हंसस्वरूपं विधिं
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ ८ ॥

சௌரிம் ஸத்யகிரம் வராஹ
வபுஷம் பாதாம்புஜா தர்சனே
சக்ரே யோ தயயா ஸமஸ்த
ஜகதாம் நாதம் சிரோதர்சனே ।

மித்யாவாசமபூஜ்யமேவ ஸததம்
ஹம்ஸஸ்வரூபம் விதிம்
தஸ்மின்மே ஹ்ருதயம் ஸுகேன
ரமதாம் ஸாம்பே பரப்ரம்மணி ॥

உண்மையான வார்த்தைகளைப் பேசுபவரும், பரமசிவனுடைய தாமரை மலர் போன்ற பாதங்களைக் காணும் முயற்சியில் பன்றியின் சரீரத்தை எடுத்துக் கொண்டவருமான மஹாவிஷ்ணுவைக் கருணையுடன் எந்தப் பரமசிவன் ஸகல உலகங்களுக்கும் நாதனுகச் செய்தாரோ, தலையைப் பார்க்கும் முயற்சியில் அன்னத்தின் வடிவமெடுத்துச் சென்றவரும் தலையைப் பார்க்காமலேயே பார்த்தேன் என்று அசத்தியமான வார்த்தைகளைக் கூறியவருமான பிரம்மதேவனை எப்பொழுதும் பூஜிக்கத் தகாதவராகச் செய்தாரோ அத்தகைய பரப்ரம்மஸ்வரூபமான ஸாம்ப பரமேச்வரனிடத்தில் என்னுடைய உள்ளம் எப்பொழுதும் இன்பத்துடன் ரமித்திருக்கட்டும்,

விளக்கம் :— பிரம்ம விஷ்ணுக்கள் தங்களுக்குள் யார் பெரியவர் என்று தீர்மானிக்க யுத்தம் செய்த போது பரமசிவன் ஜோதிஸ்வரூபமாய் ஆகாயத்தையும் பூமியையும் அளாவி நிற்கும்போது அந்த ஜோதிர் லிங்கத்தின் அடியையோ முடியையோ காண்பவரே பெரியவர் என்ற அசரீரியின் வாக்குப்படி விஷ்ணு வராஹரூபம் கொண்டு பூமியைக் குடைந்துகொண்டு அவர் பாதங்களைத் தரிசிக்கச் சென்றுர். பிரம்மதேவர் அன்னப் பக்ஷியின் வடிவம் கொண்டு சென்று முடியைக் காணச் சென்றுர். இங்ஙனம் இரண்டு பேரும் வெகுநாள் முயற்சித்தும் அந்த ஜோதியின் அடி முடி காண இயலாமல், புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வரவும் சக்தியில்லாமல் துன்புற்றுர்கள். பிறகு பரமேச்வரனைத் தியானித்து புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்தார்கள். விஷ்ணுவானவர் தான் பாதங்

களைக் காணுமையை ஒப்புக்கொண்டு உண்மை பேசவே அவரை எல்லோராலும் பூஜிக்கத் தகுந்தவராகவும், பிரம்மனைவர் தான் தலையைக் கண்டுவிட்டதாகவும் அதற்கு சிவபெருமான் தலையிலிருந்து விழுந்த ஒரு தாழம்பூ சாக்ஷி என்றும் பொய் சொல்லியதால் அவரைப் பூஜிக்கத் தகாதவராகவும் செய்தார். இவ்விதம் பிரம்ம விஷ்ணுக்களாலும் கண்டுபிடிக்க முடியாத பெரும் சக்தி வாய்ந்தவர் பரமேச்வரன் என்பது இந்த சுலோகத்தின் கருத்தாகும். இவ்வரலாற்றை விரிவாக கந்தபுராணம்—அடிமுடி தேடிய படலத்தில் காணலாம். பிரம்ம தேவன் பொய் கூறியது சிவ மஹா புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

பரமேச்வரன் பிரம்ம விஷ்ணுக்களாலும் காணற்கரியவன் என்பது, ''हरि-ब्रह्मादीनामपि निकटभाजा-मसुलभम्'' என்ற சிவானந்தலஹரி வாக்யத்திலும், மற்றும் கீழ்க்கண்ட ஞானசம்பந்தர் தேவாரத்தாலும் அறியலாம்.

''தாணுதல் செய்திறை காணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல் செய்தொழி யந்நிமிர்ந்தானெனதுள்ளம் கவர் கள்வன்
வாணுதல் செய்மக ளீர் முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல் செய்பிர மாபுரம் மேவிய பெம்மானிவனன்றே.

திருஞானசம்பந்தர் தாம்பாடிய எல்லாப் பதிகங்களிலும் 9-ம் திருப்பாடலில் இவ்வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளார்; மஹாவிஷ்ணுவுக்கு உலகத்தவரால் பூஜிக்கப்படும் பெருமை பரமேச்வரனுடைய ப்ரஸாதத்தாலேயே கிடைத்தது என்பது பின்வரும் சிவானந்தலஹரி சுலோகத்தாலும் அறியலாம்.

बाणत्वं वृषभत्वमर्धवपुषा भार्यात्वमार्यापते
घोणित्वं सखिता मृदङ्गवहता चेत्यादिरूपं दधौ ।
त्वत्पादे नयनार्पणं च कृतवान् त्वद्देहभागो हरिः
पूज्यात्पूज्यतरस्स एव हि न चेत् को वा तदन्योऽधिकः ॥

यस्यासन्धरणीजलाग्निपवनव्योमार्कचन्द्रादयः
विख्यातास्तनवोऽष्टधा परिणता नान्यत्ततो वर्तते ।
ओङ्कारार्थविवेचनी श्रुतिरियं चाचष्टतुर्यं शिवं
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ ९ ॥

யஸ்யாஸந்தரணீ ஜலாக்னி
பவனவ்யோமார்க சந்த்ராதய:
விக்யாதாஸ்தனவோ஽ஷ்டதா
பரிணதா நாந்யத்ததோவர்ததே ।
ஓம்காரார்த்த விவேசனீ ச்ருதிரியம்
சாசஷ்டதுர்யம் சிவம்
தஸ்மின்மே ஹ்ருதயம் ஸுகேன
ரமதாம் ஸாம்பே பரப்ரம்மணி ॥

நிலம், நீர், தீ, வாயு, ஆகாயம், சூர்யன், சந்திரன், ஆன்மா முதலிய எட்டு விதமான புகழ்பெற்ற சரீரங்கள் எந்த பரமேச்வரனுக்கு இருக்கின்றனவோ, எந்த அஷ்டமூர்த்தியான பரமசிவனைக் காட்டிலும் வேறு ஒரு பொருள் இல்லையோ, ஓங்காரத்தின் பொருளை விளக்குவதற்காகவே ஏற்பட்ட இந்த மாண்டுக்ய ச்ருதியும் (மாண்டுக்ய உபநிஷத்) எந்த பரமசிவனை ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்தி என்ற இந்த மூன்று நிலைகளிலும் இருக்கும் விச்வம், தைஜஸன், ப்ராக்ஞன் என்ற மூவரைக் காட்டிலும் வேறான நான்காவதாகவும், மங்களஸ்வரூபியாகவும் சொல்லுகிறதோ அப்படிப்பட்ட பரப்ரம்மஸ்வரூபியான ஸாம்ப பரமேச்

வரனிடத்தில் என்னுடைய உள்ளம் இன்பத்துடன் விளையாடட்டும்.

விளக்கம் :— பரமசிவன் அஷ்டமூர்த்தி என்பது 'அஷ்டமூர்த்தயே நம:' என்ற சிவ அஷ்டோத்தர சதநாமாவளியிலிருந்தும் பின் காணும் தேவார திருவாசக வாக்குகளிலிருந்தும் அறியலாம்.

''இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே

(அப்பர் சுவாமிகள்—நின்ற திருத்தாண்டகம்)

நிலம் நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தான் ஒருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ

(திருவாசகம்: திருத்தோணோக்கம்)

அஷ்ட மூர்த்தியான பரமேச்வரனைக் காட்டிலும் வேறான இன்னொன்று கிடையாது என்பதைப் பின் வரும் தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம் சுலோகத்தினின்றும் அறியலாம்.

भूरम्भांस्यनलोऽनिलोंऽबरमहर्नाथो हिमांशुः पुमान्
इत्याभाति चराचरात्मकमिदं यस्यैव मूर्त्यष्टकम् ।

नान्यत्किंचन विद्यते विमृशतां यस्मात्परस्माद्विभोः
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥

ஓம் என்கின்ற பிரணவத்தின் பொருளையே விளக்க வந்த மாண்டுக்ய உபநிஷத்தில் प्रपञ्चोपशमं शान्तं शिवमद्वैतं चतुर्थं मन्यन्ते'' என்று கூறப்பட்டுள்ள விஷயமே இச் சுலோகத்தின் பிற்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

विष्णुब्रह्म सुराधिपप्रभृतयः सर्वेऽपि देवा यदा
सम्भूताज्जलधेर्विषात्परिभवं प्राप्तास्तदा सत्वरम् ।
तानार्तान् शरणागतानिति सुरान् योऽरक्षदर्धक्षणात्
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ १० ॥

விஷ்ணுப்ரம்ம ஸுராதிபப்ரப்ருதய:
ஸர்வேபி தேவா யதா
ஸம்பூதாஜ்ஜலதேர் விஷாத்பரிபவம்
ப்ராப்தாஸ்ததா ஸத்வரம் ।
தானர்தான் சரணுகதானிதி
ஸுரான்யோऽரக்ஷதர்தக்ஷணுத்
தஸ்மின்மே ஹ்ருதயம் ஸுகேன
ரமதாம் ஸாம்பே பரப்ரம்மணி ॥

பிரம்மா, விஷ்ணு தேவேந்திரன் முதலிய ஸகல தேவர்களும் சமுத்திரத்திலிருந்து உண்டான ஹாலாஹல விஷத்திலிருந்து பரிபவத்தை எப்பொழுது அடைந்தார்களோ அப்பொழுது விரைவாகத் துன்பமுற்ற அந்த தேவர்களை சரணமடைந்தார்கள் என்ற ஒரே காரணத்தினுல் எந்தப் பரமசிவன் அரைக்ஷணத்தில் காப்பாற்றினுரோ அப்படிப்பட்ட பரப்ரம்மஸ்வரூபமான ஸாம்ப பரமேச்வரனிடத்தில் என் மனம் இன்பத்துடன் ரமித்திருக்கட்டும்.

விளக்கம் :— தேவர்களும் அசுரர்களும் பிரம்ம விஷ்ணுவாதியர்களின் துணையுடன் அம்ருதத்தை எடுக்க பாற்கடலைக் கடைந்தார்கள். அப்பொழுது பாற்கடலிலிருந்து கிளம்பிய நஞ்சும், அப்பாற்கடலைக் கடையப் பயன்பட்ட நாணாகிய வாசுகி என்னும் பாம்பரசனின் விஷமும் சேர்ந்து ஒன்றாகித் தேவாசுரர்களைத் துன்புறுத்தியது. அதனின்றும் மீள வழியறியாமல் விஷ்ணு, பிரம்மா, இந்திரன் முதலிய ஸகல தேவர்களும் பரமசிவனிடம் சரணடைந்தார்கள். சரணமடைந்தவர்களைக் காக்கவேண்டும் என்ற இறைவனின் இயல்பான கருணையினால் அவ்விஷத்தை உண்டு அத்தேவர்களை அரைக்ஷண நேரத்தில் காப்பாற்றினார். மேலும் அவ்விஷத்தினை வெளியிலும் விடாமல், வயிற்றுள்ளும் செலுத்தாமல் கழுத்திலேயே நிலைநிறுத்தியருளினார். அதனால் அவருடைய கழுத்தில் நீல நிறம் ஏற்பட்டது. இந்த வரலாறு கந்த புராணம் தக்ஷ காண்டம் ததீசி உத்தரப் படலத்துள் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பரமசிவன் நீலகண்டன் காலகண்டன், ஸ்ரீகண்டன், நீலக்கிரீவன், முதலிய அருமைத் திருநாமங்களால் அழைக்கப்படுவதும் இது பற்றியேயாகும். ஸ்ரீருத்ரத்தில் நீலக்கிரீவன் என்ற திருநாமம் வருவதையும் காண்க. இச்செயற்கரிய செயலை விளக்கும் சிவானந்தலஹரி ச்லோகங்கள் வருமாறு :—

नालं वा परमोपकारकमिदं त्वेकं पशूनां पते
पश्यन् कुक्षिगतान् चराचरगणान् बाह्यस्थितान् रक्षितुम् ।
सर्वामर्त्यपलायनौषधमतिज्वालाकरं भीकरं
निक्षिप्तं गरलं गले न गिलितं नोद्गीर्णमेव त्वया ॥

ज्वालोग्रः सकलामरातिभयदः क्ष्वेलः कथं वा त्वया
दृष्टः किं च करे धृतः करतले किं पक्वजम्बूफलम् ।
जिह्वायां निहितश्च सिद्धघुटिका वा कण्ठदेशे भृतः
किं ते नीलमणिर्विभूषणमयं शम्भो महात्मन् वद ॥

ஹாலாஹல விஷத்தை அருந்தி தேவஸ்த்ரீகளின் மங்கல நாணைக் காத்த இந்தச் செய்தி பல தேவாரத் திருப்பாடல்களிலும் திருவாசகத்திலும் குறிப்பிட்டுள்ளது, அவற்றுள் சிலவற்றை ஈண்டுத் தருதும்.

''மாலா யவனும் மறைவல்ல நான்முகனும்
பாலா தேவர்பக ரில்லமு தூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க் கரிதா யெழுந்த
ஆலாலம் உண்டங்கம ரர்க்கருள் செய்த தாமே

(திருஞானசம்பந்தர்-திருப்பாசுரம்)

''கடிக்கும்மர வால்மலை யாலமரர்
கடலைக்கடை யவ்வெழு காளகூடம்
ஒடிக்கும்முல கங்களை யென்றதனை
உமக்கேஅமு தாகவுண் டீர் உமிழீர்
இடிக்கும்மழை வீழ்த்திழுத் திட்டருவி
யிருபாலுமோ டிய்யிரைக் குந்திரைக்கை
அடிக்கும் புனல் சேரரி சிற்றென் கரை
அழகார்திருப் புத்தூர் அழகனீரே.

(சுந்தரர் தேவாரம்)

''கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோள ரவ்வுசுற் றிக்கடைந் தெழுந்த
ஆல-நஞ்சுண் டவர்மிக இரிய
அமரர் கட்கருள் புரிவது கருதி
நீல மார்கடல் விடந்தனை யுண்டு
கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

(சுந்தரர் தேவாரம்)

''கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலால முண்டா னவன்சதுர்தான் என்னேடீ

ஆலால முண்டிலனேல் அன்றயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ.

(திருவாசகம்-திருச்சாழல்)

ஆசிரியர் குறிப்பு: தசச்லோகீ என்ற இந்த சிறந்த ஸ்தோத்ரம் ஆதிசங்கர பகவத் பாதாசார்யர்களால் பரமேச்வரனுடைய தனித் தலைமைத் தன்மையை விளக்கி எழுதப்பட்டது. "ஸஹஸ்ரம் வர்த்தந்தே ஜகதி விபுதா: க்ஷுத்ரபலதா: நமன்யே ஸ்வப்னேவா ததநு சரணம் தத்க்ருதபலம்" என்று ஆதிசங்கரரே சிவானந்த லஹரியில் கூறியபடியும், "சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோமல்லோம், சிவ பெருமான் சேவடியே சேரப் பெற்றோம்" என்று அப்பர் சுவாமிகளும் கூறியவண்ணம் சிவானந்தப் பெருவாழ்விலேயே ஈடுபடுத்தும் பெருமையுடையது. 'சிவ ஏகோத்யேய: சிவம் கர: ஸர்வமன்யத் பரித்யஜ்ய' அதாவது பேரின்பத்தைத் தரும் சிவபெருமான் ஒருவனே ஏனைய எல்லோரையும் விலக்கிவிட்டுத் தியானிக்கத் தக்கவன் என்ற அதர்வ சிகோப நிஷத் வாக்யப்படி சிவபெருமானுடைய முழு முதல் தன்மையை நன்கு விளக்கிக் கூறுகிறது. சிவபெருமான் ஒருவனே பிரம்ம விஷ்ணுவாதி தேவர்களை ரக்ஷிப்பவரென்றும் அவர்கள் தவறு செய்யும்போது அவர்களை சிக்ஷிப்பவரென்றும் இந்நூலில் நன்கு விளக்கிக் காட்டப்பட்டுள்ளது. இந்நூலில் உள்ள விஷயங்களுக்கு வேதம், புராணம், இதிஹாஸம், தேவாரம் திருவாசகம் முதலியவற்றிலிருந்து ஏராளமான மேற்கோள்கள் காட்டமுடியும் என்றாலும் விரிவஞ்சி ஒரு சில மேற்கோள்களே காட்டப்பட்டுள்ளன; அன்பர்கள் இதனைப் படித்துப் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்,

சுபம்

சிவமயம்

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்கள் அருளிய

சிவநாமாவல்யஷ்டகம்

॥ शिवनामावल्यष्टकम् ॥

தமிழ் உரை

தர்மக்ஞ, சிரோமணி, வித்யாவாசஸ்பதி, பிரம்மஸ்ரீ
மாயூரம் ராமநாத தீக்ஷிதர் அவர்கள்

हे चन्द्रचूड मदनान्तक शूलपाणे
स्थाणो गिरीश गिरिजेश महेश शम्भो ।
भूतेश भीतभयसूदन मामनाथं
संसारदुःखगहनाज्जगदीश रक्ष ॥ १ ॥

ஹே சந்த்ரசூட மதநாந்தக சூலபாணே
ஸ்தாணோ கிரீச கிரிஜேச மஹேச சம்போ ।
பூதேச பீதபயஸூதன மாமநாதம்
ஸம்ஸார துக்ககஹநாஜ்ஜகதீச ரக்ஷ ॥

சந்திரனைச் சிரஸில் தரித்தவரே, காமனை அழித்தவரே, சூலத்தைத் தரித்தவரே, அசைவற்றவரே, மலையில் வசிப்பவரே, மலைமகளின் கணவரே, மஹேச்வரரே, ஸுகங்கள் எல்லாவற்றிற்கும் இருப்பிடமான

வரே, பூதங்களின் பதியே, பயத்தைப் போக்குபவரே. உலகிற்கெல்லாம் ஈசரே, நாதனற்ற என்னை ஸம்ஸாரத்திலுள்ள பயங்கர துக்கத்தினின்றும் காக்க வேண்டும்.

हे पार्वतीहृदय वल्लभ चन्द्रमौले
भूताधिप प्रमथनाथ गिरीशचाप ।
हे वामदेव भव रुद्र पिनाकपाणे
संसारदुःखगहनाज्जगदीश रक्ष ॥ २ ॥

ஹே பார்வதீஹ்ருதயவல்லப சந்த்ரமௌலே
பூதாதிப ப்ரமதநாத கிரீசசாப ।
ஹே வாமதேவ பவ ருத்ர பிநாகபாணே
ஸம்ஸார துக்ககஹநாஜ்ஜகதீச ரக்ஷ ॥

பார்வதியின் மனத்திற்குப்ரியமானவரே, சந்திரனைச் சிரஸில் தரித்தவரே, பூதங்களுக்கும் ப்ரமத கணங்களுக்கும் அதிபரே, மேருவை வில்லாகக்கொண்டவரே, மிக அழகு வாய்ந்த தெய்வமே எங்கும் ஸத்ரூபியாய் நிறைந்தவரே. துக்கத்தையும் அதன் காரணத்தையும் அழிப்பவரே, பினாகத்தைத் தரித்தவரே, உலகிற்கெல்லாம் ஈசரே, என்னை ஸம்ஸாரத்திலுள்ள பயங்கர துக்கத்தினின்றும் காக்கவேண்டும்.

हे नीलकण्ठ वृषभध्वज पञ्चवक्त्र
लोकेश शेषवलय प्रमथेश शर्व ।
हे धूर्जटे पशुपते गिरिजापते मां
संसारदुःखगहनाज्जगदीश रक्ष ॥ ३ ॥

ஹே நீலகண்ட வ்ருஷபத்வஜ பஞ்சவக்த்ர
லோகேச சேஷவலய ப்ரமதேச சர்வ ।

ஹே தூர்ஜடே பசுபதே கிரிஜாபதேமாம்
ஸம்ஸார துக்ககஹனஜ்ஜகதீச ரக்ஷ ॥

நீலகண்டரே, வ்ருஷபத்தைக் கொடியாகக்கொண்டவரே, ஐந்து முகமுள்ளவரே, உலகத்திற்குப் பதியே, ஆதிசேஷனை வளையாகத் தரித்தவரே, ப்ரமத கணங்களின் தலைவரே, பாபங்களைப் போக்குபவரே தூர்ஜடே, பசுபதே, மலைமகளின் பதியே, உலகிற்கெல்லாம் ஈசரே, என்னை ஸம்ஸாரத்திலுள்ள பயங்கர துக்கத்தினின்றும் காக்கவேண்டும்.

हे विश्वनाथ शिव शङ्कर देवदेव
गङ्गाधर प्रमथनायक नन्दिकेश ।
बाणेश्वरान्धकरिपो हर लोकनाथ
संसारदुःखगहनाज्जगदीश रक्ष ॥ ४ ॥

ஹே விச்வநாத சிவசங்கர தேவதேவ
கங்காதர ப்ரமதநாயக நந்திகேச ।
பாணேச்வராந்தகரிபோ ஹர லோகநாத
ஸம்ஸார துக்ககஹனஜ்ஜகதீசரக்ஷ ॥

விச்வநாதரே, சிவபெருமானே, சங்கரனே, தேவதேவ, கங்காதர, ப்ரமத நாயகரே, நந்திகேச, பாணனுக்கு ஈசரே, அந்தகனைக் கொன்றவரே, ஹர, உலகத்திற்கு நாதரே, ஜகதீச, நாதனற்ற என்னை ஸம்ஸாரத்திலுள்ள பயங்கர துக்கத்தினின்றும் காக்க வேண்டும்.

वाराणसीपुरपते मणिकर्णिकेश
वीरेश दक्षमखकाल विभो गणेश ।

सर्वज्ञ सर्वहृदयैकनिवास नाथ
संसारदुःखगहनाज्जगदीश रक्ष ॥ ५ ॥

வாராணஸீபுரபதே மணிகர்ணிகேச
வீரேச தக்ஷமககால விபோ கணேச।
ஸர்வக்ஞ ஸர்வ ஹ்ருதயைக நிவாஸ நாத
ஸம்ஸார துக்ககஹநஜ்ஜகதீச ரக்ஷ ॥

காசி பட்டிணத்திற்குத் தலைவரே, மணிகர்ணிகாபதே, வீரர்களுக்கு ஈசனே, தக்ஷனின் யாகத்தை அழித்தவரே, விபுவே. கணங்களுக்கு அதிபரே, எல்லாமறிந்தவரே, உலகமெல்லாவற்றிற்கும் இருப்பிடமே, நாதனற்ற என்னை ஸம்ஸாரத்திலுள்ள பயங்கர துக்கத்தினின்றும் காக்கவேண்டும்.

श्रीमन्महेश्वर कृपामय हे दयालो
हे व्योमकेश शितिकण्ठ गणाधिनाथ ।
भस्माङ्गराग नृकपालकलापमाल
संसारदुःखगहनाज्जगदीश रक्ष ॥ ६ ॥

ஸ்ரீமன்மஹேச்வர க்ருபாமய ஹேதயாலோ
ஹேவ்யோமகேச சிதிகண்ட கணாதிநாத।
பஸ்மாங்கராக ந்ருகபாலகலாபமால
ஸம்ஸார துக்ககஹநஜ்ஜகீதச ரக்ஷ ॥

ஸ்ரீமன் மஹேச்வர, கருணையுருவமே, தயாளுவே, வ்யோமகேச, கறுத்த கண்டமுள்ளவரே, கணங்களின் அதிபரே, விபூதியை அணிந்தவரே, மனித கபாலத்தைத் தரித்தவரே, கபாலங்களை மாலையாக அணிந்தவரே, என்னை ஸம்ஸாரத்திலுள்ள பயங்கர துக்கத்தினின்றும் காக்கவேண்டும்.

कैलाशशैलविनिवास वृषाकपे हे
मृत्युञ्जय त्रिनयन त्रिजगन्निवास ।
नारायणप्रिय मदापह शक्तिनाथ
संसारदुःखगहनाज्जगदीश रक्ष ॥ ७ ॥

கைலாச சைல விநிவாஸ வ்ருஷாகபே ஹே
ம்ருத்யுஞ்ஜய த்ரிநயன த்ரிஜகன்னிவாஸ ।
நாராயணப்ரிய மதாபஹ சக்திநாத
ஸம்ஸார துக்ககஹநாஜ்ஜகதீச ரக்ஷ ॥

திருக்கயிலாயமலையில் வசிப்பவரே, வ்ருஷா கபியே, ம்ருத்யுஞ்சயரே, முக்கண் படைத்தவரே, மூவுலகத்திலும் வசிப்பவரே, நாராயணனின் நண்பரே, மதத்தைப் போக்குபவரே. பராசக்தியின் பதியே, என்னை ஸம்ஸாரத்திலுள்ள பயங்கர துக்கத்தினின்றும் காக்கவேண்டும்.

विश्वेश विश्वभवनाशक विश्वरूप
विश्वात्मक त्रिभुवनैकगुणाधिकेश ।
हे विश्वनाथ करुणामय दीनबन्धो
संसारदुःखगहनाज्जगदीश रक्ष ॥

விச்வேச விச்வபவநாசக விச்வரூப
விச்வாத்மக த்ரிபுவனைக குணாதிகேச ।
ஹே விச்வநாத கருணாமய தீனபந்தோ
ஸம்ஸார துக்ககஹநாஜ்ஜகதீச ரக்ஷ ॥

உலகத்திற்கு அதிபரே, உலகில் பிறவிப் பிணியைப் போக்குபவரே, உலகத்தையே உருவமாய் கொண்டவரே, உலக ரூபியே, மூவுலகத்திலும் மிகவும் குணமுள்ளவரே, உலக பந்துவாயும் கருணையுருவாயும் எளியவற்கு பந்துவாயுமுள்ளவரே, ஸம்ஸாரத்திலுள்ள பயங்கர துக்கத்தினின்றும் என்னைக் காக்க வேண்டும்.

———

சிவமயம்

வஸிஷ்ட முனிவர் அருளிச் செய்த

தாரித்ர்யதஹநசிவஸ்தோத்ரம்

॥ दारिद्र्यदहनशिवस्तोत्रम् ॥

(वसिष्ठविरचितम्)

தமிழ் உரை :

சிரோமணி, வேதபாஷ்யக்ஞர்

பிரம்மஸ்ரீ R. பட்டாபிராம தீக்ஷிதர்

विश्वेश्वराय नरकान्तकतारणाय
कर्णामृताय शशिशेखरधारणाय ।
कर्पूरकान्तिधवलाय जटाधराय
दारिद्र्यदुःखदहनाय नमः शिवाय ॥ १ ॥

விச்வேச்வராய நரகாந்தக தாரணாய
கர்ணாம்ருதாய சசிசேகர தாரணாய ।
கர்பூர காந்தி தவளாய ஜடாதராய
தாரித்ர்ய துக்க தஹநாய நம:சிவாய ॥

உலகத்திற்கு அதிபதியும் நரகாசுரனைக் கொன்ற விஷ்ணுவிற்கு தாரகராயும், காதிற்கு அமுதம் போன்றவரும், சந்திரனை மகுடத்தில் தரித்தவரும், கற்பூரத்

தின் நிறம்போல் வெண்மையானவரும், தரித்திரத் தன்மை, துக்கம் இவைகளைப் போக்கடிப்பவருமான சிவபெருமானுக்கு நமஸ்காரம்.

गौरीप्रियाय रजनीशकलाधराय
कालान्तकाय भुजगाधिपकङ्कणाय ।
गङ्गाधराय गजराजविमर्दनाय
दारिद्र्यदुःखदहनाय नमः शिवाय ॥ २ ॥

கௌரீப்ரியாய ரஜநீச கலாதராய
காலாந்தகாய புஜகாதிப கங்கணுய ।
கங்காதராய கஜராஜ விமர்தனுய
தாரித்ர்ய துக்க தஹநாய நம: சிவாய ॥

கௌரிக்கு பிரியமானவரும், சந்திர கலையைத் தரித்தவரும் யமனைக் கொன்றவரும், ஆதிசேஷனைக் கங்கணமாய்க் கொண்டவரும் கங்கையைத் தரித்தவரும், கஜாசுரனைக் கொன்றவரும், தரித்திரத்தன்மை, துக்கம் இவைகளைப் போக்கடிப்பவருமான சிவ பெருமானுக்கு நமஸ்காரம்.

भक्तप्रियाय भवरोगभयापहाय
उग्राय दुःखभवसागरतारणाय ।
ज्योतिर्मयाय गुणनामसुनृत्यकाय
दारिद्र्यदुःखदहनाय नमः शिवाय ॥ ३ ॥

பக்தப்ரியாய பவரோக பயாபஹாய
உக்ராய துக்க பவஸாகர தாரணுய ।
ஜ்யோதிர்மயாய குண நாமஸுந்ருத்யகாய
தாரித்ர்ய துக்க தஹநாய நம:சிவாய ॥

பக்தர்களிடம் ப்ரியமுள்ளவரும், சம்ஸார ரோகத்தைப் போக்குபவரும், உக்ரரும், துக்கமேயான சம்ஸாரக் கடலிலிருந்து கரையேற்றுபவரும், ஒளிவடிவானவரும் அர்த்த புஷ்டியுள்ள பெயருள்ளவரும் நன்கு நர்த்தனமாடுபவரும், தரித்திரத் தன்மை, துக்கம் இவைகளைப் போக்கடிப்பவருமான சிவபெருமானுக்கு நமஸ்காரம்.

चर्माम्बराय शवभस्मविलेपनाय
फालेक्षणाय फणिकुण्डलमण्डिताय ।
मञ्जीरपादयुगलाय जटाधराय
दारिद्र्यदुःखदहनाय नमः शिवाय ॥ ४ ॥

சர்மாம்பராய சவபஸ்ம விலேபநாய
பாலேக்ஷணாய பணி குண்டல மண்டிதாய ।
மஞ்ஜீர பாதயுகளாய ஜடாதராய
தாரித்ர்ய துக்க தஹநாய நமசி:வாய ॥

புலித்தோலையணிந்தவரும், ருத்ர பூமியின் பஸ்மத்தைப் பூசிக்கொள்பவரும், நெற்றிக்கண் உள்ளவரும்' ஸர்ப்ப குண்டலத்தால் அலங்கரிக்கப் பெற்றவரும், பாதசரம் அணிந்த இரு பாதங்களையுடையவரும், தாரித்ரியத் தன்மை, துக்கம் இவைகளைப் போக்கடிப்பவருமான சிவபெருமானுக்கு நமஸ்காரம்.

पञ्चाननाय फणिराजविभूषणाय
हेमांशुकाय भुवनत्रयमण्डिताय ।
आनन्दभूमिवरदाय तमोपहाय
दारिद्र्यदुःखदहनाय नमः शिवाय ॥ ५ ॥

பஞ்சாநநாய பணிராஜ விபூஷணய
ஹேமாம்சுகாய புவநத்ரய மண்டிதாய ।
ஆநந்த பூமி வரதாய தமோபஹாய
தாரித்ர்ய துக்க தஹநாய நம:சிவாய ॥

ஐந்து முகங்கள் உள்ளவரும், ஆதிசேஷனை யணிந்தவரும் ஸ்வர்ணமயமான வஸ்திரம் தரித்த வரும், மூவுலகிற்கும் அணி போன்றவரும், ஆனந்த மயமான மோக்ஷத்தைக் கொடுப்பவரும், அறியாமையை அகற்றுபவரும், தரித்திரத் தன்மை, துக்கம் இவைகளைப் போக்கடிப்பவருமான சிவபெருமானுக்கு நமஸ்காரம்.

गौरीविलास भवनाय महेश्वराय
पञ्चाननाय शरणागतकल्पकाय ।
शर्वाय सर्वजगतामधिपाय तस्मै
दारिद्र्यदुःखदहनाय नमः शिवाय ॥ ६ ॥

கௌரீ விலாஸபவனாய மஹேச்வராய
பஞ்சானனாய சரணாகதகல்பகாய ।
சர்வாய ஸர்வஜகதாமதிபாய தஸ்மை
தாரித்ர்ய துக்கதஹனாய நம: சிவாய ॥

கௌரியின் விநோதத்திற்கு இருப்பிடமானவரும், மஹேச்வரனும், ஐந்து முகமுள்ளவரும் சரணமடைந்தவர்க்கு கல்பதருவாயும், பாபங்களைப் போக்குபவரும் உலகங்களுக்கெல்லாம் அதிபதியாயும் உள்ள, தாரித்ர்யம், துக்கம் இவைகளைப் போக்குபவரான சிவபெருமானுக்கு நமஸ்காரம்.

भानुप्रियाय भवसागरतारणाय
कालान्तकाय कमलासनपूजिताय ।

नेत्रत्रयाय शुभलक्षणलक्षिताय
दारिद्र्यदुःखदहनाय नमः शिवाय ॥ ७ ॥

பாநுப்ரியாய பவஸாகர தாரணாய
காலாந்தகாய கமலாஸந பூஜிதாய ।
நேத்ரத்ரயாய சுபலக்ஷண லக்ஷிதாய
தாரித்ர்ய துக்க தஹநாய நம:சிவாய ॥

சூரியனிடம் பிரியமுள்ளவரும், வாழ்க்கைக் கடலைக் கடத்திவைப்பவரும், காலனையழித்தவரும், பிரம்மதேவரால் பூஜிக்கப்பட்டவரும், முக்கண் படைத்தவரும், நல்ல லக்ஷணங்களை உடையவரும், தரித்திரத் தன்மை, துக்கம் இவைகளைப் போக்கடிப்பவருமான சிவபெருமானுக்கு நமஸ்காரம்.

रामप्रियाय रघुनाथवरप्रदाय
नामप्रियाय नरकार्णवतारणाय ।
पुण्येषु पुण्यभरिताय सुरार्चिताय
दारिद्र्यदुःखदहनाय नमः शिवाय ॥ ८ ॥

ராமப்ரியாய ரகுநாத வரப்ரதாய
நாமப்ரியாய நரகார்ணவதாரணாய ।
புண்யேஷு புண்யபரிதாய ஸுரார்ச்சிதாய
தாரித்ர்ய துக்க தஹநாய நம:சிவாய ॥

இராமபிரானுக்குப் பிரியமானவரும், அந்த ரகுநாதனுக்கு வரன்களைக் கொடுத்தவரும், பெயர் சொன்னாலே பிரியமடைபவரும், நரகமாகிய கடலைக் கடத்திவைப்பவரும், புண்ணியமுள்ளவரிடம் புண்ணியத்தை வளர்ப்பவரும், தேவர்களால் பூஜிக்கப் பெற்றவரும், தரித்திரத்தன்மை, துக்கம் இவைகளைப் போக்கடிப்பவருமான சிவபெருமானுக்கு நமஸ்காரம்.

मुक्तेश्वराय फलदाय गणेश्वराय
गीतप्रियाय वृषभेश्वरवाहनाय ।
मातङ्गचर्मवसनाय महेश्वराय
दारिद्र्यदुःखदहनाय नमः शिवाय ॥ ९ ॥

முக்தேச்வராய பலதாய கணேச்வராய
கீதப்ரியாய வ்ருஷபேச்வர வாஹநாய ।
மாதங்க சர்ம வஸநாய மஹேச்வராய
தாரித்ர்ய துக்க தஹநாய நம:சிவாய ॥

மோக்ஷத்தையளிப்பவரும், ஈச்வரனும், கர்ம பலனையளிப்பவரும், ப்ரமதகணங்களுக்குப் பதியும், ஸங்கீதத்தில் ப்ரியமுள்ளவரும். வ்ருஷபவாஹநம், உள்ளவரும், யானைத்தோலையணிபவரும், மஹேச்வர னும், தரித்திரத் தன்மை துக்கம் இவைகளை போக்கடிப் பவருமான சிவபெருமானுக்கு நமஸ்காரம்.

वसिष्ठेन कृतं स्तोत्रं सर्वदारिद्र्यनाशनम् ।
सर्वसम्पत्करं शीघ्रं पुत्रपौत्रादिवर्द्धनम् ।
त्रिसन्ध्यं यः पठेन्नित्यं स हि स्वर्गमवाप्नुयात् ॥१०॥

வஸிஷ்டேநக்ருதம் ஸ்தோத்ரம்ஸர்வதாரித்ர்யநாசநம்।
ஸர்வ ஸம்பத்கரம்சீக்ரம் புத்ர பௌத்ராதி வர்த்தநம் ।
த்ரிஸந்த்யம் ய:படேத் நித்யம் ஸஹிஸ்வர்க்க
மவாப்நுயாத் ॥

எல்லா வியாதிகளையும் போக்கடிக்கக் கூடியதும், எல்லாவிதமான ஸம்பத்துக்களையும் கொடுக்கக் கூடிய தும் விரைவில் புத்ரபௌத்ராதிகளைக் கொடுக்கக்கூடிய தும், வஸிஷ்டரால் செய்யப்பட்டதுமான இந்தத் துதியை தினந்தோறும் மூன்று வேளைகளிலும் படிப் பவர்களுக்கு ஸ்வர்கலோகம் கிடைக்கும்.

உ

சிவமயம்

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யபுஜங்கப்ரயாத ஸ்தோத்ரம்

॥ श्रीसुब्रह्मण्य भुजङ्गप्रयात स्तोत्रम् ॥

தமிழ் உரை;

ஞானபாஸ்கர, சிவோத்கர்ஷவர்ஷக
பிரம்மஸ்ரீ P. N. நாராயண சாஸ்திரிகள்

भजेऽहं कुमारं भवानीकुमारं
गलोल्लासिहारं नमस्कृद्विहारम् ।
रिपुस्तोमसारं नृसिंहावतारं
सदानिर्विकारं गुहं निर्विचारम् ॥ १ ॥

பஜேऽஹம் குமாரம் பவானீ குமாரம்
கலோல்லாஸி ஹாரம் நமஸக்ருத்விஹாரம்।
ரிபுஸ்தோமஸாரம் ந்ருஸிம்மாவதாரம்
ஸதா நிர்விகாரம் குஹம்நிர் விசாரம்॥

பவானியின் புத்திரனும், கழுத்தில் ம[illegible]ர் மாலை யுடன் விளங்குபவரும், தன்னை வணங்குகிறவர்கள் இருதயத்தில் விளையாடுகிறவரும், பகைவனை

அழிக்கிற ஆயுதங்களைக் கொண்டவரும், நரஸிம்மராய் அவதரித்தவரும் எப்பொழுதும் மாறுதல் அற்று விளங்குபவரும் விசாரித்தறிய முடியாதவரும், குஹனுமான முருகனை வணங்குகிறேன்.

नमामीशपुत्रं जपाशोणगात्रं
सुरारातिशत्रुं रवीन्द्वग्निनेत्रम् ।
महाबर्हिपत्रं शिवास्याब्जमित्रं
प्रभासत्कलत्रं पुराणं पवित्रम् ॥ २ ॥

நமாமீசபுத்ரம் ஜபாசோணகாத்ரம்
ஸுராராதிசத்ரும் ரவீந்த்வக்னி நேத்ரம்।
மஹாபர்ஹிபத்ரம் சிவாஸ்யாப்ஜமித்ரம்
ப்ரபாஸத்கலத்ரம் புராணம் பவித்ரம்॥

ஈசனின் மகனும், செம்பரத்தை மலர் போன்ற உடலை உடையவரும், தேவர்களின் பகைவரை அழிப்பவரும், சூரியன் சந்திரன் அக்னி இவர்களைக் கண்களாய் உடையவரும், மயில் தோகையை உடையவரும், சிவபெருமானின் திருவடிகளுக்குத் தோழரும், மிக அழகிய மனைவியை உடையவரும், பழமையும் புனிதமானவருமான முருகனை வணங்குகிறேன்.

अनेकार्ककोटिप्रभावज्ज्वलन्तं
मनोहारिमाणिक्य भूषोज्ज्वलं तम् ।
श्रितानामभीष्टं सुशान्तं नितान्तं
भजे षण्मुखं तं शरच्चन्द्रकान्तम् ॥ ३ ॥

அனேகார்க கோடிப்ரபாவஜ்வலந்தம்
மனோஹாரி மாணிக்ய பூஷோஜ்ஜ்வலந்தம்।
ச்ரிதாநாமபீஷ்டம் ஸுசாந்தம் நிதாந்தம்
பஜே ஷண்முகம் தம் சரச்சந்த்ர காந்தம்॥

பல சூரியர்களின் ஒளி போன்று விளங்குபவரும், மனதிற்கு நன்மையைத் தரும் மாணிக்கங்களாலான அணிகலன்களைக் கொண்டவரும், தன்னை அண்டினவர்களுக்கு வேண்டியதைக் கொடுப்பவரும், எப்பொழுதும் அமைதியானவரும், கார்த்திகை மாதத்து சந்திரன் போன்று அழகிய ஆறு திருமுகங்களைக் கொண்டு விளங்குகிற முருகனை வணங்குகிறேன்.

कृपावारिकल्लोलभास्वत् कटाक्षं
विराजन्मनोहारिशोणाम्बुजाक्षम् ।
प्रयोगप्रदानप्रवाहैकदक्षं
भजे कान्तिकान्ताम्बरस्तोमरक्षम् ॥ ४ ॥

க்ருபாவாரிகல்லோல பாஸ்வத் கடாக்ஷம்
விராஜன் மனோஹாரி சோணாம்புஜாக்ஷம்।
ப்ரயோகப்ரதான ப்ரவாஹைகதக்ஷம்
பஜே காந்திகாந்தாம் பரஸ்தோம ரக்ஷம்॥

அலை மோதுகிற கருணையாகிற ஜலத்தைக் கொண்ட கண்களை உடையவரும், மனதிற்கு மகிழ்ச்சியளிக்கிற செந்தாமரை போன்ற கண்களை உடையவரும், வெள்ளம் போன்ற பிரயோகங்களினின்றும் சுரக்கும் சக்திபடைத்தவருமான முருகனை வணங்குகிறேன்.

सुकस्तूरिकाबिन्दुभास्वल्ललाटं
दयापूर्णचित्तं महादेवपुत्रम् ।
रवीन्दूल्लसद्रत्नराजत्किरीटं
भजे क्रीडिताकाशगङ्गासुकूटम् ॥ ५ ॥

ஸுகஸ்தூரிகாபிந்து பாஸ்வல்லலாடம்
தயாபூர்ணசித்தம் மஹாதேவ புத்ரம்।

ரவீந்தூல்லஸத்ரத்ன ராஜத்கிரீடம்
பஜே க்ரீடிதாகாச கங்காஸுகூடம் ॥

கஸ்தூரிப் பொட்டினால் அழகிய நெற்றியை உடையவரும், தயை நிறைந்த உள்ளமுடையவரும், மஹாதேவரின் புதல்வரும், சூரிய சந்திரர்களால் ஒளி விடுகிற அழகிய கிரீடததை முடியில் கொண்டவரும், ஆகாச கங்கையில் விளையாடுகிறவருமான முருகனை வணங்குகிறேன்.

सुकुन्दप्रसूनावली शोभितान्तं
शरत्पूर्णचन्द्रस्य षट्कान्तिकान्तम् ।
शिरीषप्रसूनाभिरामं भवन्तं
भजे देवसेनावल्लीवल्लभं तम् ॥ ६ ॥

ஸுகுந்த ப்ரஸூனாவலீ சோபிதாந்தம்
சரத்பூர்ணசந்த்ரஸ்ய ஷட்காந்தி காந்தம் ।
சிரீஷப்ரஸூனாபிராமம் பவந்தம்
பஜேதேவ ஸேனாவல்லீவல்லபம் தம் ॥

நல்ல குந்த புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டவரும் சரத்காலத்து முழுமதியை ஒத்த ஆறு முகங்களைக் கொண்டவரும் வாகை மலரைச் சூடி அழகுடன் விளங்குபவரும், வல்லீ, தேவஸேனையின் கணவருமான முருகப் பெருமானை வணங்குகிறேன்.

सुलावण्यसत्सूर्यकोटिप्रकाशं
प्रभुं तारकारिं द्विषड्बाहुमीशम् ।
निजार्क प्रभादीप्यमानाखिलाशं
भजे पार्वती प्राणपुत्रं सुकेशम् ॥ ७ ॥

ஸுலாவண்யஸத்ஸூர்ய கோடி ப்ரகாசம்
ப்ரபும் தாரகாரிம் த்விஷட்பாஹுமீசம்।
நிஜார்க ப்ரபாதீப்ய மானகிலாசம்
பஜே பார்வதீ ப்ராணபுத்ரம் ஸுகேசம்॥

மிக அழகிய பல கோடி சூரியர்களின் ஒளி போன்றவரும, பிரபுவாயும், தாரகனை வென்றவரும், பன்னிரண்டு கைகளை உடையவரும், தன் ஒளியினலேயே எல்லா பக்கங்களையும் ஒளிபெறச் செய்கிறவரும், அழகிய முடியைக் கொண்டு விளங்குபவரும், பார்வதியின் அன்புள்ள மகனுமான முருகனை வணங்குகிறேன்.

अजं लोकसर्वप्रियं लोकनाथं
गुहं शूरपद्मादिदम्भोलिधारम्।
सुबाहुं सुनासापुटं सच्चरित्रं
भजे कार्तिकेयं सदा बाहुलेयम्॥ ८॥

அஜம் லோக ஸர்வப்ரியம் லோகநாதம்
குஹம் சூரபத்மாதி தம்போலிதாரம்।
ஸுபாஹும் ஸுநாஸாபுடம் ஸச்சரித்ரம்
பஜே கார்திகேயம் ஸதாபாஹுலேயம்॥

பிறப்பற்றவரும், எல்லா உலகிற்கும் பிரியமானவரும், உலகத் தலைவனும், குஹனும், சூரபத்மன் முதலிய அரக்கர்களாகிற இடியைப் பிளப்பவரும், அழகிய கைகள் மூக்கு, நல்ல நடைமுறையுடையவரும், கார்த்திகை தேவிகளின் மகனுமான முருகனை வணங்குகிறேன்.

शरारण्यसम्भूतमिन्द्रादि वन्द्यं
द्विषड्बाहुसङ्ख्यायुधश्रेणिरम्यम्।

मरुत्सारथिं कुक्कुटेशं सुकेतुं
भजे योगिहृत्पद्ममध्याधिवासम् ॥ ९ ॥

சராரண்ய ஸம்பூத மிந்த்ராதி வந்த்யம்
த்விஷட் பாஹுஸங்க்யாயுதச்ரேணிரம்யம் ।
மருத் ஸாரதிம் குக்குடேசம் ஸுகேதும்
பஜே யோகிஹ்ருத் பத்ம மத்யாதிவாஸம் ॥

சரவணப் பொய்கையில் உண்டானவரும், இந்திரன் முதலிய தேவர்களால் வணங்கப்படுபவரும், ஆயுதங்களைக் கொண்ட அழகிய பன்னிரண்டு கைகளை உடையவரும், காற்றைத் தேரோட்டியாய்க் கொண்டு அழகிய கோழிக்கொடியுடையவரும், யோகிகளின் இதயத் தாமரையின் நடுவில் வசிப்பவருமான முருகனை வணங்குகிறேன்.

विरिञ्चेश वल्लीन्द्रदेवेशमुख्यं
प्रशस्तामरस्तोमसंस्तूयमानम् ।
दिश त्वं दयालो श्रियं निश्चलां मे
विना त्वां गतिः का प्रभो मे प्रसीद ॥ १० ॥

விரிஞ்சேசவல்லீந்த்ர தேவேசமுக்யம்
ப்ரசஸ்தாமரஸ்தோமஸம்ஸ் தூயமானம் ।
திச த்வம் தயாலோ ச்ரியம் நிச்சலாம் மே
வினுத்வாம் கதி:கா ப்ரபோ மேப்ரஸீத ॥

பிரம்மா, விஷ்ணு, இந்திரன் மற்றும் தேவர் கூட்டங்களால் துதிக்கப்படுபவரே, தயை உடையவரே, அழியாத செல்வத்தைக் கொடு. உன்னைத் தவிர வேறு புகலிடம் எனக்கு இல்லை. எனக்கு அருள் செய்வாயாக

पदाम्भोजसेवा समायातवृन्दा-
रकश्रेणिकोटीरभास्वल्ललाटम् ।
कलत्रोल्लसत्पार्श्वयुग्मं वरेण्यं
भजे देवमाद्यं त्वहीनप्रभावम् ॥ ११ ॥

பதாம்போஜஸேவா ஸமாயாதப்ருந்தா-
ரகச்ரேணிகோடீர பாஸ்வல்லலாடம்।
கலத்ரோல்லஸத் பார்ச்வ யுக்மம் வரேண்யம்
பஜே தேவமாத்யம் த்வஹீனப்ரபாவம் ॥

திருவடித் தாமரைகளைத் தொழுவதற்காக வந்த தேவக் கூட்டங்களின் மகுடத்தால் ஒளிவிடுகிற திருவடியை உடையவரும், இரண்டு பக்கங்களிலும் வல்லி தேவஸேனை ஆகிய இரண்டு மனைவிகளைக் கொண்டவரும், உயர்ந்தவரும், குறைவற்ற புகழோடு கூடிய முதற்கடவுளுமான முருகனை வணங்குகிறேன்.

भवाम्भोधिमध्येतरङ्गोत्पतन्तं
प्रभो मां सदापूर्ण दृष्ट्या समीक्ष्य ।
भवद्भक्तिनावोद्धर त्वं दयालो
सुगत्यन्तरं नास्ति देव प्रसीद ॥ १२ ॥

பவாம் போதி மத்யேதரங்கோத்பதந்தம்
ப்ரபோ மாம் ஸதாபூர்ண த்ருஷ்ட்யா ஸமீக்ஷ்ய ।
பவத் பக்திநாவோத்தர த்வம் தயாலோ
ஸுகத்யந்தரம் நாஸ்தி தேவப்ரஸீத ॥

பிறவிக் கடலின் அலைகளில் மூழ்கித் தவிக்கிற என்னை உன் முழுப் பார்வையால் நோக்கி, உன் பக்தியாகிற ஓடத்தால் கரையேற்றிடுவாய். எனக்கு வேறு நல்வழி கிடையாது.

गले रत्नभूष तनौ मञ्जुवेषं
करे ज्ञानशक्तिं दरस्मेरमास्ये ।
कटिन्यस्तपाणिं शिखिस्थं कुमारं
भजेऽहं गुहादन्यदैवं न मन्ये ॥ १३ ॥

கலே ரத்னபூஷம் தனௌ மஞ்ஜுவேஷம்
கரே ஞானசக்திம் தரஸ்மேரமாஸ்யே ।
கடின்யஸ்தபாணிம் சிகிஸ்தம் குமாரம்
பஜேஃஹம் குஹாதன்ய தைவம் நமன்யே ॥

கழுத்தில் ரத்னமாலைகளும், உடலில் அழகிய அலங்காரமும், கையில் ஞான வேலும், வாயில் புன் சிரிப்பும், கொண்டு இடுப்பில் வைத்த கையுடன், மயிலில் வீற்றிருக்கும் முருகனை நான் வணங்குகிறேன். வேறு கடவுளை நினைக்கமாட்டேன்.

दयाहीनचित्तं परद्रोहपात्रं
सदा पापशीलं गुरोर्भक्तिहीनम् ।
अनन्यावलम्बं भवन्नेत्रकारुण्य
सारेण मां भो पवित्रं कुरु त्वम् ॥ १४ ॥

தயாஹீன சித்தம் பரத்ரோஹ பாத்ரம்
ஸதா பாபசீலம் குரோர் பக்திஹீனம் ।
அனந்யாவலம்பம் பவந்நேத்ரகாருண்ய
ஸாரேண மாம் போ பவித்ரம் குருத்வம் ॥

தயையில்லாத மனதும் பிறருக்கு த்ரோகம் செய்வதும் எப்பொழுதும் பாவத்தைச் செய்வதும் குருபக்தியில்லாமலும் வேறு ஆதாவு இல்லாமலுமிருக்கும் என்னை உன் கருணை நோக்கால் பார்த்து புனிதமாகச் செய்வாயாக.

महासेन गाङ्गेय वल्लीसहाय
प्रभो तारकारे षडास्यामरेश ।
सदा पायसान्नप्रदातर्गुहेति
स्मरिष्यामि भक्त्या सदाऽहं विभोत्वाम् ॥ १५ ॥

மஹாஸேந காங்கேய வல்லீஸஹாய
ப்ரபோ தாரகாரே ஷடாஸ்யாமரேச ।
ஸதா பாயஸாந்நப்ரதாதர் குஹேதி
ஸ்மரிஷ்யாமி பக்த்யா ஸதா:ஹம் விபோத்வாம்॥

தேவஸேநாபதியும் கங்கையின் புதல்வனும், வல்லியின் கணவரும், ப்ரபுவும் தாரகனை வென்றவருமான ஆறுமுகக் கடவுளே! தேவர் தலைவனே! எப்பொழுதும் பாயஸான்னம் கொடுப்பவரே, குஹனே என்று எப்பொழுதும் நான் உன்னையே நினைக்கிறேன்.

प्रतापस्य बाहो नमद्वीरबाहो
प्रभो कार्तिकेयेष्टकामप्रदेति ।
यदा ये पठन्ते भवन्तं तदैव
प्रसन्नस्तु तेषां बहुश्रीर्ददासि ॥ १६ ॥

ப்ரதாபஸ்ய பாஹோ நமத்வீரபாஹோ
ப்ரபோ கார்த்திகேயேஷ்டகாமப்ரதேதி।
யதா யே படந்தே பவந்தம் ததைவ
ப்ரஸன்னஸ்து தேஷாம் பஹுஸ்ரீர்ததாஸி ॥

பகைவர் நடுங்கும் கைகளை உடையவரும், வீரபாஹுவால் வணங்கப்பட்டவரும், க்ருத்திகா தேவிகளின் மகனும், வேண்டியதைக் கொடுப்பவனும் ஆன உன் துதியைப் படிப்பவனுக்கு அருள் புரிந்து நிறைந்த செல்வத்தையளிக்கிறாய்;

अपारेऽतिदारिद्र्यपाथोधिमध्ये
भ्रमन्तं जनिग्राहपूर्णे नितान्तम् ।
महासेन मामुद्धर त्वं कटाक्षा-
वलोकेन किञ्चित्प्रसीद प्रसीद ॥ १७ ॥

அபாரே திதாரித்ர்யபாதோதிமத்யே
ப்ரமந்தம் ஜனிக்ராஹபூர்ணே நிதாந்தம் ।
மஹாஸேன மாமுத்கரத்வம் கடாக்ஷா-
வலோகேன கிஞ்சித்ப்ரஸீத ப்ரஸீத ॥

கரை காண முடியாத வறுமையென்னும் கடலில் சுழன்று கொண்டு பிறவியென்னும் முதலையால் பிடிக்கப்பட்டுத் தவிக்கும் என்னை, தேவஸேநாபதியே, நீ உன்னுடைய கடைக்கண் பார்வையினால் சிறிது தயையுடன் காப்பாற்றுவாயாக.

स्थिरां देहि भक्तिं भवत्पादपद्मे
श्रियं निश्चलां देहि मह्यं कुमार ।
गृहं चन्द्रतारं स्ववंशाभिवृद्धिं
कुरु त्वं प्रभो मे मनः कल्पसाल ॥ १८ ॥

ஸ்திராம் தேஹி பக்திம் பவத்பாத பத்மே
ச்ரியம் நிச்சலாம் தேஹி மஹ்யம் குமார ।
குஹம் சந்த்ரதாரம் ஸ்வவம்சாபிவ்ருத்திம்
குருத்வம் ப்ரபோ மே மன: கல்பசால ॥

உன் திருவடித்தாமரைகளில் அசைக்கமுடியாத பக்தியைக் கொடு. அவ்வாறே அழியாத செல்வத்தையும் எனக்குக் கொடுத்தருள்வாய். கல்ப வ்ருக்ஷத்திற்கொப்பானவரே! என் வம்சம் தழைத்தோங்கச் செய்வாயாக.

नमस्ते नमस्ते महाशक्तिपाणे
नमस्ते नमस्ते लसद्वज्रपाणे ।
नमस्ते नमस्ते कटिन्यस्तपाणे
नमस्ते नमस्ते सदाभीष्टपाणे ॥ १९ ॥

நமஸ்தே நமஸ்தே மஹாசக்திபாணே
நமஸ்தே நமஸ்தே லஸத்வஜ்ரபாணே ।
நமஸ்தே நமஸ்தே கடிந்யஸ்தபாணே
நமஸ்தே நமஸ்தே ஸதாபீஷ்டபாணே ॥

பெரிய வேலைக் கையில் கொண்டவரே! வஜ்ராயுதத்தை உடையவரே! இடுப்பில் கை வைத்திருப்பவரே! பக்தர்கள் வேண்டியதெல்லாம் வாரி வழங்குகிற கைகளையுடையவரே! உனக்குப் பலமுறை வணக்கம்.

नमस्ते नमस्ते महाशक्तिधारे
नमस्ते सुराणां महासौख्यदायिन् ।
नमस्ते सदा कुक्कुटेशाख्यकत्वं
समस्तापराधं विभो मे क्षमस्व ॥ २० ॥

நமஸ்தே நமஸ்தே மஹாசக்திதாரே
நமஸ்தே ஸுராணாம் மஹாஸெளக்யதாயின் ।
நமஸ்தே ஸதா குக்குடேசாக்யகத்வம்
ஸமஸ்தாபராதம் விபோ மே க்ஷமஸ்வ ॥

கையில் சிறந்த வேலைக்கொண்டு தேவர்களுக்கு இன்பத்தை அளிப்பவரே! கோழிக்கொடியோனென்று புகழ்பெற்றவரே! உமக்கு வணக்கம். என் எல்லாக் குற்றங்களையும் பொறுத்தருள்வீராக.

कुमारात्परं कर्मयोगं न जाने
कुमारात्परं कर्मशीलं न जाने ।

य एको मुनीनां हृदब्जाधिवासः
शिवाङ्कं समारुह्य सत्पीठकल्पम् ॥ २१ ॥

குமாராத்பரம் கர்மயோகம் நஜானே
குமாராத்பரம் கர்ம சீலம் நஜானே ।
ய ஏகோ முனீனும் ஹ்ருதப்ஜா திவாஸ :
சிவாங்கம் ஸமாருஹ்ய ஸத்பீடகல்பம் ॥

சிவபெருமானின் மடியில் உட்கார்ந்து மகிழ்பவரும், முற்றும் துறந்த முனிவர்களின் இதயத் தாமரையில் வசிப்பவருமான முருகனைத் தவிர வேறு கார்யமோ ஒழுக்கமோ ஒன்றும் எனக்குத் தெரியவில்லை.

विरिञ्चाय मन्त्रोपदेशं चकार
प्रमोदेन सोऽयं तनोतु श्रियं मे ।
यमाहुः परं वेद शूरेषु मुख्यं
सदा यस्स्वशक्त्या जगद्भीतभीतम् ॥ २२ ॥

விரிஞ்சாய மந்த்ரோபதேசம் சகார
ப்ரமோதேன ஸோऽயம் தனோது ச்ரியம் மே ।
யமாஹு: பரம் வேத சூரேஷு முக்யம்
ஸதா யஸ்ஸ்வசக்த்யா ஜகத்பீத பீதம் ॥

நான்முகனுக்கு எவ மந்திரோபதேசம் செய்தருளியவரோ, அவர் செல்வத்தை அளிக்கட்டும். சூரர்களில் உயர்ந்தவராய் எவரை எப்பொழுது அழைக்கிறார்களோ, உலகத்தைத் துன்புறுத்திய அரக்கர்களை எப்பொழுதும் தன் வேலினால் அடக்கியவர் எவரோ அந்த முருகப்பெருமான் எனக்குச் செல்வத்தையளிக்கட்டும்.

यमालोक्य देवाः स्थितं स्वर्गसारं
सदोङ्काररूपं चिदानन्दमीडे ।

गुहस्तोत्रमेतत् कृतान्तारिसूनोः
भुजङ्गप्रयातेन पद्येन कान्तम् ।
जना ये पठन्ते सदा ते महान्तो
मनोवाञ्छितं सर्वकामान् लभन्ते ॥ २३ ॥

யமாலோக்ய தேவா: ஸ்திதம் ஸ்வர்கஸாரம்
ஸதோங்கார ரூபம் சிதானந்தமீடே।
குஹஸ்தோத்ர மேதத் க்ருதாந்தாரிஸூனோ:
புஜங்க ப்ரயாதேன பத்யேன காந்தம்।
ஜனா யே படந்தே ஸதா தே மஹாந்தோ
மனோ வாஞ்சிதம் ஸர்வகாமான் லபந்தே॥

ஸ்வர்கத்தின் ஸாரமாய் நிலைபெற்றிருப்பவராயும், ஸத் ஆகிய ஓங்காரத்தின் பொருளாயும், அறிவு ஆனந்த ஸ்வரூபமாகவும் எவரைத் தேவர்கள் பார்க்கிறார்களோ, அவரை (முருகப் பெருமானை)த் துதிக்கிறேன். யமனையழித்த பரமசிவனுடைய புத்திரனை முருகனுடைய புஜங்க ப்ரயாதமென்னும் ஸ்லோகத்தால் பிரகாசிக்கிற இந்த முருகனுடைய ஸ்தோத்ரத்தை எந்த ஜனங்கள் படிக்கிறார்களோ அவர்கள் மிகவும் உன்னத நிலையையடைந்து மனதில் நினைத்தவற்றையெல்லாம் அடைவார்கள்.

குறிப்பு :—முருகப்பெருமானின் சிறந்த இத்துதி வேதம் சாஸ்திரங்கள் சொல்லியுள்ள எங்கும் நிறைந்த பரம்பொருளாகச் சொல்லுகிறார். அறிவினால் அறியப்பட்டு அதுவாகவே ஆகிற பரம்பொருள், என்றும் இரண்டற்ற ஆத்ம ஸ்வரூபம் என்னும் உண்மை புலப்படுகிறது. ஈசனும் உமையும் இருவரும் சேர்ந்த உருவமே முருகன் என்னும் இந்த மறைசாற்றும் உண்மையை அறிந்து இவர்களை வழிபட்டு மேன்மையடைவோமாக.

சுபம்.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

ஞானயோகம்

பாஷ்ய பாவக்ஞ

பிரம்மஸ்ரீ வரஹூர் கல்யாணசுந்தர சாஸ்திரிகள்
(U. G. C. Professor of Samskrit
Vivekananda College, Madras-4)

முன்னுரை

लोकेऽस्मिन् द्विविधा निष्ठा पुरा प्रोक्ता मयानघ ।
ज्ञानयोगेन सांख्यानां कर्मयोगेन योगिनाम् ॥ 3-3 ॥

என்று பகவத் கீதையில் பகவான் கூறியுள்ள இரு யோகங்களுள் ஞானயோகம் ஒன்ருகும். (2·49, 10·10, 18·57) ஆகிய இடங்களில் இதையே புத்தியோகம் எனவும் பகவான் கூறியிருக்கிருர். பக்தியோகத்தைத் தன்னுள் கொண்ட கர்மயோகம் என்பது மற்ருென்ருகும். அவ்விரண்டு யோகங்களும் அதாவது கர்மயோகம், பக்தியோகம் எனப்படும் இருயோகங்களும் முறையே ஞானயோகத்தை நாம் பெறுவதற்கு உபாயங்கள் ஆகும். இவ்விஷயங்களை எல்லாம் விளக்கி முன்பே 'கர்மயோகம்' 'பக்தியோகம்' என்ற இரு சிறு நூல்களை தனித்தனியே நாம் வெளியிட்டு இருக்கிருேம். விவரங்களை அறிய விரும்புவோர் அவற்றைப் பார்த்து அறிந்து கொள்ளலாம். அவற்றின் தொடர்பாகவே இப்பொழுது 'ஞானயோகம்' என்னும் இக் கட்டுரையை இங்கு எழுதுகிருேம்.

तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदिषन्ति यज्ञेन
दानेन तपसानाशकेन ।

आरुरुक्षोर्मुनेर्योगं कर्म कारणमुच्यते ।
कषायपक्तिः कर्माणि ज्ञानं तु परमा गतिः ।
कषाये कर्मभिः पक्वे ततो ज्ञानं प्रवर्तते ॥
चित्तस्य शुद्धये कर्म न तु वस्तूपलब्धये ॥

என்பன போன்ற வாக்யங்களே கீழ்க்கூறியுள்ள விஷயங்களுக்குப் பிரமாணங்களாகும்.

இக்காரணம் பற்றியேதான் பகவான் பகவத் கீதையிலேயே

सांख्ययोगौ पृथक् बालाः प्रवदन्ति न पण्डिताः ।
एकमप्यास्थितः सम्यक् उभयोर्विन्दते फलम् ॥
यत्सांख्यैः प्राप्यते स्थानं तद्योगैरपि गम्यते
एकं सांख्यं च योगं च यः पश्यति स पश्यति ॥

என்றும் கூறியிருக்கிறார்.

அர்ஜுனனை வ்யாஜமாக வைத்து நம் எல்லோருக்கும் இந்த யோகத்தை உபதேசிக்கவே பகவத்கீதை தோன்றியதாகும். சோகமோஹமெனப்படும் அளவில்லாத துக்கத்தில் ஆழ்ந்து கிடந்த அர்ஜுனனை இந்த யோகத்தின் மூலமே அதிலிருந்து விடுவித்து கடமையையும் செய்வித்துப் பேரானந்தத்தை அடையச் செய்த நூலும் இதுவேயாகும்.

தோற்றுவாய்

நாம் அனுபவிப்பது என்ன ?

பகவத்கீதையில் ஒன்பதாவது அத்யாயம் முப்பத்து மூன்றாவது ச்லோகத்தில் பகவான் அர்ஜுனனைப் பார்த்து

अनित्यमसुखं लोकमिमं प्राप्य भजस्व माम् ।

என்று கூறியிருக்கிறார். அதிலிருந்து நாம் வாழ்ந்து வரும் இந்த மனுஷ்யலோகம் நிலையற்றதென்றும் ஸுகமற்றதென்றும் தெளிவாகத் தெரிகின்றது. அவ்வாறே

मात्रास्पर्शास्तु कौन्तेय शीतोष्णसुखदुःखदाः ।
आगमापायिनोऽनित्याः तांस्तितिक्षस्व भारत ॥

என்று இரண்டாம் அத்யாயத்திலும்

ये हि संस्पर्शजा भोगा दुःखयोनय एव ते ।
आद्यन्तवन्तः कौन्तेय न तेषु रमते बुधः ॥

என்று ஐந்தாம் அத்யாயத்திலும்

विषयेन्द्रियसंयोगाद्यत्तदग्रेऽमृतोपमम्
परिणामे विषमिव तत्सुखं राजसं स्मृतम् ।

என்று பதினெட்டாமத்தியாயத்திலும் கூறியிருக்கிறார். இதிலிருந்து நாம் நமது உடல்பொருளாவியெல்லாம் ஒருமுகப்படுத்தி எதை ஸுகமெனக் கருதி அடைய விரும்புகிறோமோ, எதற்கு மேற்பட்ட ஸுகமும் இல்லையென்று கருதுகிறோமோ, அதை பகவான் துக்கமென்றே கருதுகிறார் என்பதும் தெளிவாகின்றது.

இவ்விஷயத்தில் ஆன்றோர் கூறியுள்ள ஒரு விஷயத்தையும் கவனிப்போம்.

असारेऽखिलसंसारे सुखभ्रान्तिः शरीरिणाम् ।
लालापान इवाङ्गुष्ठे बालानां स्तन्यविभ्रमः ॥

விரல் சுவைக்கும் குழந்தைகளுக்கு அவ்விரலை சுவைக்கும் போது வாயிலிருந்தே உண்டாகும் உமிழ்நீரில் தாய்ப்பாலே இது என்ற மயக்கம் எப்படி ஏற்படுகின்றதோ அப்படியே பிறவியை அடைந்த

எல்லா ஜீவராசிகளுக்கும் அஸாரமான விஷய போகங்களை அனுபவிக்கும்பொழுது ஏற்படும் துயரத்தில் ஸுகமே இது என்ற மயக்கம் ஏற்படுகின்றதென்பதே இதன் கருத்தாகும். 'श्वो भावामर्त्यस्य यदन्तकैतत्सर्वेन्द्रियाणां जरयन्ति तेजः' என்னும் கடவல்லீவாக்யமும் இக்கருத்தையேதான் வலுப்படுத்துகின்றது,

इन्द्रियस्येन्द्रियस्यार्थे रागद्वेषौ व्यवस्थितौ
तयोर्न वशमागच्छेत् तौ ह्यस्य परिपन्थिनौ
इन्द्रियाणां हि चरतां यन्मनोऽनुविधीयते।
तदस्य हरति प्रज्ञां वायुर्नावमिवाम्भसि॥

என்பன போன்ற பகவத் வாக்கியங்களும் இக்கருத்தையேதான் பிரதிபலிக்கச் செய்கின்றன. இக்காரணம் பற்றியே

गुडनिम्बरसौ यद्वदन्यथा भासते विषात्।
सुखदुःखे तद्वदेव भातो नोऽविद्ययाऽन्यथा॥

என்றும் கூறப்படுகின்றது. விஷம் தீண்டியவனுக்கு இனிப்பும் கசப்பும் மாறித் தோன்றுவது போல் அறியாமை உள்ளவனுக்கு ஸுகமும் துக்கமும் மாறித் தோன்றுகின்றது என்பது இதன் பொருளாகும். ஆகவே நாம் இப்பொழுது ஸுகமெனக் கருதுவது ஸுகமேயல்ல என்பதை உணர வேண்டும்.

ஆயினும் அதைப் பெறுவதற்காகவே நாம் நம்மையும் அறியாமலேயே முயற்சிக்கின்றோம். அதற்குக் காரணம் என்ன என்பதையும்

अथ केन प्रयुक्तोऽयं पापं चरति पूरुषः
अनिच्छन्नपि वार्ष्णेय बलादिव नियोजितः॥ 3-36॥

என் அர்ஜுனனைக் கொண்டே கேட்கச் செய்து பல துறைகளில் பகவானே அதை விளக்கியிருக்கின்றார். அவரைத் தவிர வேறு யாரால் அதை விளக்க முடியும்? அவருடைய விளக்கத்தைவிட்டு வேறு யாருடைய விளக்கத்தைத்தான் நாமும் நம்புவது ?

துன்பத்திற்குக் காரணம் எது ?

முதன் முதலில் இரண்டாம் அத்யாயத்தில் அவர் கூறியுள்ள சில விஷயங்களைக் கவனிப்போம்

ध्यायतो विषयान्पुंसः सङ्गस्तेषूपजायते ।
सङ्गात्संजायते कामः कामात्क्रोधोऽभिजायते ॥ 2-62
क्रोधाद्भवति संमोहः संमोहात्स्मृतिविभ्रमः ।
स्मृतिभ्रंशाद्बुद्धिनाशो बुद्धिनाशात्प्रणश्यति ॥2-63॥

என்று ஓரிடத்தில் கூறுகிறார்.

ஒருவன் ஐம்புலன்களால் நுகரக்கூடிய ஒவ்வொரு விஷயத்தையும் திரும்பத் திரும்ப தனது நினைவிற்குக் கொண்டு வந்து சிந்திப்பதனால் அதில் பற்று ஏற்படுகின்றது. அதன் காரணமாக அதை எப்படியும் தான் அடையவேண்டும் என்ற ஆசை ஏற்படுகின்றது. பெரும்பாலும் அது தடைப்படும் காரணமாகக் கோபம் உண்டாகின்றது. (இல்லையேல் சோகமுண்டாகின்றது,) அதன் காரணமாகத் தான் செய்ய வேண்டியது எது செய்யக்கூடாதது எது என்ற அறிவு அழிந்துபோகிறது. அதாவது மனத்தில் பெரும் கலக்கம் ஏற்படுகின்றது. அதன் காரணமாகத் தான்கற்றடைந்த நுண்ணறிவு மறைந்துவிடுகிறது. அதன் காரணமாக் மனது ஓய்வடைகின்றது. அதன் காரணமாகவே ஒருவன் பலவகையான துன்பங்களுக்கு ஆளாகிறான் என்பதே இவ்விரு ச்லோகங்களின் கருத்தாகும்.

இனி அவர் மூன்றும் அத்யாயத்தில் கூறியுள்ள சில விஷயங்களையும் கவனிப்போம்.

काम एष क्रोध एष रजोगुणसमुद्भवः ।
महाशनो महापाप्मा विद्ध्येनमिह वैरिणम् ॥ 3-37 ॥
इन्द्रियाणि मनो बुद्धिरस्याधिष्ठानमुच्यते
एतैर्विमोहयत्येष ज्ञानमावृत्य देहिनम् ॥ 3-40 ॥

என்று ஓரிடத்தில் கூறுகின்றார்.

ஒவ்வொருவனுக்கும் அவ்வந்த விஷயங்களில் முதன் முதலில் ஏற்படும் ஆசையே அவனவனைத் தன் வசப்படுத்தித் துன்பங்களுக்கே காரணமான விஷயங்களை யடைவதற்கான முயற்சிகளிலேயே இறங்கச்செய்கின்றது. இதுவே பற்பல காரணங்களால் தடைப்படும் நிலையில் கோபமாக மாறுகின்றது. ஆசையில்லையேல் கோபமில்லை. ரஜோகுணத்தின் அடிப்படையிலேயே இவ்வாசை எழுகின்றது. 'रजसो लोभ एव च' என்பதும் பகவத் வாக்யமாகும்.

न जातु कामः कामानामुपभोगेन शाम्यति
हविषा कृष्णवर्त्मेव भूय एवाभिवर्धते ॥

அதாவது, நெய்யை ஊற்ற ஊற்றத் தீ எப்படி மேன்மேலும் வளருமேயன்றி ஒடுங்காதோ அவ்வாறே ஆசையென்பது அந்தந்த விஷயங்களை அனுபவிப்பதால் மேன்மேலும் வளருமேயன்றி ஒடுங்காது என்றபடி இந்த ஆசையானது பெரும்தீனிவேண்டி அவற்றைப் பெறுவதற்காக நம்மைப் பெரும்பெரும் பாபத்தையும் செய்யத் தூண்டுகின்றது. ஆகவே ஒவ்வொருவனுக்கும் அவனவனது ஆசையைத் தவிர வேறு எதிரியே கிடையாது. ஆசையேதான் முதல்

எதிரி என உணரவேண்டும். ஐம்புலன்கள் மனது புத்தியெனப்படும் இடங்களில் ஒளிந்து நின்று அவைகளைத் தன்னிஷ்டம் போல் தூண்டிவிடுவதன் மூலம் ஒவ்வொருவனையும் அவனவனது நுண்ணறிவை மறைத்து மயங்கச் செய்கின்றது என்பதே இவ்விரு ச்லோகங்களின் கருத்தாகும்.

இக்காரணம் பற்றியேதான்

पुण्यस्य फलं इच्छन्ति पुण्यं नेच्छन्ति मानवाः ।
न पापफलमिच्छन्ति पापं कुर्वन्ति यत्नतः ॥

என்று கூறப்பட்டுள்ளது. மனிதர்கள் உண்மையான ஸுகத்தை விரும்புகிறார்களேயன்றி அதற்கான உபாயங்களை நாடுவதில்லை. அவ்வாறே துன்பங்களை வெறுக்கிறார்களேயன்றி அவைகளைக் கொடுக்கும் காரியங்களையே செய்கிறார்கள் என்பது பொருள்.

இனி அவர் பதினாறும் அத்யாயத்தில் கூறியுள்ள சில விஷயங்களைக் கவனிப்போம்.

आशापाशशतैर्बद्धाः कामक्रोधपरायणाः ।
ईहन्ते कामभोगार्थमन्यायेनार्थसंचयान् ॥ 16-12 ॥
अनेकचित्तविभ्रान्ता मोहजालसमावृताः
प्रसक्ताः कामभोगेषु पतन्ति नरकेऽशुचौ ॥ 16-16 ॥

என்று ஓரிடத்தில் கூறுகின்றார்.

சிற்றின்ப ஆசைகளாகின்ற பாசங்களால் கட்டுண்டு மாறி மாறி ஏற்படும் கோபதாபங்களுக்கும் வசப்பட்டு அவ்வின்பங்களைப் பெறுவதற்காகத் தீயவழிகள் புலவற்றிலும் ஈடுபட்டு அதன் மூலம் ஏற்படும் பலவிதமான குழப்பங்களுக்காளாகி அறியாமையெனும் வலையினுளகப்பட்டு அதனின்றும் வெளியேற வழியறியா

ம்ல் பற்பல துன்பங்களுக்குப் பெரும்பாலானோர் ஆளாகின்றார்கள் என்பதே இவ்விரு ச்லோகங்களின் கருத்தாகும்.

ஸ்வர்கம் ஸுகமா?

அப்படியாயின் மானுஷபோகங்களெனப்படும் இப்பிறவியிலேயே நாம் அனுபவிக்கத்தக்க இவ்வுலகத்தில் அடையக்கூடிய விஷயங்களில் அறவே ஆசை கொள்ளாமல் திவ்ய போகங்களெனப்படும் மறுபிறவியில் நாம் அனுபவிக்கத் தக்க ஸ்வர்க்கம் போன்ற வேறு உலகங்களில் அடையக்கூடிய பொருள்களில் ஆசை வைத்து அவற்றை அடைவதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபடலாமோவெனில் அவ்விஷயத்திலும் பகவான் பகவத் கீதையில் என்ன கூறியிருக்கின்றார் என்பதையும் சிறிது கவனிப்போம்.

यामिमां पुष्पितां वाचं प्रवदन्त्यविपश्चितः ।
वेदवादरताः पार्थ नान्यदस्तीति वादिनः ॥ 2-42 ॥
कामात्मानः स्वर्गपरा जन्मकर्मफलप्रदाम् ।
क्रियाविशेषबहुलां भोगैश्वर्यगतिं प्रति ॥ 2-43 ॥
भोगैश्वर्यप्रसक्तानां तयापहृतचेतसाम्
व्यवसायात्मिका बुद्धिः समाधौ न विधीयते ॥ 2-44

என்று இரண்டாம் அத்யாயத்தில் அவர் கூறியிருக்கின்றார்.

ஸ்வர்கம் போன்ற வேறு உலகங்களில் நாம் அனுபவிக்க வேண்டிய போகங்களே உண்மையான போகங்களாகும். அவற்றைத் தவிர வேறு ஒன்றுமே கிடையாது. ஆகவே அவற்றைப் பெறுவதற்கு ஸாதனங்களென்ன வேதங்களில் கூறப்பட்டுள்ள பல

வகையான கார்யங்களையும் இப்பிறவியிலேயே நாம் செய்து மறுபிறவிகளில் அவற்றை அனுபவிப்பதே சிறந்த வழியாகும் எனக் கூறுபவர்களும் ஆசை வசப்பட்டு அறியாமையினாலேயே அவ்வாறு கூறுகின்றார்களேயன்றி வேறல்ல. வேதங்களின் உட்கருத்து அவர் போன்றவர்களுக்கு விளங்காது என்பதே இம்மூன்று ச்லோகங்களின் கருத்தாகும். மற்றும் ஒன்பதாம் அத்யாயத்திலும்

ते तं भुक्त्वा स्वर्गलोकं विशालं
क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति ।
एवं त्रयीधर्ममनुप्रपन्ना
गतागतं कामकामा लभन्ते ॥ 9-21 ॥

என்றும் பகவான் கூறியிருக்கின்றார். வேதங்களில் கர்மகாண்ட பாகங்களில் கூறப்பட்டுள்ள பலவகையான கர்மாக்களைச் செய்வதன் பயனாகப் பலர் அவர்கள் விரும்பியவாறே விசாலமான ஸ்வர்க லோகத்தை அடைந்து அங்கு அனுபவிக்கவெண்ணிய போகங்களையெல்லாம் அனுபவித்துவிட்டு அதற்கான புண்யம் கரைந்து போனவுடன் அங்கேயே தங்கி நிற்க வழி இல்லாததால் திரும்பவும் மனுஷ்யலோகமெனப்படும் இவ்வுலகிற்கே வந்து சேருகிறார்கள். காமவசப்பட்டு பயன்களைக் கருதியே காரியங்களைச் செய்துகொண்டிருப்பவர்கள் கதாகதம் எனப்படும் பிறப்பு இறப்பு என்ற இந்தச் சுழலில் சிக்கியே ஆகவேண்டுமென்பதே இந்த ச்லோகத்தின் கருத்தாகும்.

कुर्वते कर्म भोगाय कर्म कर्तुं च भुञ्जते ।
नद्यां कीटा इवावर्तादावर्तान्तरमाशुते ॥
व्रजन्तो जन्मनो जन्म लभन्ते नैव निर्वृतिम् ॥

என்ற வித்யாரண்ய வாக்யமும் இங்கு கவனத்திற் குரியது. சாப்பிடுவதற்காக வேலை செய்துகொண்டும் வேலை செய்வதற்காகச் சாப்பிட்டுக் கொண்டும் காலத்தைக்கடத்திக் கொண்டிருப்பவர்கள் ஒரு மஹாநதியில் விழுந்த புழுக்கள் ஒரு சுழலிலிருந்து மற்றொரு சுழலிலும் அதிலிருந்து மற்றொன்றிலும் மாறிமாறி விழுந்து தவிப்பதைப்போல் ஒரு பிறவியிலிருந்து மற்றோர் பிறவியிலும், அதிலிருந்து மற்றொன்றிலும் மாறிமாறி விழுந்து தவிக்கின்றார்களேயன்றி ஸுகத்தை அடைவதில்லை என்பதே இதன் பொருளாகும். ஸ்வர்கலோகமென்ன ப்ரம்மலோகத்தை அடைந்தவனது கதியும் இதுவேதான் என்பதையும் எட்டாம் அத்யாயம் பதினாரும் ச்லோகத்திலேயே आब्रह्मभुवनाल्लोकाः पुनरावर्तिनोऽर्जुन என்று பகவான் கூறிவிட்டார்.

प्लवा ह्येते अदृढा यज्ञरूपा
अष्टादशोक्तमवरं येषु कर्म ।
एतच्छ्रेयो येऽभिनन्दन्ति मूढा
जरामृत्युं ते पुनरेवापियन्ति ॥

अविद्यायां बहुधा वर्तमाना
वयं कृतार्था इत्यभिमन्यन्ति बालाः ।
यत्कर्मिणो न प्रवेदयन्ति रागात्
तेनातुराः क्षीणलोकाश्च्यवन्ते

इष्टापूर्तं मन्यमाना वरिष्ठं
नान्यच्छ्रेयो वेदयन्ते प्रमूढाः ।
नाकस्य पृष्ठे ते सुकृतेऽनुभूत्वा
इमं लोकं हीनतरं वा विशन्ति ॥

परीक्ष्य लोकान् कर्मचितान्
ब्राह्मणो निर्वेदमायान्नास्त्यकृतः कृतेन ।
तद्यथेह कर्मजितो लोकः क्षीयते
एवमेवामुत्र पुण्यजितो लोकः क्षीयते ॥

जानाम्यहं शेवधिरित्यनित्यं
न ह्यध्रुवैः प्राप्यते हि ध्रुवं तत् ।
ततो मया नाचिकेतश्चितोऽग्निः
अनित्यैः द्रव्यैः प्राप्तवानस्मि नित्यम् ॥

यो वै भूमा तत्सुखं तदमृतम् । नाल्पे
सुखमस्ति यदल्पं तन्मर्त्यम् ॥

என்பன போன்ற உபநிஷத் வாக்யங்களின் கருத்துக்களையேதான் பகவான் நமக்குத் தெளிவாக முன்கூறியபடி உபதேசித்திருக்கின்றார்.

வினைகளும் அவற்றின் பயன்களும்

நாம் செய்யும் பலவகையான கார்யங்களையும் பயன்களையும் பகவான் மூன்றாகப் பிரித்துக் கூறியிருக்கின்றார்.

अनिष्टमिष्टं मिश्रं च त्रिविधं कर्मणः फलम् ।
भवत्यत्यागिनां प्रेत्य न तु संन्यासिनां क्वचित् ॥

மனிதப் பிறவியினும் கீழான பிறவிகளுக்குக் காரணமாய் நின்று துக்கத்தையே பயக்கும் பாபமே அதாவது கொடிய செயல்களே அநிஷ்டமெனப்படும். மனிதப் பிறவியினும் மேலான பிறவிகளுக்குக் காரண

மாய் நின்று ஸுகத்தையே பயக்கும் புண்ணியமே அதாவது நற்செயல்களே இஷ்டமெனப்படும். மனிதப் பிறவிக்கே காரணமாய் நின்று ஸுக துக்கங்களைக் கலந்தே பயக்கும் பாபபுண்ணியங்களின் முன் கூறிய இருவகைச் செயல்களின் கலப்பே மிச்ரமெனப்படும். முக்குணங்களுள் கட்டுண்டு ஆன்ம அறிவைப் பெருமல் அறிவிலிகளாகவே இருக்கும் யாவரும் இவைகளிலிருந்து தப்பவே முடியாது. ஆன்ம அறிவைப் பெற்றவரையே இவை அணுகாது என்பதே இந்த ச்லோகத்தின் கருத்தாகும்.

पुण्येन पुण्यं पापेन पापमुभाभ्यामेव मनुष्यलोकम्
एवं हवाव न तपति। किमहं साधु नाकरवं किमहं
पापमकरवम् इति

என்பன போன்ற பல உபநிஷத் வாக்யங்களின் கருத்தையேதான் பகவான் இங்கு நமக்கு உபதேசிக்கின்றார்.

பிறவிச் சுழல்கள்

धर्माद्देवत्वमेति व्रजति पुनरधः पातकैस्स्थावरादीन्
देहान्प्राप्य प्रणश्यन्क्वचिदपि लभते मानुषत्वं च ताभ्याम्।
कर्मज्ञानोभयेन व्रजति विधिपदं मुच्यते कोऽपि तस्मिन्
रागी प्रत्येति भूयो जनिमिति विषमं बम्भ्रमीतीह लोकः ॥

இந்த ஒரே ச்லோகத்தில் கீழ்க் கூறிய அவ்வளவு விஷயங்களையும், ஏன் 'तस्माज्जुगुप्सेत' என்றபடி வைராக்கியத்தை உண்டுபண்ணுவதற்கென்றே சாந்தோக்ய உபநிஷத் ஐந்தாம் அத்யாயத்தில் கூறப்பட்டுள்ள பஞ்சாக்னி வித்யை என்னும் உபநிஷத் பாகத்தின்

ஏனைய விஷயங்களையும் ரத்னச் சுருக்கமாக நமக்கு ஒரு பெரியவர் எழுதி விளக்கியிருக்கின்றார். அதாவது

योनिमन्ये प्रपद्यन्ते शरीरत्वाय देहिनः ।
स्थाणुमन्येऽनुसंयन्ति यथाकर्म यथाश्रुतम् ॥

என்று கடவல்லியில் கூறியுள்ளபடி ஸ்வர்க ஸாதனமென வேதங்களில் கூறப்பட்ட யக்ஞம், யாகமெனப்படும் கர்மாக்களுள் ஏதாவது ஒன்றைச் செய்வதன் பயனாக அங்கு சென்று போகங்களை அனுபவிப்பதற்காக மனிதன் ஒரு சமயம் தேவயோனியை அடைகின்றான். வேதங்களால் செய்யக்கூடாதவையென தடை செய்யப்பட்டுள்ள கொலை, கொள்ளிவைத்தல் போன்ற கெட்ட காரியங்களை அறிந்தோ அறியாமலோ செய்வதன் பயனாக துக்கங்களையனுபவிப்பதற்காக நரகாதி லோகங்களில் பிறக்கின்றான். மரம் செடி கொடிகளெனப்படும் பிறவிகளையும் சில ஸமயம் அடைகின்றான். இவனது புண்ய பாபங்கள் ஸமநிலையை அடையும் பொழுதுதான் மனிதப் பிறவியை அடைகின்றான். வேதங்களில் கூறப்பட்டுள்ள கர்மாக்களையும் மானஸிக கர்மாக்களெனப்படும் உபாஸனைகளையும் சேர்த்துச் செய்வதன் பயனாக ப்ரம்மலோகத்தில் பிறவியெடுத்து அங்குள்ள போகங்களை அனுபவிக்கிறான். அதற்கான வினை தீர்ந்ததும் எஞ்சியுள்ள கர்மங்களின் பயனாக மறுபடியும் வேறு இடம் சென்று பிறக்கின்றான். எண்பத்தி நான்கு லக்ஷம் ஜீவராசி வகைகள் என சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளபடி மாறி மாறி அவற்றைப் பெறுவதற்காகப் பிறப்பதும் இறப்பதுமான சுழலில் அகப்பட்டுக்கொண்டு விடுதலையடைய வழியறியாமல் ஒவ்வொருவனும் ஓய்வின்றிச் சுற்றிக்கொண்டேயிருக்கிறான். ஆயிரத்திலொருவன் என்றபடி யாரோ ஒருவனே அறிவின் பயனாக இதிலிருந்து தப்புகிறான் என்பதே இச்சுலோகத்தின் கருத்தாகும்.

இதன் தொடர்பாகவே அந்தப் பெரியவரே எழுதியுள்ள மற்றோர் ச்லோகத்தையும் கவனிப்போம்.

दुःखं स्वर्गात्प्रपाते बहुविधनरके गर्भवासेऽतिदुःखम्
निःस्वातन्त्र्याशनायाग्रहगदरुदितैः शैशवे दुःखमेव ।
तारुण्येऽमर्षलोभव्यसनपरिभवोद्वेगदारिद्र्यदुःखं
वार्धक्ये शोकमोहेन्द्रियविलयगदैर्दुःखमन्तेऽतिदुःखम् ॥

ஸ்வர்கபோகம் முடிந்து அவ்விடம் விட்டு வெளியேற வேண்டிய நாள் நெருங்க அதை நினைத்து நினைத்து ஏற்படும் துக்கத்தினலேயே அம்மயமான அவன் சரீரம் உருகிவிடுகிறது. வெளியேறியபின் பாபத்தின் பயனாக ரௌரவாதி பாபலோகங்களை அடைந்து அங்குப் பல விதமான துக்கங்களை அனுபவிக்கிருன். கர்பவாஸத்தின் மூலம் அடையவேண்டிய பிறவியையடையநேரும்பொழுது, கர்போபநிஷத் ஏனைய புராணங்களில் கூறியுள்ளபடி பலவிதமான துக்கங்களை அனுபவிக்கிருன், பாரதந்த்ரியம், பசி, தாகம் க்ரஹபீடைகள் ஏனைய வியாதிகள் அழுகைகள் போன்றவற்றல் இளமைப்பருவத்தில் பல துக்கங்களை அனுபவிக்கிருன். கோபம், பேராசை, வேண்டாத விஷயங்களில் ஏற்படும் பற்று, பிறர்களால் ஏற்படும் அவமதிப்பு, எதிர்பாராமல் ஏற்படும் பல நிகழ்ச்சிகளால் மனதில் ஏற்படும் குழப்பம், ஏழ்மை போன்றவற்றல் நடுவயதில் பல துக்கங்களை யனுபவிக்கிருன். இஷ்ட வஸ்துக்களின் பிரிவு, மறதி, புலன்களில் ஏற்படும் பல வகையான குறைபாடுகள், எளிதாகவே ஏற்படும் பலவிதமான நோய்கள் போன்றவற்றல் வயதான நிலையில் துக்கங்களை அனுபவிக்கின்றன். மரணவஸ்தை என்று பிரஸித்தமாகக் கூறப்படும் துன்பங்கள் பலவற்றை

மரணகாலத்தில் அனுபவிக்கின்ருன். ஆகவே ஸுகம் எங்கே ? மனிதப்பிறவியிலேயே ஒரு ஜீவனின் நிலே இதுவானல், இதிலும் தாழ்ந்த பிறவிகளில் அவன வன் அனுபவிக்கவேண்டிய துக்கங்களைப்பற்றி என்ன வென்று கூறுவது என்பதே இந்த ச்லோகத்தின் கருத் தாகும். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறே பதம்' என்ற முறையிலேயே இங்கு சில துக்கங்களே எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டுள்ளன. தாரித்திரிய மெனப்படும் ஏழ்மை ஒன்றிஞல் மட்டும் ஏற்படும் துன்பங்களை மட்டும் விவரித்துக் கூறும் ஒரு ச்லோக மும் இவ்விடத்தில் ஞாபகத்திற்கு வருகிறது.

दारिद्र्याद्ध्रियमेति ह्रीपरिगतः प्रभ्रश्यते तेजसो
निस्तेजाः परिभूयते परिभवान्निर्वेदमापद्यते ।
निर्विण्णः शुचमेति शोकपिहितो बुध्या परित्यज्यते
निर्बुद्धिः क्षयमेत्यहो निधनता सर्वापदामास्पदम् ॥

இது போன்று நாம் படும் துன்பங்களை நமக்கே எடுத்துக் கூறும் பெரியோர்களின் வாக்குகளும் எவ் வளவோ இருக்கின்றன, அனைத்தையும் கூற ஆதி சேஷனலும் இயலாது.

எங்கில்லை துக்கம் ?

மானிடப் பிறவியிலும் அதிலும் தாழ்ந்த பிறவி களிலும் பலவிதமான துக்கங்கள் உள்ளன என்று எடுத்துக்காட்டப்பட்டது. மானிடப் பிறவியினும் மேலான தெய்வப் பிறவிகளிலும் பலவிதமான துககங் கள் உள்ளன, என்று கூறியிருப்பதையும் சிறிது கவனிப்போம்.

इन्द्रलोके महद्दुःखं प्राजपत्ये तथैव च
विष्णुलोके च रौद्रे च दुःखमेव विचारतः

அறிவாளிகள் ஆய்ந்து பார்க்குமிடத்து இந்த்ர லோகமெனப்படும் ஸ்வர்க லோகத்திலும் பல வகையான துக்கங்கள் உள்ளன. அவ்வாறே ப்ராஜாபத்யமெனப்படும் ப்ரம்ம லோகத்திலும், விஷ்ணுலோகமெனப்படும் வைகுண்டத்திலும் ருத்ரலோகமெனப்படும் கைலாஸத்திலும் பலவிதமான துக்கங்கள் உள்ளன என்பதே இந்த ச்லோகத்தின் கருத்தாகும்.

இது வியாஸவசனம் என உரையில் கூறப்பட்டுள்ளது. ஆயினும் இது வியாஸரால் எங்கு கூறப்பட்டுள்ளது என்பது ஆய்ந்து பார்த்தும் அறிய முடியாததாயிருக்கிறது என்ற ஓர் குறிப்பும் காண்கிறது. இந்தச்லோகம் அவரால் எழுதப்பட்டதா இல்லையா என்பது நமது முக்யமான ப்ரச்னையல்ல, இந்தச்லோகத்தில் சொல்லப்பட்டுள்ள விஷயம் பொருத்தமானதா இல்லையா என்பதே ப்ரச்னை. வேதாந்தங்கள், இதிஹாஸ புராணங்களைக் கொண்டு ஆராயுமிடத்து மிகமிகப் பொருத்தமென்பதே நமது அபிப்ராயம், ஏனெனில்

यथोदकं दुर्गेवृष्टं पर्वतेषु विधावति ।
एवं धर्मान्पृथक् पश्यंस्तानेवानुविनश्यति ॥

என்று கடவல்லியில் கூறியுள்ளபடி தேவர்களுள் தேவர்கள், ஆஜான தேவர்கள், கர்ம தேவர்கள் என்றும் அவர்களுக்கெல்லாம் அரசனாக தேவராஜன் என்றும் அவனுக்கு ஆசிரியராக ப்ரஹஸ்பதி என்றும் தேவ லோகத்திலும பல பாகுபாடுகள் உள்ளன. ப்ரம்மாதி லோகங்களிலும் ஸாலோக்யமுக்தி பெற்றவர்கள், ஸாரூப்ய முக்தி பெற்றவர்கள், ஸாமீப்ய முக்தி பெற்றவர்கள் நித்ய ஸூரிகள் என்றும், அநித்யஸூரிகள் என்றும் அவ்வங்கே அவர்களுக்கெல்லாம் அரசனாக ப்ரம்மா, விஷ்ணு, சிவன் என்றும் பல பாகுபாடுகள்

உள்ளன. எங்கெங்கு இத்தகைய பாகுபாடுகள் உள்ளனவோ அங்கெல்லாம் காமம், க்ரோதம், லோபம், மோஹம் மதம்; மாத்ஸர்யம் என்னும் இவைகளும் கண்டிப்பாக இருந்தேயாக வேண்டும். ஆகவே அவற்றின் அடிப்படையில் தோன்றும் அவ்வளவு துன்பங்களும் அவர்களுக்கும் இருந்தேயாக வேண்டும்.

மற்றும் அசுரர்களாலும் மகர்ஷிகளின் சாபங்களாலும், மகர்ஷிகளின் கொடிய தவங்களாலும் பந்துமித்ர புத்ர களத்ரங்களின் பிரிவாற்றாமைகளாலும், கொடிய அரக்கர்களாலும் அவர்கள் அனுபவிக்க வேண்டிய துன்பங்களும் கணக்கிலடங்கா भीषास्माद्वातः पवते भयादस्याग्निस्तपति போன்ற மந்திரங்களும் இவர்களுக்குள்ள பயங்களை எடுத்துக் கூறுகின்றன. द्वितीयाद्वै भयं भवति । उदरमन्तरं कुरुते अथ तस्य भयं भवति' । என்றெல்லாம் அல்லவா உபநிஷத்துக்கள் கூறுகின்றன ? ஆகவே ஈரேழு பதினான்கு எனப்படும் இவ்வுலகங்களுள் எங்குச் சென்றாலும் துன்பத்தைத் தவிர வேறில்லை. இக்காரணம் பற்றியே தான் பகவானும் பகவத் கீதையில் பிறவியையே துக்காலயம் (जन्म दुःखालयमशाश्वतम्) என்று கூறிவிட்டார். பிறவாமையின்றி துக்கங்களை விலக்கவே முடியாது.

न ह वै सशरीरस्यसतः प्रियाप्रिययोरपहतिरस्ति ।
अशरीरं वाव सन्तं न प्रियाप्रिये स्पृशतः ॥

என்னும் உபநிஷத் வாக்யங்களும் இக்கருத்தையே தான் வலியுறுத்தியுள்ளன.

அறிவைத் தேடு

ஆகவே அறவே துக்கங்கள் போகவேண்டுமானால் பிறவி போகவேண்டும். பிறவி போகவேண்டுமானால்

அதற்குக் காரணமான ப்ரவிருத்தி எனப்படும் கருமங்கள் போக வேண்டும். அது போக வேண்டுமானல் அதற்குக் காரணமான தோஷங்களெனப்படும் ராகத்வேஷங்கள் போக வேண்டும். அவை போக வேண்டுமானல் மித்யாக்ஞானம் எனப்படும் அறியாமை போக வேண்டும் அது போக வேண்டுமானல் தத்வக்ஞானத்தை அவசியம் ஒவ்வொருவனும் பெற்ருக வேண்டும்.

तद्यथेषिकातूलमग्नौ प्रोतं प्रदूयेत एवं ह एवंविदः सर्वे पाप्मानः प्रदूयन्ते' छा।

यथैधांसि समिद्धोऽग्निर्भस्मसात् कुरुतेऽर्जुन।
ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा॥

भिद्यते हृदयग्रन्थिः छिद्यन्ते सर्वसंशयाः।
क्षीयन्ते चास्य सर्वकर्माणि तस्मिन् दृष्टे परावरे॥

न हि ज्ञानेन सदृशं पवित्रमिह विद्यते।

என்பன போன்ற வாக்கியங்களின் கருத்தே இவ்வாறு விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆகவே, பிறவிதுக்கம் போக ஞானம் ஒன்றே வழியாகும். வேறு வழியே கிடையாதென்பதே சாஸ்திரங்களின் முடிவாகும். இக்காரணம் பற்றியே தான் नान्यः पन्थाविद्यतेऽयनाय என்றும் கூறப்பட்டுள்ளது.

இக்காரணம் பற்றியே தான்

अज्ञानसर्पदष्टस्य ब्रह्मज्ञानौषधं विना
किं वेदैः किमु शास्त्रैश्च किं मन्त्रैः किमु चौषधैः।

என்றும் கூறப்பட்டுள்ளது.

நியாய சாஸ்திரப்ரவர்தகரான கௌதமரும் இதை ஒப்புக்கொண்டே பேசுகிறுர்.

तत्वज्ञानान्निश्रेयसाधिगमः । दुःखजन्मप्रवृत्तिदोष-
मिथ्याज्ञानानामुत्तरोत्तरापाये तदनन्तरापायादपवर्गः ।

என்பவை கௌதம ஸூத்ரங்களாகும். இதிலிருந்து நாம் காணும் உலகம், அதில் நாம் அனுபவிக்கும் துக்கம் அதற்கான காரணங்கள் யாவையுமே உண்மையல்ல; பொய்யான தோற்றங்களே என்னும் உண்மையும் அறியப்படுகின்றது. அப்படியில்லையெனில் இவை ஞானத்திருல் போகவே போகாது.

ज्ञात्वा देवं सर्वपाशापहानिर्नान्यः पन्थाश्चेति भूयोवचोभिः ।
ज्ञप्तेः साक्षान्मुक्तिहेतुत्वसिद्धावध्यासत्वं बन्धनस्यार्थसिद्धम् ॥

ब्रह्मज्ञानं सूचयन्सूत्रकारो बन्धोत्पत्तेर्हेतुविध्वंसनाय ।
एतत्सर्वं सूचयामास तस्मादेतत्सर्वं भाषते भाष्यकारः ॥

என்பன போன்ற ஆன்ருேர் வாக்குகளும் இங்கு கவனத்திற்குரியவைகளாகும்.

இக்கருத்திற்கான காரணத்தையும் விளக்கிக் கூறும் ஒரு ஆன்ருேர் வாக்கையும் கீழே காணலாம்:—

सत्यं भावं न वित्तिर्व्यपनुदति यतः कर्मनाश्यो घटादिः
मिथ्याभूतं च कर्म क्षपयति न तथा वित्तिघात्यं यतस्तत् ।
इत्थं सिद्ध विभागे श्रुतिशिखरगिरा वितिघात्यः प्रतीतो
बन्धो मिथ्येति सिद्धे न तदपहृतये कर्मजातं समर्थम् ॥

இவ்விஷயத்தையும் பகவான் பகவத்கீதையில் கூறியிருப்பதையும் நாம் காணலாம்.

नासतो विद्यते भावो नाभावो विद्यते सतः என்றும்

मया ततमिदं सर्वं जगदव्यक्तमूर्तिना
मत्स्थानि सर्वभूतानि न चाहं तेष्ववस्थितः ॥
न च मत्स्थानि भूतानि पश्य मे योगमैश्वरम् ।

என்றும் கூறும் பகவான் இக்கருத்தையேதான் வலியுறுத்துகிறார்.

न निरूपयितुं शक्या विस्पष्टं भासते च या ।
सा मायेतीन्द्रजलादौ लोकाः संप्रतिपेदिरे ।
यदसङ्गासमानं तन्मिथ्या स्वप्नगजादिवत् ॥

என்று வித்யாரண்யாளும் கூறியிருக்கிறார்கள்.

அந்த தத்வக்ஞானத்தைப் புகட்டவேதான் உபநிஷத்துக்களும் ப்ரம்ம ஸூத்ராங்களும் அவற்றின் கருத்துக்களைத் தெளிவாக விளக்கும் ஆசார்ய சங்கர பாஷ்யங்களும், அவற்றின் உரைகளும், கீதை போன்ற நூல்களும் தோன்றியிருக்கின்றன. இக்கருத்தை விளக்கிக் கூறும் ஒரு ச்லோகத்தையும் கீழே காணலாம்.

इत्थं यः कर्मबद्धो भ्रमति परवशः प्राणभृज्जन्मपन्थैः
दुःखस्यान्तं न वेत्ति स्मरति न च जनित्रात्मनज्ञानयोगम् ।
तं सर्वानर्थमूलप्रशमनविधिना स्वात्मराज्येऽभिषेक्तुं
तात्पर्येण प्रवृत्ताः श्रुतिशिखरगिरः सूत्रभाष्यादयश्च ॥

அறியாமையின் காரணமாகவே ஒவ்வொரு ஜீவனும் முன் கூறிய முறையில் காமவசப்பட்டவனாய் கர்மவசப்பட்டவனாய் அவற்றின் பயன்களை அனுபவிப்பதற்காகப் பற்பல பிறவிகளை அடைவதற்காக குடைராட்டினம் போன்று இங்குமங்கும் தொட்டில் ராட்டினம் போன்று மேலும் கீழுமாகச் சுற்றிக்கொண்டேயிருக்கின்றான் துக்கங்களின் எல்லை யாதெனவும் அறிய முடியாமலிருக்கிறான். தானடைந்த எண்ணற்ற பிறவிகளை நினைத்துப் பார்க்கும் திறனற்றவனாகவும் இருக்கிறான். இவ்வாறு எண்ணற்ற துன்பங்களுக்கும் அடிப்படைக் காரணமாகவுள்ள அறியாமையைப் போக்கி आत्मलाभान्नपरं किञ्चित् என்ற ஆன்றோர் வாக்குப்படி ஆத்மலாபமெனப்படும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தில் ஒவ்வொரு ஜீவனையும் பட்டாபிஷேகம் செய்வித்து நிலைக்கச் செய்வதென்ற ஒரே நோக்கத்துடனேயே உபநிஷத்துக்களும் வ்யாஸ ஸூத்ரங்களும் பகவத்பாத பாஷ்யங்களும் அவற்றின் உரை நூல்களும் அவற்றைத் தழுவி எழுதப்பட்டுள்ள ஏனைய நூல்களும் ஏற்பட்டுள்ளன என்பதே இச்சுலோகத்தின் கருத்தாகும்.

'तं त्वौपनिषदं त्वा पुरुषं पृच्छामि'

सर्वे वेदा यत्पदमामनन्ति तपांसि सर्वाणि च यद्वदन्ति'

यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति तत्ते पदं संग्रहेण ब्रवीमि

वेदैश्च सर्वैरहमेव वेद्यः

ऋषिभिर्बहुधा गीतं छन्दोभिर्विविधैः पृथक्
ब्रह्मसूत्रपदैश्चैव हेतुमद्भिर्विनिश्चितैः ॥

என்பன போன்ற வாக்யங்கள் இங்கு கவனத்திற்குரியன.

ஆன்ம அறிவைப் பெருமலேயே துக்கங்களி லிருந்து விடுபடுவது என்பது முடியவே முடியாதென் பதையும் கீழ்க்காணும் சுலோகத்தால் உணரலாம்.

यदा चर्मवदाकाशं वेष्टयिष्यन्ति मानवाः ।
तदा देवमविज्ञाय दुःखस्यान्तो भविष्यति ॥

என்றைக்கு ஒருவன் ஒரு தோலைப் போன்று ஆகா யத்தையும் சுருட்டி மடித்து எடுப்பானே அன்றைக்குத் தான் ஆன்ம அறிவைப் பெருமலேயே துக்கத்தைப் போக்கமுடியும். அதுவும் முடியாத ஒன்ருகும்; அது போல் இதுவும் முடியாத ஒன்ருகும் என்பதே இந்த சுலோகத்தின் கருத்தாகும்.

எந்த அறிவு உண்மையறிவு?

இது வரை, நாம் அனுபவிப்பதெல்லாம் துக்கமே யென்றும், அதற்கெல்லாம் அடிப்படைக் காரணமா யிருப்பது அறியாமையே என்றும் அதைப் போக்க வல்லது அறிவு ஒன்றே என்றும் காரணங்களுடன் எடுத்துக்காட்டப்பட்டது. ஞாநயோகம் என்னுமிடத்தில் ஞாநமென்னும் பதம் இதையேதான் குறிப்பிடுகின்றது. இவ்விடம் ஞானம் என்பதாக எந்த ஞானத்தை பக வான் குறிப்பிடுகிருர் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். ஏனெனில் ஞானத்திலும் பல வகைகள் இருப்பதாகவே நாம் மயங்குகிரும். பகவானே ஞானமென்பது குறிப்பிட்ட ஒன்றேதான்; மற்றவை யாவும் அக்ஞானங்களேயாகும் என்று தீர்மானமாகக் கூறியிருக்கிருர். ஆகவே அவ்விஷயத்தையும் நாம் நம் கவனத்திற்குச் சிறிது கொண்டுவர வேண்டியது இன்றியமையாததாகின்றது.

பகவத்கீதையில் க்ஷேத்ரக்ஷேத்ரக்ஞவிபாகயோகம் எனப்படும் பதிமூன்ரும் அத்யாயத்தில் இரண்டாம்

சுலோகத்தில் 'क्षेत्रक्षेत्रज्ञयोर्ज्ञानं यत्तज्ज्ञानं मतं मम' என்று பகவான் கூறியிருக்கிறார். அதாவது க்ஷேத்ரமெனப்படும் ஜடப்பொருள்களிலிருந்து க்ஷேத்ரக்ஞன் என்பவனைப் பிரித்து எஞ்சியுள்ள தன்மையில் காணப்படும் ஸ்வரூபமே க்ஷேத்ரக்ஞனெனப்படும் ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபம். மற்றவையெல்லாம் உபாதிகளின் காரணமாக ஏற்பட்ட வெறும் தோற்றங்களே என்று ஏற்படும் ஞானமே உண்மையான ஞானம் என்பது எனது அபிப்பிராயம் என்பது இதன் கருத்தாகும்.

இவ்வத்தியாயத்திலேயே இக்கருத்திற்கே முத்திரை வைப்பது போல மேலேயும்

एतज्ज्ञानमिति प्रोक्तमज्ञानं यदतोऽन्यथा ॥

என்றும் கூறியிருக்கிறார். கீழே குறிப்பிட்டுள்ள ஞானம் ஒன்றே உண்மையான ஞானம், மற்றவையெல்லாம் அக்ஞானங்களே, அதாவது அறியாமையின் அடிப்படையில் தோன்றும் ப்ராந்திக் ஞானங்களே என்பதே இதன் கருத்தாகும்.

க்ஷேத்ரம் என்பது எது?

க்ஷேத்ரம் என்பது எது, க்ஷேத்ரக்ஞன் என்பவன் யார் என்பதையும் பகவானே விளக்கமாகக் கூறியிருக்கிறார். அதையும் சற்று கவனிப்போம்:— முதலில் 'इदं शरीरं कौन्तेय क्षेत्र मित्यभिधीयते' (13-1) என்று சுருக்கமாக இந்த சரீரத்தை மட்டும் க்ஷேத்ரமெனக் குறிப்பிட்டு விட்டுப் பின்னர்,

महाभूतान्यहङ्कारो बुद्धिरव्यक्तमेव च ।
इन्द्रियाणि दशैकं च पञ्च चेन्द्रियगोचराः ॥ 13-5

इच्छा द्वेषः सुखं दुःखं संघातश्चेतना धृतिः ।
एतत्क्षेत्रं समासेन सविकारमुदाहृतम् ॥ 13-6

என்று மாறுபடும் தன்மையுள்ள இவைகளெல்லாம் சேர்ந்தே க்ஷேத்ரமெனப்படுகிறது என அதை விவரித்திருக்கின்றார்.

யார் க்ஷேத்ரக்ஞன்

அவ்வாறே

एतद्यो वेत्ति तं प्राहुः क्षेत्रज्ञ इति तद्विदः । 13-1

என்று முதலில் சுருக்கமாக ப்ரத்யகாத்மாவையே க்ஷேத்ரக்ஞன் எனக் குறிப்பிட்டுவிட்டு

पुरुषः प्रकृतिस्थो हि भुङ्क्ते प्रकृतिजान्गुणान् ।
कारणं गुणसङ्गोऽस्य सदसद्योनिजन्मसु ॥ 13-21

उपद्रष्टानुमन्ता च भर्ता भोक्ता महेश्वरः ।
परमात्मेति चाप्युक्तो देहेऽस्मिन्पुरुषः परः ॥ 13-22

என்பன போன்ற பல சுலோகங்களால் அதையே பல வகைகளில் விளக்கியிருக்கின்றார்.

பயன் என்ன ?

முடிவில்

क्षेत्रक्षेत्रज्ञयोरेवमन्तरं ज्ञानचक्षुषा ।
भूतप्रकृतिमोक्षं च ये विदुर्यान्ति ते परम् ॥ 13-34

என்று இந்த அறிவைப் பெற்றவர்களே பரப்ராப்தியெனப்படும் மோக்ஷத்தை அதாவது துக்கஸம்பந்தமே இல்லாத இருக்க முடியாத உண்மையான அகண்

டானந்த நிலையை இவ்விடமே அடைகின்றார்கள் என்றும் கூறியிருக்கிறார்.

इहैव सन्तोऽथ विद्मस्तद्वयं न चेदिहा वेदिन्महती विनष्टिः।
ये तद्विदुरमृतास्ते भवन्ति अथेतरे दुःखमेवापियन्ति ॥

ब्रह्मविदाप्नोति परं ब्रह्मविद् ब्रह्मैव भवति।
ब्रह्मैव सन् ब्रह्माप्येति तरति शोकमात्मवित् ॥

आत्मानं चेद्विजानीयात् अयमस्मीति पूरुषः
किमिच्छन् कस्य कामाय शरीरमनुसंज्वरेत्।
ज्ञात्वा देवं सर्वपाशापहानिः क्षीणैः क्लेशैः जन्ममृत्युप्रहाणिः ॥

यावानर्थ उदपाने सर्वतः संप्लुतोदके।
तावान्सर्वेषु वेदेषु ब्राह्मणस्य विजानतः ॥

என்பன போன்ற வாக்யங்களும் இதற்குப் பிரமாணங்களாகும்.

अनन्दा नाम ते लोका अन्धेन तमसावृताः।
तांस्ते प्रेत्याभिगच्छन्ति अविद्वांसोऽबुधो जनाः ॥
असुर्या नाम ते लोका अन्धेन तमसावृताः।
तांस्ते प्रेत्याभिगच्छन्ति ये के चात्महनो जनाः ॥

योऽन्यथा सन्तमात्मानमन्यथा प्रतिपद्यते।
किं तेन न कृतं पापं चोरेणात्मापहारिणा ॥

என்பன போன்ற அறியாமையை இகழ்ந்து கூறும் வசனங்களும் இங்கு நினைவிற்குரியன.

'आत्मा वारे द्रष्टव्यः' एष आत्मापहतपाप्मा-सोन्वेष्टव्यः तमेवैकं जानथ आत्मानमन्या वाचो विमुञ्चथ ।

என்பன போன்ற உபநிஷத்வாக்யங்களும் யாவரும் பெற வேண்டியது ஆன்ம அறிவே என்ற இக் கருத்தையே வலியுறுத்துகின்றன.

'अयमात्मा ब्रह्म' 'आत्मा च ब्रह्म' என்ற வாக்யங்களின்படி ஆதமா என்பதும் ப்ரம்மம் என்பதும் ஒரே தத்துவமேயன்றி வேறல்ல. 'क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत' என்று கூறும் பகவானும் இக்கருத்தையேதான் வலியுறுத்துகின்றார். ஆகவே உபநிஷத்துக்களில் ஆத்மக் ஞானம் என்றால் ஆத்மாவேதான் ப்ரம்மம் என்னும் ஞானமே என்றும் ப்ரம்மக் ஞானமென்றால் ப்ரம்மமே தான் எல்லா சரீரங்களிலும் ஆத்மாவாக இருப்பது என்னும் ஞானமே என்றும் கொள்ள வேண்டும்.

तत्सृष्ट्वा तदेवानुप्राविशत् स एतया द्वारा प्रापद्यत अनेन जीवेनात्मानानुप्रविश्य नामरूपे व्याकरवाणि छा — स एष इह प्रविष्ट आनखाग्रेभ्यः ।

என்பன போன்ற ப்ரவேச வாக்யங்கள் மிகமிகத் தெளிவாக இக்கருத்தையே வலியுறுத்தியிருக்கின்றன. ஆகவே பகவத் ப்ரஸாதத்தால் உத்தராயண மார்கமாக ப்ரம்மாதி லோகங்களையடைந்து அங்குள்ள போகத்தையனுபவிப்பதே மோக்ஷமென்பது தவறாகும். அவையெல்லாம் உபாஸனையின் பயனேயன்றிஞானத்தின் பயனாகாது. அறியப்படுவதே ப்ரம்மமாகும், உபாஸிக்கப்படுவதல்ல என்று கேனோபநிஷத் வற்புறுத்தியிருக்கின்றது. 'तदेव ब्रह्मत्वं विद्धि नेदं यदिदमुपासते' என்று பலமுறையல்லவா கூறப்பட்டுள்ளது? மற்றும் நான் வேறு பிரம்மம் வேறு என்று அறிபவனையும் ப்ருஹதாரண்யகம் இகழ்ந்து கூறியிருக்கின்றது.

अथ योऽन्यां देवतामुपास्तेऽन्योऽसावन्योऽहमस्मीति न स वेद । यथा पशुरेवं स देवानाम् । तस्मादेषां तन्न प्रियं यदेतन्मनुष्या विद्युः । बृ-1-4-10

என்பது ப்ருஹதாரண்யக வாக்யம்.

'अथ येऽन्यथातो विदुरन्यराजानस्ते क्षय्यलोका भवन्ति'

என்பன போன்ற உபநிஷத்வாக்யங்களும் இங்கு கவனத்திற்குரியன.

ஞானம் யோகமெனப்படுவதேன்?

இவ்வாறு இந்த ஞானம் நம்மை நமது உண்மையான நிலையை அடைவிப்பதனாலேயே யோகமெனவும் பகவானால் குறிப்பிடப்பட்டது. வடமொழியில் வியோகமென்றால் பிரிவு. யோகமென்றால் சேர்க்கையென்பதும் பொருள். இவ்விடம் சேர்த்து வைக்கும் காரணத்தால் ஞானம் யோகமெனப்படுகின்றது என்னும் கருத்தையும்

युज्यते अनेन इति योगः । ज्ञानमेव योगः ज्ञानयोगः ।

என்றும் கூறுமாற்றால் ஆதிசங்கர பகவத்பாதரும் எடுத்துக்காட்டியிருக்கின்றார். பாணினியும் யுஜிர் योगे (1444) என்று கூறியிருக்கிறார்.

நாம் என்ன செய்ய வேண்டும்?

ஆகவே நாம் செய்யவேண்டியதென்ன என்பதையும் பகவானே பதினாரும் அத்யாயத்தில் கூறியிருக்கின்றார். அதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

त्रिविधं नरकस्येदं द्वारं नाशनमात्मनः ।
कामः क्रोधस्तथा लोभस्तस्मादेतत्त्रयं त्यजेत् ॥

ஆசை, கோபம், பேராசை என்ற இம்மூன்றுமே நமக்குப் பலவிதமான துன்பங்களுக்குக் காரணமாகி பேரின்பத்தை நாம் அடையமுடியாமல் செய்கின்றன. ஆகவே அறவே இவற்றை விட்டொழிக்க வேண்டும் என்பதே இதன் கருத்தாகும்.

இக்கருத்தையே வலியுறுத்தும் மற்ருெரு சுலோகத்தையும் பார்ப்போம்.

शक्नोतीहैव यः सोढुं प्राक्शरीरविमोक्षणात् ।
कामक्रोधोद्भवं वेगं स युक्तः स सुखी नरः ॥

இவற்றை விட்டொழிப்பதையும் இப்பிறவிக்குள்ளேயே செய்வதுதான் சாலச் சிறந்ததாகும் என்பதே இதன் கருத்தாகும். இக்காரணம்பற்றியேதான் अककाशो नदातव्यः कामादीनां महत्क्वचित् என்று ஆன்ருேர்களும் கூறியிருக்கிருர்கள்.

அவ்வாறு அறவேவிட்டொழிப்பதும் இயற்கைக்கு முரணுயிருப்பதால் யாவருக்கும் முடியாதென்பதையும் பகவான் உணராமலில்லை. ஆகவேதான் இரண்டாம் அத்தியாயத்திலேயே கீழ்வருமாறு கூறியிருக்கிருர்.

रागद्वेषवियुक्तैस्तु विषयानिन्द्रियैश्चरन्
आत्मवश्यैर्विधेयात्मा प्रसादमधिगच्छति ॥

நிதானமான நோக்குடன் பற்ருே பதட்டமோ இல்லாமல் விஷயங்களை அனுபவித்தால் அவ்வளவு அதிகமான துன்பங்கள் ஏற்படாமல் மனது சிறிதளவு தெளிவு பெற்றிருக்கும் என்பதே இதன் கருத்தாகும்.

வழி என்ன ?

இனி இத்தகைய ஞானத்தைப் பெறுவதற்கான உபாயங்கள் யாவை என்பதையும் கவனிப்போம். அவற்றையும் பகவான் பதின்மூன்ரும் அத்யாயம் ஏழு முதலான பதினென்று ஈருன சுலோகங்களில் சுருக்கமாகக் கூறியிருக்கின்ருர்.

अमानित्वमदम्भित्वमहिंसा क्षान्तिरार्जवम् ।
आचार्योपासनं शौचं स्थैर्यमात्मविनिग्रहः ॥ (13 - 7)

इन्द्रियार्थेषु वैराग्यमनहङ्कार एव च ।
जन्ममृत्युजराव्याधिदुःखदोषानुदर्शनम् ॥ 13-8

असक्तिरनभिष्वङ्गः पुत्रदारगृहादिषु ।
नित्यं च समचित्तत्वमिष्टानिष्टोपपत्तिषु ॥ 13-9

मयि चानन्ययोगेन भक्तिरव्यभिचारिणी ।
विविक्तदेशसेवित्वमरतिर्जनसंसदि ॥ 13-10

अध्यात्मज्ञाननित्यत्वं तत्वज्ञानार्थदर्शनम् । 13-11

(1) தற்புகழ்ச்சியில்லாமை (2) தான் செய்யும் நற்காரியங்களை வெளியிடாமை (3) பிராணிகளுக்கு எவ்விதத்தொல்லையும் கொடாமை (4) பிறர் குற்றங்களைக் கண்டு வெகுளாமை (5) பேச்சிலும் நடத்தையிலும் நேர்மை (6) ஆசார்யனுக்குச் செய்யும் பணிவிடை (7) உடல் உள்ளம் இவற்றின் தூய்மை (8) மோக்ஷ வழியிலேயே நிலைத்திருத்தல் (9) உடலையும் உள்ளத்தையும் நல்வழி நிறுத்தல் (10) சிற்றின்பங்களில் பற்றற்ற தன்மை (11) 'நான்' என்ற எண்ணமின்மை (12) பிறப்பு இறப்பு, மூப்பு, நோய் இவைகளால் ஏற்

படும் துன்பங்களை மறவாமலிருத்தல் (13) ஆசையின்மை (14) மனைவி, மக்கள், மனைகள் போன்றவற்றில் பற்றில்லாமை (15) எதிலும் எப்பொழுதும் வெறுப்பு விருப்பு இல்லாத தன்மை (16) பகவத் ஸ்வரூபத்தில் மாருத பக்தி (17) தனிமையில் விருப்பம் (18) பாமர ஜனங்களின் கூட்டத்தில் கலந்து கொள்ளாமை (19) இடையருத ஆன்மசிந்தனம், (20) மோக்ஷ நிலையின் தன்மையை எப்பொழுதும் சிந்தனை செய்தல் இவையாவும் ஆன்ம அறிவை நாம்பெற உபாயங்களாகும் என்பதே இந்த சுலோகங்களின் கருத்தாகும். இவற்றைப் பெற்றிருக்கும் தன்மையையே साधनचतुष्टय-सम्पत्तिः எனச்சுருக்கமாகக் கூறுகின்ருர்கள்.

एतद्ध स्म वै तत्पूर्वे विद्वांसः प्रजां न कामयन्ते किं प्रजया करिष्यामो येषां नोऽयमात्माऽयं लोक इति ते हस्म पुत्रैषणायाश्च लोकैषणायाश्च व्युत्थायाथ भिक्षाचर्यं चरन्ति । तस्मादेवंविच्छान्तो दान्त उपरस्तितिक्षुः समाहितः श्रद्धावित्तो भूत्वात्मन्येवात्मानं पश्यति सर्वात्मानं पश्यति ॥

என்பன போன்ற உபநிஷத்வாக்யங்களே கீழ்க்கூறியுள்ள விஷயங்களுக்கு பிரமாணங்களாகும்.

ஞான நிஷ்டை என்ருல் என்ன?

आसुप्तेरास्मृतेः कालं नयेद्वेदान्तचिन्तया ।

என்ற வாக்யப்படி அல்லும் பகலும் இவைகளைப் பெறுவதிலேயே நாம் முழுமூச்சுடன் ஈடுபட்டிருக்கும் நிலையே ज्ञाननिष्ठा எனப்படும். ஞான நிஷ்டையேதான் நாம் முற்கூறிய காரணத்தால் ஞானயோக நிஷ்டை என்றும் கூறப்படுகின்றதேயன்றி வேறில்லை. பன்னிரண்டாம் அத்யாயம் 13 முதலான 19 ஈருன ஏழு

சுலோகங்களில் பகவான் கூறியுள்ள விஷயங்களையும் நாம் இங்கு நினைவில் கொள்ளவேண்டும். மற்றும்

चेतसा सर्वकर्माणि मयि संन्यस्य मत्परः।
बुद्धियोगमुपाश्रित्य मच्चित्तः सततं भव॥

अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम्॥

सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रज।
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः॥

तद्बुद्धयस्तदात्मानस्तन्निष्ठाः तत्परायणाः
गच्छन्त्यपुनरावृत्तिं ज्ञाननिर्धूतकल्मषाः॥

मच्चित्ता मद्गतप्राणा बोधयन्तः परस्परम्।
कथयन्तश्च मां नित्यं तुष्यन्ति च रमन्ति च॥

என்பன போன்றவசனங்களும் இங்கு கவனத்திற்குரியன.

तच्चिन्तनं तत्कथनमन्योन्यं तत्प्रबोधनम्।
एतदेकपरत्वं च ब्रह्माभ्यासं विदुर्बुधाः।

என்ற வித்யாரண்ய வசனமும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது.

तमेवैकं जानथ आत्मानमन्या वाचो विमुञ्चथ
तमेव धीरो विज्ञाय प्रज्ञां कुर्वीत ब्राह्मणः।
नानुध्यायाद्बहूञ्शब्दान्वाचो विग्लापनं हि तत्॥

यच्छेद्वाङ्मनसी प्राज्ञस्तद्यच्छेज्ज्ञान आत्मनि ।
ज्ञानमात्मनि महति नियच्छेत्तद्यच्छेच्छान्त आत्मनि ॥

என்பன போன்ற உபநிஷத்வாக்யங்கள் இவ்விஷயத்தில் பிரமாணங்களாகும். நான் கூறியுள்ள இவ்விஷயங்களை நம்பாமல் வேறு விஷயங்களில் ஈடுபடுபவர்களுக்கு விடுதலையே கிடையாது. அவர்கள் பிறப்பு, இறப்பு எனப்படும் இந்த ஸம்ஸார நிலையிலேயே உழல்கிறார்கள் என்றும் பகவான் பலவகையில் கூறியிருக்கிறார்.

अश्रद्दधानाः पुरुषा धर्मस्यास्य परन्तप ।
अप्राप्य मां निवर्तन्ते मृत्युसंसारवर्त्मनि ॥
ये मे मतमिदं नित्यमनुतिष्ठन्ति मानवाः ।
श्रद्धावन्तोऽनसूयन्तो मुच्यन्ते तेऽपि कर्मभिः ॥
ये त्वेतदभ्यसूयन्तो नानुतिष्ठन्ति मे मतम् ।
सर्वज्ञानविमूढांस्तान्विद्धि नष्टानचेतसः ॥

உவமைகள்

இந்த ஞானத்தை ज्ञानचक्षुषा (13.35) ज्ञानचक्षुषः (15.10) என இரண்டிடத்தில் கண்ணோடும் ज्ञानतपसा (4·10) என ஓரிடத்தில் தவத்தோடும் ज्ञानदीपेन (10·11) என ஓரிடத்தில் தீபத்தோடும் ज्ञानप्लवेन என ஓரிடத்தில் ஓடத்தோடும் ज्ञानयज्ञः (4·33) ज्ञानयज्ञेन (9.15). (18 70) என மூன்று இடங்களில் யாகத்தோடும் ज्ञानाग्निदग्धकर्माणं (4·19) ज्ञानाग्निः सर्वकर्माणि (4·37) என இரண்டிடங்களில் நெருப்போடும் ज्ञानासिना (4·42) என்ற ஓரிடத்தில் கத்தியோடும் பகவான் ஒப்பிட்டுப் பேசியிருக்கின்றார். அவ்வந்த இடத்திற்கேற்ப அவ்வந்த உவமானப் பொருள்

களின் தன்மைகளை ஞானத்தில் ஏற்றி இந்த ஞானம் ஒன்றே அவ்வளவு செயல்களையும் புரிகின்றது என ஞானத்தைப் பெருமைப்படுத்திக் காட்டியிருக்கின்றார் பகவான்.

ஞான யோகிகளின் தனிச்சிறப்பு

अणिमा महिमा चैव गरिमा लघिमा तथा ।
प्राप्तिः प्राकाम्यमीशत्वं वशित्वं चाष्टभूतयः ॥

எனப் பெரியோர்களால் கூறப்பட்டுள்ள எட்டு விதமான பூதிகளையும் அடையவேண்டுமென எவன் ஆசைப்படுகிறானோ அவன் ஆத்மக்ஞன் எனப்படும் இந்த ஞானியையே அர்ச்சிக்க வேண்டுமென அதர்வ சாகையைச் சேர்ந்த முண்டகோபநிஷத்தில் கூறப்பட்டிருக்கிறது.

यं यं लोकं मनसा संविभाति
विशुद्धसत्त्वः कामयते यांश्च कामान् ।
तं तं लोकं जयते तांश्च कामान्
तस्मादात्मज्ञं ह्यर्चयेद्भूतिकामः ॥ मु. 3-1-10

सर्वात्मत्वमिति स्फुटीकृतमिदं यस्मादमुष्मिंस्तवे
तेनास्य श्रवणात्तदर्थमननाद्ध्यानाच्च सङ्कीर्तनात् ।
सर्वात्मत्वमहाविभूतिसहितं स्यादीश्वरत्वं स्वतः
सिद्ध्येत्तत्पुनरष्टधा परिणतं चैश्वर्यमव्याहतम् ॥

என்ற ஸ்ரீ சங்கர பகவத்பாத வசனமும் இங்கு கவனத்திற்குரியது. மற்றும் ஸர்வ வல்லமைகளும் பொருந்

தியவர்களாக வர்ணிக்கப்படும் தேவர்களும் இந்த ஆத்ம ஞானிகள் விஷயத்தில் ஒன்றும் செய்யமுடியாது. ஏனெனில் அவர்கள் எல்லோருமாகவல்லவா இவர் இப்பொழுது இருக்கிறர் என்று ப்ருஹதாரண்யகோப நிஷத்தில் கூறப்பட்டிருக்கிறது.

तस्य ह न देवाश्चनाभूत्या ईशते ।
आत्मा ह्येषां स भवति ॥ बृ॰ 1-4-10

இக்காரணங்கள் பற்றியேதான் பகவத்கீதையிலும் பக வான் ஏழாம் அத்யாயத்தில்

चतुर्विधा भजन्ते मां जनाः सुकृतिनोऽर्जुन ।
आर्तो जिज्ञासुरर्थार्थी ज्ञानी च भरतर्षभ ॥ 7-16

என்று தொடங்கி

तेषां ज्ञानी नित्ययुक्त एकभक्तिर्विशिष्यते ।
प्रियो हि ज्ञानिनोऽत्यर्थमहं स च मम प्रियः ॥ 7-17
उदाराः सर्व एवैते ज्ञानी त्वात्मैव मे मतम् ।
आस्थितः स हि युक्तात्मा मामेवानुत्तमां गतिम् ॥7-18

என்று கூறியிருக்கிறுர். திரும்பவும் பன்னிரண்டாம் அத்யாயத்தில்

एवं सततयुक्ता ये भक्तास्त्वां पर्युपासते ।
ये चाप्यक्षरमव्यक्तं तेषां के योगवित्तमाः ॥ 12-1

என்ற அர்ஜுனனின் கேள்விக்குப் பதில் கூறுமிடத்தில்

ये त्वक्षरमनिर्देश्यं अव्यक्तं पर्युपासते ।
सर्वत्रगमचिन्त्यं च कूटस्थमचलं ध्रुवम् ॥

सन्नियम्येन्द्रियग्रामं सर्वत्र समबुद्धयः ।
ते प्राप्नुवन्ति मामेव सर्वभूतहिते रताः ॥

क्लेशोऽधिकतरस्तेषामव्यक्तासक्तचेतसाम् ।
अव्यक्ता हि गतिर्दुःखं देहवद्भिरवाप्यते ॥

என்று கூறியிருக்கிறார். ஆகவே

नष्टो मोहः स्मृतिर्लब्धा त्वत्प्रसादान्मयाच्युत ।
स्थितोऽस्मि गतसन्देहः करिष्ये वचनं तव ॥

என்று பரமனிடம் அர்ஜுனன் கூறியவாறே நாமும் கூறி அவர் வகுத்துள்ள வழிகளையே முறையாகப் பின் பற்றி அவ்வழியிலேயே நடந்து பரமபுருஷார்த்த மெனப்படும் மோக்ஷஸாம்ராஜ்யத்தைப் பெற நாமும் முயற்சிப்போம்.

சிவமயம்

விபூதியும் ருத்ராக்ஷமும்

சுருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸ புராணங்களின்
ஆதாரத்துடன் விபூதி ருத்ராக்ஷமஹிமையை
விளக்கும் அரிய நூல்

ப்ரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்
அவர்கள் எழுதியது

விலை 40 காசுகள் தபாலில் 50 காசுகள்

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா
மேலமாம்பலம், சென்னை-33

உ

"லிப்கோ"வின்

அருள்நெறிப் பிரசுரங்கள்

1. ஸகலகாரிய சித்தியும் சைவத் திருமுறைகளும் ரூ 4-00
2. ஸகல காரிய சித்தியும் ஸ்ரீமத் ராமாயணமும் (ஸ்தோத்ரமாலையுடன்) ரூ 3-75
3. ஸ்தோத்ரமாலை மட்டும் (2-ம்பதிப்பு) ரூ 1-60
4. ஸ்ரீவேங்கடேசஸுப்ரபாதம் ரூ 0-25
5. ஸ்ரீகனகதாரா ஸ்தோத்ரமும் ஸ்ரீலக்ஷ்மீ, அஷ்டோத்ர சத நாம ஸ்தோத்ரமும் ரூ 0-25
6. குமாரஸம்பவம் (5ம்ஸர்க்கம்-தமிழ் உரையுடன்) ரூ 0-62
7. ஸகல காரிய சித்தியும் தேவீ பாகவதமும் ரூ 2-25
8. ஸ்ரீமத் கம்பராமாயணம் (உரைநடைச் சுருக்கம்) ரூ 3-90

(எல்லாவற்றிற்கும் தபால் செலவு தனி)

பதிப்பகத்தார் :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

8, ரங்கநாதன் தெரு, தியாகராயநகர்,
சென்னை-17 :: போன் : 441538

திருச்சி விற்பனை நிலையம்

17/1, நந்திகோயில் தெரு,
தெப்பக்குளம், திருச்சி-2.

ESSENTIAL HINDU RITUALS

&

THE DAYS PRESCRIBED FOR THEIR PERFORMANCE

His Holiness Sri Jayendra Saraswathi Swamigal of Kanchi Kamakoti Peetam

Translated from Tamil:

By Sri V.R. Sundararaman M.A.,

(Author of ' Fifty Hindu Scriptural Tales" and 15 other books in English & Tamil.)

In our Hindu religion certain days are specially set apart for performing *Puja* (worship) and *tharpana* (offerings to dead forbears) and for observing *upavasa* (fasts). Many *astikas* (believers in the authoritativeness of the *Vedas* and the other Hindu scriptutural texts) have, to this day, firmly believed that these observances, whether with or without a knowledge of their real significance, will be of benefit both here in the present life and in the life to come thereafter. Details of some of these are given below :-

(i) EKADASI : Occurs twice a month on the day of the eleventh phase of both the waxing and the waning moon. This day is most beloved of Lord *Mahavishnu*. Fasting completely during the daylight hours of this day and spending the hours of its night awake and meditating

on the Lord's name are the observances essentially prescribed for this day. This will purify both mind and body The medical texts also testify to the value of fasting twice a month. Those who are unable completely to fast may take just once in the course of this day, light food consisting of only milk and fruits. On this day, shaving and taking oil bath should be eschewed. This last injunction, however, applies generally to all other sacred days too. The day following this—the dwadasi or the twelfth phase of the moon—one should take one's mid-day meal before the thithi of dwadasi expires, after performing the usual daily oblations.

The three essential observances prescribed for Ekadasi are fasting, sleeplessness and meditation.

(ii) AMAVASYA: The new moon day which occurs but once a month. This day is most sacred to one's dead ancestors. Among the days set apart for making offerings to our dead forefathers through a ritual called tharpana (offering of water with the gingelly or sesamum seeds), Amavasya is the most important. They bred us, made men of us and rendered a number of other help to us and this offering is but an expression of gratitude for all these. The injunction is that on an empty stomach, after a purificatory mid-day bath, this offering should be made at about 1 p.m. If circumstances force us to do this earlier in the day, even then it would suffice if the fasting and the bathing are strictly observed. If this ritual is regularly done with faith and devotion, it is said that we could have peace, prosperity and a long life.

(iii) SHASHTI : This is the day of the birth of Lord Muruga. The sixth phase of the moon in the bright fortnight (sukla paksha shashti) is the one referred to here. Fasting and worship of and/or meditation on Lord Muruga whould make us the recipients of that noble Lord's grace.

(iv) KARTHIKAI : This is the constellation most dear to the six Krithika damsels of heaven who had the honour and privilege of suckling baby Muruga. On this day fasting, worshipping Him, singing His praise, listening to the accounts of His exploits-all these will win for us the Grace of that Lord.

(v) PRADOSHA : The period of time between 4-30 and 6 O'clock every evening is generally called Pradosha. The particular pradosha which has been considered to be of special significance is that which occurs on the Trayodasi day (the day of the thirteenth phase of the moon). This latter day is specially sacred for devotion to Lord Siva. This day is also referred to as Mahapradosha. The belief is that, at that time, Lord Siva executes his eternal dance and that all other Gods of heaven gather to witness and enjoy it. Fasting the whole of that day, and, during the hours of pradosha, worshipping Lord Siva, and praising His exploits will all confer on the devotee happiness in the present life and eternal bliss thereafter. It is also said that, in view of the belief that all other gods are also assembled then in the presence of Lord Siva, worshipping any of them, i.e. any deity other than Siva is tabooed, as worship offered to Siva propitiates all other Gods too.

(vi) SIVARATRI : The night of the fourteenth lunar phase of the dark fortnight of the month of Masi (Krishna paksha Chaturdasi) is called Sivaratri. The night of the fourteenth lunar phase of the dark fortnight of every other month is also a Sivaratri, called the Masa Sivaratri or the monthly Sivaratri. The one in Masi is called the Maha Sivaratri. This day is most sacred to Lord Siva as it is said to be on this day that the Lords Brahma and vishnu attempted and failed to locate the crest and the base respectively, of the affulgent form Lord Siva assumed. Fasting during the whole of this day worshipping Lord Siva with Bilva leaves and either reading or listening to the Puranas devoted to Lord Siva, would bring us every typeof good in this life and ultimate coalescence with the Lord.

(vii) SANKARANTHI : Everyone of the days on which the sun enters a house in the Zodiac is generally known as Sankaranthi, the sanskrit root being sankramana or sankaranthi. There are, thus, twelve such sankaranthis in a year corresponding to the twelve houses of the Zodiac. For some special reasons, however, the particular sankaranthi which ushers in the month of Thai (occuring in mid January) is the only one which is called as Sankaranthi by tradition. Purificatory bath and tharpana or offering of water and sesamum seeds, are the two observances prescribed for these days. This particular Sankaranthi called Makara Sankaranthi falling on the first day of the month of Thai, is said to be the commencement of the daytime for the Gods and, hence, the special importtance assigned to this Sankaranthi vis-a-vis the others. This is a day devoted to both the Gods and to one's ances-

tors. In addition to the purificatory bath and tharpana already mentioned. The worship of the Sungod, Surya, is also prescribed for this day. If we do all these, both the Gods and the ancestral manes will be propitiated and our crops will also grow luxuriantly. In general we shall be the recipients of every kind of good.

(viii) VISHU : The first day of Chaitra or Mesha Sankramana and the first day of Aippasi or Thula Sankramana, generally called Vishu, are more specifically called respectively, the Chaitra Vishu and the Tula Vishu. The facts that the former starts the Hindu year and the latter marks the completion of one half of the sun's journey through the houses of the Zodiac, are the reasons for these two vishus being placed in a category different from the others. Purificatory bath, tharpana and worship of deities are the observances prescribed for these days.

GENERAL : The following is a monthly list of the sacred days spelt out in the various months of the year :-

Month	The Sacred day
1. Chittirai	Vishu
2. Vaikasi	Vishnupati
3. Ani	Shadaseeti
4. Adi	Dakshinayana
5. Avani	Vishnupati
6. Purattasi	Shadaseeti
7. Aippasi	Vishu
8. Karthikai	Vishnupati
9. Margazhi	Shadaseeti
10. Thai	Uttarayana

11. Masi — Vishnupati
12. Panguni — Shadaseeti

On all these days, generally, both purificatory bath and tarpana have been prescribed. To sum up;

1. Ekadasi : Sacred to VISHNU - UPAVASA and BHAJANA

2. Pradosha : } Sacred to SIVA - UPAVASA
3. Sivaratri : } and worship

4. Shashti : } Sacred to MURUGA-Fasting
5. Karthigai : } and worship of MURUGA.

6. Amavasya : Sacred to the departed forbears THARPANA with devotion and fasting.

7. Sankaranthi : } Sacred to both the gods and the ancestors - Purificatory bath, THARPANA,
8. Vishu : } worship of the sun and other Gods.

Note : This article appeared originally in the second annual number of November 1971 of SRI AYYAPPA SAMAJAM: I.I.T.,P.O.,Madras-36 and is reproduced here as desired by the translator.

AGNI-PURANA

by

Sri A. Subrahmanya Iyer, M.A., B.L., *Advocate, Madras*

Ancient India has been able to preserve the 'Para' and 'Apara' knowledge in several forms viz.. Vedic literature Epics, Puranas, Srutis, Smritis and in several other forms. There are Maha Puranas and Upapuranas. Puranas as a branch of sacred literature existed in Vedic period and it was also known as the fifth Veda. For each Veda a separate purana was organised. Agni for Rig Veda Vayu for Yajur Veda and Surya for Samaveda. The Mahapurana is described as having 10 characteristics but Upapurana has only 5. The 18 Puranas are:—

Brahma	Brahmavaivartha
Padma	Lainga
Vaishnava	Varaha
Saiva	Skanda
Bhagavatha	Vamana
Naradeeya	Koorma
Markendaya	Matsya
Agneya	Garuda and
Bavishya	Brahmanda

Mythology of Purana revolves more or less round the three Trinities, Brahma Vishnu and Siva, besides other dieties. The very names of the Puranas are given after name of the Gods.

The cult of Vishnu can be traced to the Rig Veda. It was during the period of Samhitas the conception of Siva was evolved. In the Rig and Yajurveda Siva appears as Rudra.

Puranas enter into great details about the creation of the Universe or Cosmos.

Several subjects from the Dharma Sastra, Literature Medicine etc. came to be embodied in the Puranas. Most of the Dharma Sastras pertaining to *Achara* was added to later puranas. It indicates that several matters were added to the Puranas to make it an encyclopedia. Besides the above topics there were other forms which Purana borrowed. Some Chapters such as geographical account, description of heaven and hell, astronomy, astrology, music, architecture, poetics came to be incorporated later.

Though Veda Vyasa compiled the Puranas the matter has always been regarded as Divine. The earliest reference to Purana literature is to be found in the Atharvanaveda. It is mentioned along with Rig, Sama and Yajur as produced from Uchishta. Purana is mentioned in the Vedas and other forms of literature as produced from the breath of Mahabootha. In the Arthasastra Puranam is mentioned under Ithihasa Veda. It further refers the Puranas as necessary to set right a king who goes astray and refers to a pauranik whose function was to recite puranas to him so that he could administer the state for the greatest happiness of the greatest number.

The Puranas have been freely adopted by Nayanmars and Alwars. Agni Purana represents the encyclopedic

phase of Puranic development. It is a store house of knowledge. It is a religious and literary encyclopedia and occupies an enviable position.

The Saunaka and other sages asked the Sutha to explain the essence of learning (Saratsara) that is, the knowledge which bestows perfection. The Sutha said that knowledge of Brahman was the essence of all knowledge leading to perfection. He said that he obtained the knowledge from Vyasa who in turn, got it from Vasishta who had derived the knowledge directly from God Agni. As the ultimate source of the essence of knowledge was Agni, the purana derived its name 'Agni Purana'.

The knowledge is described as two fold 'para' and 'Apara'. Agnipurana describes both. Various sources of kwowledge are embodied in it. It gives an account of 10 incarnations of Lord Vishnu, a summary of Ramayana, Mahabaratha and Hari Vamsa and also the worship of various deities and Tantric practices.

Description of the various branches of knowledge namely Achara, religious prayers like Sandhya and Raja Dharma under the title of Ramokthaneethi (as recited by Rama) architecture, science of medicine, phonetics, Grammar, Kavya, Dramaturgy, and poetics, Pralaya, Hells, Yoga, Vedantha etc., are given. Thus it is clear that the old sages who compiled the puranas like Agni Purana desired that all the branches of knowledge should find a place, so that it will be an encyclopedia and prove useful from generation to generation. The Agni purana is not sectarian and so it introduced various sorts of worship–Vaishnavite, Saivite and Tantric practices. It is said

that some chapter pertaining to Dharma Sastras, Varna and Asramas, Sradha, Marriage, conduct, sins and their expiations, came to be added later. Whatever it be, the Agni-purana represents the practical side of religion of the common people embodying the latest phase of popular Hinduism.

The mythological scheme adopted in the Agnipurana is based on the conception of the Trinity, viz., Brahma, Vishnu & Siva, representing the cosmic forces. The important Vedic gods are described as the sons of Kasyapa and Aditi. The Vedic Rakhsasas are described as the sons of Kasyapa and Diti. Therefore the gods and demons are described as the descendants of the same primaeval sage Kasyapa.

The ultimate aim of Sacred sages in India appears to be to lead the people to Brahma Vignana or knowledge of Brahma. If the dry philosophy alone is contained in the purana the common man is not likely to take any interest. So our great Rishis have made all the puranas including the Agni Purana as a great Encyclopedia so that persons interested in different walks of life may go through the verses and realise that Saratsara or the essence of knowledge is the realisation of the unity of Jeevathma and Paramathma. For the realisation of this Brahman, we have to adopt certain paths of religion. It is contained in the Ashtanga Yoga or 8 yogas based on the Vedanta. When a person gets the knowledge of Ashtanga Yoga he realises the sense of values in life and attains himself to the realisation of the ultimate Being. If we analyse the different kinds of knowledge it will be seen they ultimate-

ly it takes us to the knowledge of Brahma. The science of music in India is an ideal example to show that the knowledge of music leads us to the realisation of the ultimate Reality.

It is by these methods that we have been able to reach even the Moon but our Rishis have reached and realised the ultimate Brahman thousands of years ago and the Siddhis, miracles and even the attempt to reach the Moon cannot be the end in itself. The west should therefore look to the east for knowing and realising the Ultimate Reality. We do not under-rate the achievements of the West. The World will be better if we are able to realise as Rabindranath Tagore says -

"East is East and West is West but
East plus West is much the best".

ஒரு வேண்டுகோள்

நமது சபையில் அங்கத்தினர்களாகச் சேர்ந்தும், நமது சபையின் ஆதரவில் நடைபெறும் பிரவசனங்கள் மற்ற நிகழ்ச்சிகள் யாவினுக்கும் தவருது விஜயம் செய்தும் சபையின் பணி மேலும் சிறந்து விளங்க உதவுமாறு ஆஸ்திக அன்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

ஆண்டு சந்தா :

ஆயுள் அங்கத்தினர்	...	ரூ	100-00
தீவிர அங்கத்தினர்	...	ரூ	5-00
அங்கத்தினர்	...	ரூ	3-00
போஷகர்	...	ரூ	25-00

சிவமயம்

கார்ய காரணம்

ஸ்ரீமான் T. R. வைத்தீச்வரன், F.C.A.
(Chartered Accountant, Madras.)

विश्वं पश्यति कार्यं कारणतया स्वस्वामिसंबन्धतः
शिष्याचार्यतया तथैव पितृपुत्राद्यात्मना भेदतः ।
स्वप्ने जाग्रति वा य एष पुरुषो माया परिभ्रामितः
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥

—ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்

மாயையுடன் ஸம்பந்தப்பட்டு மயக்கமுற்ற எந்த புருஷனும் ப்ரபஞ்சத்தையும், அதனுள் ஒவ்வொரு வஸ்து, க்ரியை எவற்றையும் கார்ய காரணமாகவே பார்க்கிறான். कार्य करण कर्तृत्वे हेतुः प्रकृतिरुच्यते (ப.கீ. 13.19) என்றபடி கார்ய காரணங்களுக்கு ப்ரக்ருதி ஹேது அல்லது மூலமாகிறது. கார்யகாரணங்களின் விளைவாக வரும் ஸுக துக்கங்களை அனுபவிப்பதற்குப் புருஷன் ஹேதுவாகிறான். पुरुषः सुखदुःखानां भोक्तृत्वे हेतुरुच्यते (கீ. 13.19) ப்ரக்ருதி, புருஷன் இரண்டுமே அநாதி. प्रकृतिं पुरुषं चैव विद्ध्यनादि उभावपि. இருப்பினும், புருஷனுக்குக் குண ஸங்கம் அல்லது சேர்க்கையினாலேயே ஸுக துக்கங்கள் விளைகின்றன. அதின்றி, ப்ரக்ருதியைத் தன் வசப்படுத்திக் கொண்டவன் பரம புருஷனாகிறான். அவன் கேவலம் उपद्रष्टा, अनुमन्ता, भर्ता, भोक्ता வாய் இருந்து

கொண்டு மஹேச்வரனுய், அவ்யயனுய் ஸுக துக்காதிகளால் பாதிக்கப்படாதவனுய் விளங்குகிருன்.

अजोपि सन्नव्ययात्मा भूतानामीश्वरोपिसन् ।
प्रकृतिं स्वामधिष्टाय संभवाम्यात्ममायया ॥

(கீ. 4·6)

என்று அந்த பரமபுருஷன் மத்ஸ்ய கூர்மாதி அவதாரங்கள் எடுத்து ஸுக துக்கங்களே யனுபவிப்பவன் போல் வெளிக்குத் தோன்றினுலும், கேவலம் ஸாக்ஷி பூதனுய், ஸம்மதிப்பவனுய், எஜமானனுயிருக்கிருன். மேலும், அந்த அனுபவங்களுக்கான நியதியை தானே ஸ்ருஷ்டித்துக்கொண்டு, அந்தநியதிக்குக் கட்டுப்பட்டு லீலைகள் புரிகிருன் என்பது இதிஹாஸ புராணங்களில் நிதர்சனம். இந்த நோக்கம் கொண்டு, ஸ்ரீமத் ராமாயணத்தைச் சிறிது ஆராய்வோம்.

ராவணன் தனது புஜ பல பராக்ரமத்தையே பெரிதாகக் கொண்டு, திக்விஜயம் செய்து ஸகல உலகங்களேயும் ஆக்ரமித்து வருகிருன். ஒரு ஸமயம் திவ்ய தேஜஸ்வியும் த்ரிகால ஞானியுமான ஸனத் குமாரரை யணுகி

कोह्यस्मिन् प्रवरे लोके देवानां बलवत्तरः ।
यं समाश्रित्य विबुधा जयन्ति समरे रिपून् ॥

(உ கா. அதிகபாட 7.10)

என்று தேவர்களுக்கும் மேல் பலவத்தரன் யார் என்று வினவுகிருன். அவன் கருத்தறிந்து அவரும் बलं बलवतामस्मि என்னும் வகையில் விளங்கும் हरिर्नारायणः प्रभुः தான் பலவத்தரன் என்று குறிப்பிட்டு

ये ये हताः चक्रधरेण राजन् त्रिलोक नाथेन जनार्दनेन ।
ते ते गतास्तत्र लयं नरेन्द्राः क्रोधोपि देवस्य वरेण तुल्यम् ॥
(உ. கா. அதிகபாட 7.22)

யார் யார் சங்கு சக்ராதி ஆயுதங்கள் தரித்தவனை, த்ரிலோகநாதனை ஜனார்தனனால் வதம் செய்யப்படுகிறார்களோ அவரவர்களும் அப்பரம்பொருளுடன் லயமாகிவிடுகிறார்கள் என்று உரைக்கிறார். மேலும் ராவணனுக்கு அந்த நிலையடைய உபாயமும் சொல்லுகிறார். அதாவது

कृते युगे व्यतीते वै मुखे त्रेतायुगस्य तु ।
हितार्थं देव मर्त्यानां भविता नृप विग्रहः ॥
इक्ष्वाकूणां च यो राजा भाव्यो दशरथो भुवि ।
तस्य सूनुर्महातेजा रामोनाम भविष्यसि ॥
(உ. க. அதிகபாட 8.19)

என்று க்ருதயுகம் கழிந்து த்ரேதா யுகத்தில் இக்ஷ்வாகு வம்சத்தில் தசரதன் திருக்குமாரனாய் ராமனாய் அவதரிக்கப் போவதை எடுத்துச் சொல்ல, ராவணனும்

त्वया सह विरोधेच्छुश्चिन्तयामास राघव ।
वाक्यं सनत्कुमारस्य चिन्तयानो मुहुर्मुहुः ॥
रावणो मुमुदे श्रीमान् युद्धार्थी विचचार ह ॥
(உ. கா. அதிகபாட 8.28)

என்றபடி ராமன் அவதாரத்தை எதிர்பார்த்து அவனுடன் யுத்தம் செய்து அவனாலேயே வதம் செய்யப்பட்டு அவனுடன் லயமடைவதற்குள்ள வழியையே நினைந்து நினைந்து திரிகிறான்.

ஒரு ஸமயம் ராவணன் யுத்த வெறி கொண்டு இந்திரனை எதிர்க்கிருன். அப்பொழுது இந்திரன் ராவணனது பராக்ரமத்தையும், தவத்திஞல் அடைந்த வரன்களின் பலத்தைக் கெண்டு உலகங்களுக்கெல்லாம் இழைக்கும் தீமைகளேயும் கண்டு, பகவான் நாராயணனிடத்தில் முறையிடுகிருன். பகவானே ராவணனே ஜெயிப்பதற்கு வல்லமை அவனிடத்தில் இல்லேயென்று தெரிவித்தும் அவனேப் போர் செய்ய அனுமதித்து

अहमेव निहन्तास्मि रावणं स पुरस्सरम् ।
देवतानन्दयिष्यामि ज्ञात्वा कालमुपागतम् ॥

(உ. கா. 27-20)

தானே ராவணனே மூலமொடு அழிக்கும் காலத்தை எதிர்பார்த்திருக்குமாறு கட்டளேயிடுகிருர்.

மற்ருெரு ஸமயம் இக்ஷ்வாகு வம்சத்தில் ராமனுக்குப் பல தலேமுறைகள் முன்பாக வந்த அனரண்யன் என்பவனேடு ராவணன் யுத்தம் செய்து அவனேக் கொன்ற பொழுது, அனரண்யன்

उत्पत्स्यते कुलेह्यस्मिन्निक्ष्वाकूणां महात्मनां ।
रामो दाशरथिर्नाम यस्ते प्राणान् हरिष्यति ॥

(உ. க. 19.31)

என்று எங்கள் மேலான இக்ஷ்வாகு வம்சத்தில் தாசரதியாய் ராமனென்ருவன் தோன்றி உன் ப்ராணனே அபகரிப்பான் என்று சாபமிடுகிருன்.

தசரதன் புத்ரகாமேஷ்டியாகம் நடத்துகிருன் ப்ரம்மாதி தேவர்கள் எல்லோரும் கூடி ராவணனுல் இழைக்கப்படும் துன்பங்களேக் குறித்து நாராயணனிடம் முறையிடுகிருர்கள்.

त्वां नियोक्ष्यामहे विष्णो लोकानां हितकाम्यया ।
राज्ञो दशरथस्य त्वमयोध्याधिपतेः प्रभोः ॥
... ...
विष्णो पुत्रत्वमागच्छ कृत्वात्मानं चतुर्विधं ॥
(பா. கா. 5.19)

என்று ப்ரார்த்திக்க, ஸ்ரீ மஹா விஷ்ணுவும் அவர்களுக்கு ஆறுதல் கூறி, தான் மனுஷ்ய லோகத்தில் அவதரித்து ராவணனைக் கொன்று பூமியைப் பரிபாலனம் செய்வதாக வாக்களிக்கிறார்.

भयं त्यजत भद्रं वो हितार्थं युधि रावणं ।
......त्स्यामि मानुषे लोके पालयन् पृथिवीमिमां ॥
(பா. கா. 15.28)

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் சண்டையில் அஸுரர்கள் தோல்வியடைந்து ப்ருகு பத்னியான க்யாதியைச் சரணடைந்து அவளால் அபயமளிக்கப்பட்டுத் தப்பித்துநிற்கிறார்கள். தேவர்கள் பக்ஷனான மஹா விஷ்ணு தேவர்களின் பொருட்டு, தனது சக்ராயுதத்தினால் ப்ருகு பத்னியின் தலையைக் கொய்துவிட, ப்ருகு ரிஷி சினம் கொண்டு விஷ்ணுவையே பூவுலகத்தில் பிறந்து வெகு காலம் தன் பத்னியைப் பிரிந்து வருந்துமாறு சபிக்கிறார் :-

यस्मादवध्यां मे पत्नीमवधीः क्रोधमूर्छितः ।
तस्मात्त्वं मानुषे लोके जनिष्यसि जनार्दन ।
तत्र पत्नी वियोगं त्वं प्राप्स्यसे बहुवार्षिकम् ॥
(உ. கா. 51.16)

ஸ்ரீமத் ராமாயண ஆரண்ய காண்டத்தில் ஸ்ரீராமபிரான் விராதனைவதம் செய்கிறார். அப்பொழுது விராதன் தன் ஸ்வயரூபமடைந்து தனது விருத்தாந்

தத்தைச் சொல்லுகிறான். தான் தும்புரு என்னும் கந்தர்வனென்றும் வைச்ரவணனால் சபிக்கப்பட்டு அந்த நிலையை அடைந்தானென்றும் அந்த சாபத்திற்கு விமோசனம் தாசரதியால் வதம் செய்யப்படும்பொழுது கிட்டும் என்று அறிந்திருந்ததையும்தெரிவிக்கிறான்.

यदा दाशरथी रामस्त्वां वधिष्यति संयुगे ।
तदा प्रकृतिमापन्नो भवान् स्वर्गं गमिष्यति ॥

(ஆ. கா. 4.15)

இதே போல், அஹல்யா சாபம், தசரதனுக்கு முனிவரிட்ட சாபம், கபந்தன் அடைந்த சாபம் முதலான பல சாபங்களும் ராமாவதாரத்திற்கு அனுகூலம் செய்திருக்கின்றன.

க்ருதயுகத்தில், தபஸி குசத்வஜருக்கு வாக்ரூபமாக உண்டானவள், 'வேதவதி'. அவள் மஹாவிஷ்ணுவுக்கே வரிக்கப்பட்டாள். எனினும், தம்பு என்ற தைத்ய ராஜன் அவள் பொருட்டு குசத்வஜரைக் கொலை செய்ய, குசத்வஜரின் பத்னியும் அக்னிப்ரவேசம் செய்ய, தனியாக்கப்பட்ட வேதவதி பரவாஸுதேவனையே பதியாயடைய தவம் செய்கிறாள். அவ்வமயம், ராவணன் அவளைக் கண்டு மோஹங்கொண்டு அவளைத் துன்புறுத்துகிறான். அது தாளாது, அவளும் தன்னைத் தீக்கிரையாக்கிக் கொள்ளுகிறாள். அப்பொழுது

यस्मात्तु धर्षिता चाहं त्वया पापात्मना वने ।
तस्मात्तव वधार्थं हि समुत्पत्स्येह्यहं पुनः ॥

(உ. கா 7-31)

என்று ராவணனைச் சபிக்கிறாள். க்ருதயுகத்தில் வேதவதியாயிருந்த அவளே த்ரேதா யுகத்தில் ஜனகனுக்கு அயோனிஜையாய்த் தோன்றிய புத்ரி ஜானகியாய்

ராவண வதத்திற்கு ஸஹாயமாய் அவதரித்தாள் என்று

एषा वेदवती नाम पूर्वमासीत् कृतेयुगे ।
.....उत्पन्ना मैथिल कुले जनकस्य महात्मना ॥

முதலிய ச்லோகங்கள் தெரிவிக்கின்றன.

குபேரனிடமிருந்து அபஹரித்த புஷ்பக விமான மேறி ராவணன் கைலாயம் செல்லுகிறுன், விமானம் அதன் இயல்புக்கு மாருகத் தடைபடுகிறது. நந்தி பகவான் எதிர்ப்பட்டு. ராவணனைத் தடுக்க, ராவணன் கோபம் கொண்டு நந்தி பகவானைக் குரங்கு முகம் கொண்டவன் என்று ஏளனம் செய்கிறுன். நந்தி பகவானும் சினம் கொண்டு ராவணனுக்குச் சாபமிடுகிறுர்.

यस्माद्वानर रूपं मामवज्ञाय दशानन
अशनीपात सङ्काशमपहासं प्रमुक्तवान् ।
तस्मात् मद्रूप संपन्ना मद्वीर्य समतेजसः
उत्पत्स्यन्ति वधार्थं हि कुलस्य तव वानराः ॥

(உ. கா. 16-17)

என் ரூபம் கண்டு அவமதித்த காரணத்தால், என் ரூபம், தேஜஸ்ஸுக்கு ஸமானமான வானரர்களால் உனக்கு அழிவு என்றவாறு.

இவ்வாறெல்லாம், பரம்பொருளான பரவாஸுதேவனே ப்ரக்ருதியைத் தன் வசமாக்கிக்கொண்டு ராமாவதார நிமித்தமாய்ப் பல காரண காரியங்களையும் ஸ்ருஷ்டித்துக் கொண்டு, அவைகளின் நியதிக்குக் கட்டுப்பட்டு ராமனுக அவதரித்து நடந்துகொண்டான் என்பதற்குச் சான்றுகள் பலபல. आत्मानं मानुषं मन्ये रामं दशरथात्मजं என்று தன்னை மனுஷ்யனுகவே ப்ரகட

னம் பண்ணிக் கொண்டாலும், தீர புருஷர்களான மஹான்கள் அவன் நிஜஸ்வரூபத்தை உணர்ந்து அனுபவிக்காமலிருக்கமாட்டார்கள். ஸ்ரீத்யாக ப்ரும்மமும் "எவரனி நிர்ணயிஞ்சிரிரா" என்னும் கீர்த்தனத்தில் "சிவுடனோ, மாதவுடனோ, கமலபவுடனோ, பரப்ரும்மனோ" என்று ராமனைப் பாடுகிறார். பல பாத்திரங்களைச் சேர்த்துக் கொண்டு நல்ல ஒத்திகையுடன் நடித்த நாடகமன்றோவென்று "ஏதாவுன" என்னும் கீர்த்தனத்தில் "ஸீதா லக்ஷ்மண பாதரிபுக்ந வாதாத்மஜுலதோ நாடு நாடக" என்று அனுபவித்திருக்கிறார். "ஸ்ருஷ்டி புஷ்டி, நஷ்டி ஸேயுபனுலு நிக்ருஷ்டமனுசுனு த்ரிமூர்த்துலகொஸகி, துஷ்டுடை பரகெஸத்பக்த மனோபீஷ்டமுலிச்சு" என்று "மனஸா ஸ்ரீ ராமசந்த்ருனி" கீர்த்தனத்திலும், "அவநிகிரம்மனிபிலிசிநமஹாராஜெவடோவானிகிம் ரொக்கெத" என்று 'எவரிகை யவதாரமெத்திதிவோ" என்னும் கீர்த்தனத்திலும் அனுபவித்திருக்கிறார். அதாவது, ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்னும் முத்தொழில்களும் இழிவென்று மும்மூர்த்திகளுக்காக ஆக்கிவிட்டு, உத்தமமான பக்தர்களின் அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்ய எடுத்த அவதாரமென்றும், பூவுலகுக்கு வரும்படியழைத்த மஹாராஜருக்கு நமஸ்காரம் என்றும் அனுபவிக்கிறார்.

मयाऽध्यक्षेण प्रकृतिः सूयते सचराचरम् ।
हेतुनानेन कौन्तेय जगद्विपरिवर्तते ॥
अवजानन्ति मां मूढाः मानुषीं तनुमाश्रितम् ।
परं भावमजानन्तो मम भूतमहेश्वरम् ॥ (கீ. 9-10-11)

என்னும் ச்லோகங்களால் மனித வடிவு தாங்கி வந்த காரணத்தால் மட்டும் ப்ரக்ருதியின் உதவி கொண்டு சராசரங்களையாக்கிக் காக்கும் பரம்பொருளையறியாதவன் மூடன் என்கிறார் கீதாசார்யன்.

✻

குருபாதம்

அப்பரும் அப்பூதிஅடிகளும்

ஸ்ரீமான் V. N. ஆறுமுக முதலியார், B.Com., F.C.A.,
Chartered Accountant, Madras.

சோழ வள நாட்டில் திருவையாற்றுக்கருகில், திங்களூர் என்கிற ஊர் இருக்கிறது. அவ்வூரில் அப்பூதி என்கிறபெயருடைய ஒருவர் வாழ்ந்துவந்தார். இவர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர்.

அவர் சேக்கிழார் வாக்கின்படி "தாண்டவம்புரிய வல்லதம்பிரானுர்க்கு அன்பர்" "எல்லையில் தவத்தின் மிக்கார்" "களவு பொய் காமம் முதலிய குற்றம் காய்ந்தார்."

இவருடைய காலத்தில்தான் அறுபத்துமூன்று நாயன்மார்களில் மற்றொருவரும், சமயாசார்யர்கள் நால்வரில் ஒருவருமான திருநாவுக்கரசர் வாழ்ந்தார். இவர் தம்மை ஊழியராகவும் இறைவனை ஆண்டானுகவும் பாவித்து வழிபட்டவர். மனம், மொழி, மெய் என்ற மூன்றிலும் திருத்தொண்டு புரிந்தவர். இவருடைய மற்றொரு பெயர் அப்பர்.

அப்பூதி அடிகள் திருநாவுக்கரசரை நேரே கண்டறிந்ததில்லை. ஆனல் அவருடைய வரலாற்றை கேட்டறிந்தவர். அவரிடம் பேரன்புடையவராகவும் அளவற்ற பக்தியுடையவராகவும் வாழ்ந்தார். அப்பரின்

வடிவு தாம் காணுவிட்டாலும், மன்னுசீர் வாக்கின் வேந்தர் அடிமையும், தம்பிரானுர் அருளும் கேட்டதால் அவர் நாமத்தால் படி நிகழ் மாடங்கள், தண்ணிர்ப் பந்தர்கள் முதலாயுள்ள முடிவிலா அறங்கள் செய்தார். இல்லத்தில் உள்ள அளவைகள், நிறைகோல், மக்கள் ஆவொடு மேதி, மற்று உளவெலாம் திருநாவுக்கரசின் நாமம் சாற்றும் ஒழுக்கலாற்ருர்.

திருநாவுக்கரசர் திருப்பழனத்து இறைவனைத் தரிசித்து விட்டு அருகிலுள்ள வேறு பல தலங்களையும் தரிசிக்கும் பொருட்டு திங்களூர் வழியாக வந்தார். அங்கே எப்பொழுதும் மக்கள் போய்க் கொண்டிருக்கும் ஒரு சாலையில் அருளுடையவர்களின் உள்ளத்தைப் போன்ற குளிர்ச்சி பொருந்தியதாயும் வேனிற்காலத்தின் பரிவை அகற்றிக் கொண்டும் உள்ள நிழல் தரு தண்ணீர்ப்பந்தல் ஒன்றைக் கண்டார்.

அப்பந்தலில் ''திருநாவுக்கரசர்'' என்கிற பெயரை எங்கும் எழுதியிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். அங்குள்ளவர்களை அப்பந்தரை அப்பெயரிட்டு அந்த அமைத்தவர் யார் என்று வினவினுர். அப்பந்தரை அறிந்தவர்கள் அதைத்தவிர குளங்களும், சோலைகளும் அரசின்பெயரால் அமைத்தவர் அப்பூதி அடிகள் என்றும், அவ் வந்தணர் அந்த தொன்மை வாய்ந்த ஊரில் உள்ளவர்தான் என்றும் கூறி, அவர் சற்றுமுன்னர்தான் அவருடைய இல்லத்திற்குச் சென்ருர், அதுவும் சமீபத்தில்தான் இருக்கிறது என்று மொழிந்தனர்.

உடனே நாவுக்கரசர் அப்பூதி அடிகளின் வீட்டிற்குச் சென்று வாயிலை அணுகியதும், வீட்டுக்குள் இருந்த அந்தணரும் சிவபெருமானின் அடியார் ஒருவர் வந்திருப்பதைக் கேள்வியுற்று வெளியே வந்து அப்பர் கழல் பணிய, வாகீசரும் அவர் பணியா முன் பணிந்தார்.

''கருணையே வடிவமாய் தாங்கள் அடியேனுடைய இல்லத்திற்கு எழுந்தருள என்ன மாதவஞ் செய்தேனோ! எழுந்தருளியதன் நோக்கம் என்னவோ?'' என்று அப்பூதி அடிகள் வினவ,

''திருப்பழனத்துள் எழுந்தருளியிருக்கும் ஈசனை வழிபட்டுவிட்டு வந்து கொண்டிருக்கிறேன். வழியில் நீர் வைத்திருக்கும் வளம் பொருந்திய நிழல் பரப்பும் தண்ணீர்ப் பந்தரைக் கணடேன். மற்றும் பல அறங்கள் தாங்கள் செய்து வருவதையும் கேள்வியுற்றேன். அத்தகைய அறங்களைப் புரிந்து வருகின்ற தங்களைக் காண வந்தேன்'' என்று சொல்லி விட்டு,

''கங்கையை முடியில் சூடிய இறைவனின் அடியவர்களுக்காக நீர் வைத்திருக்கும் ஒப்பற்ற தண்ணீர்ப் பந்தலில் நும்முடைய பெயரை எழுதாதே, வேறுயார் பெயரையோ எழுதியிருப்பதைக் கண்ணுற்றேன். அப்படி எழுதிய காரணம் என்னவோ'' என்று வினவினர்

அதைச் செவியுற்ற மறையோர் நிலையழிந்தார். கோபம் பொறுக்கமாட்டாமல்,

''நீங்கள் கேட்டது நன்றாக இல்லையே. சமணரோடு சேர்ந்த அரசனின் சூழ்ச்சிகளை திருத்தொண்டின் உறைப்பாலே வென்றவரின் திருப்பெயரா வேறொருபேர்? சிவபெருமானுக்குச் செய்யும் திருத்தொண்டின் வலிமையால் மறுமையில் நலம்பெருவதன்றி இம்மையிலும் நலம் அடையக்கூடும் என்பதை என்போன்றவர்களும் தெளியும்படி அருட்செயல்புரிந்த திருநாவுக்கரசரின் திருப்பெயரை எழுத, யான்கேட்க வெம்மைமொழி விளம்பினீர்? அவரைக் கல்லோடு கட்டி கடலில் போட்டபோது அக்கல்லோடு மிதந்து கரையேறியவர் பெருமையை உலகத்தில் அறியாதவர்களும் உண்டா? அப்படியிருக்க சிவவேடத்துடன்

இருக்கும் நீங்கள் இம்மாதிரியான கேள்வி கேட்டீர்களே! நீங்கள் யார்? எங்கே இருப்பவர்கள்?'' என்று படபடப்பாகக் கேட்டார்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட அப்பர் அவருடைய பெருமையை உணர்ந்து கொண்டார். ''பிறசமயத்தில் இருந்து இறைவன் அருளிய சூலை நோயினால் ஆட்கொள்ளப்பட்டு சைவ சமயம் அடைந்து உய்ந்த தெருளும் உணர்வில்லாச்சிறியேன் யான்'' என்று பணிவுடன் கூறினார்.

அதைக்கேட்டதும் அப்பூதி அடிகள் தம்முடைய கைகள் தாமே தலைமேல் குவிய, கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் சொரிய, மொழி தடுமாற, உடம்பெல்லாம் உரோமபுளகம் பொலியத் தரையின்மிசை வீழ்ந்தார். வாகீசரும் அவரை எதிர்வணங்கிக் கையால் எடுத்துவிட்டார். அப்பூதி அடிகள் அற்றவர்கள் அருநிதியம் பெற்றாற்போல் ஆனந்தக் கடலில் மூழ்கிக் கூத்தாடினார்; ஓடினார்; பாடினார். இன்னது செய்வது என்று புரியாமல் வீட்டுக்குள் போய்த் தம் மனைவி மக்களை அழைத்துக் கொண்டு வந்து அவர் பாதம் பணியச் செய்தார்.

பின்பு அப்பரை வீட்டுக்குள் எழுந்தருளச் செய்து திருவடிகளை நீரால் விளக்கி அந்நீரைச் சிரசில் தெளித்துக்கொண்டு உண்டார். திருவமுது செய்தருள வேண்டும் என்று விண்ணப்பிக்க அவரும் இசைந்தார் உடனே அப்பூதி அடிகள் தம் மனைவியாரை நோக்கி ''என்னபேறு பெற்றோம்'' என்று சொல்ல அவரும் ''இறைவனின் அருளினால் வந்தது'' என்று உவந்து கொண்டு திருஅமுது சமைக்கத் தொடங்கினார்.

சமையல் முடிந்ததும் புத்திரர்களில் மூத்த திருநாவுக்கரசை வாழை இலை கொண்டுவர நல்ல தாய்

தந்தை ஏவ, தானும் இக்காரியம் செய்ய பாக்கியம் பெற்றேன் என்ற எண்ணத்தோடு தோட்டத்திற்கு விரைந்து சென்று பெரிய வாழை மரத்தில் இலை பறிக்கும் போதில் அரவம் உள்ளங்கையில் தீண்டிவிட்டது. விஷத்தால் விழும் முன்னம் பறித்த அவ்விலையைக் கொடுத்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் விரைந்து சென்று இலையைத் தாயார் அருகில் வைத்ததும் ஆவி பிரியப் படிமேல் வீழ்ந்தான்

தளர்ந்து வீழ்ந்த மகனைக் கண்ட பெற்றோர் குறிகளைக் கொண்டு விடத்தினுல் வீழ்ந்தான் என்று தெரிய வந்தும் சிறிதும் மனவாட்டம் இன்றி தொண்டரை அமுது செய்விக்கும் வேலையில் ஈடுபட்டனர்.

அடியார் அமுது செய்ய கால தாமதமாகின்றது என்று எண்ணி அவ்வுடலைப் பாயினுள் மூடி வைத்து விட்டு அப்பரை அணுகி அமுது செய்து தம் குடி முழுதும் உய்யச் செய்யுமாறு கேட்டுக் கொண்டனர்.

அப்பரும் தம் திருப்பாதங்களை நீரில் கழுவிக் கொண்டு உணவருந்த அமர்ந்து தாமும் வெண்ணீறு அணிந்து கொண்டு தம்பதிகளுக்கும், புதல்வர்களுக்கும் அளித்தார். அது போழ்து அப்பூதி அடிகளை நோக்கி மூத்த திருநாவுக்கரசைக் காட்டும் என்று கேட்க, "இப்போது இங்கு அவன் உதவான்" என்று மொழிந்தார்.

உண்மையை விரித்துச்சொல்ல வேண்டும் என்று அப்பர் பணிக்க பெரியவர் தமது இல்லத்தில் அமுது செய்யும் பாக்கியத்தை இழந்தோமே என்ற எண்ணம் தோன்றியபோதிலும் உண்மையை உரைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மகனுக்கு நேர்ந்ததைப் பகர்ந்தார்.

அதைச் செவியுற்ற நாவுக்கரசர் வேறெவரும் இம் மாதிரியான செயல் புரியார் என்று அப்பூதி அடிகளைக்

கடிந்து கொண்டு எழுந்து சென்று உயிரற்ற சவத்தை நோக்கி அண்ணலார் அருளும் வண்ணம் பதிகம்பாடி விடம் நீங்கும்படி செய்தார். மூத்த திருநாவுக்கரசும் உறக்கம் நீங்கி எழுபவனைப் போல, விஷம் தெளிந்து எழுந்து அப்பரை வணங்கினன். அவர் புனித நீறு அளித்தார். அதைக் கண்ட யாவரும் அப்பரின் தொண்டு நெறியின் சிறப்பைப் போற்றினர்கள். அப்பூதி அடிகளாரும், மனைவியாரும் அன்பர் அமுது செய்யச் சிறிது இடையூறு செய்தான் தன் மகன் என்று கவலைப்பட அப்பரும் உடனே உள்ளே சென்று அமுது செய்தருளினர்.

அங்கே சில காலம் தங்கி, பின்பு திருப்பழனம் என்னும் தலத்துக்குச் சென்றார். அப்பூதி அடிகளின் அன்பை மறக்கமுடியாத அவர் அத்தலத்தில் வழிபட்டுத் திருப்பதிகம் பாடுகையில் கடைசிப் பாசுரத்தில் "அழலோம்பும் அப்பூதி குஞ்சிப் பூவாய் நின்ற சேவடியாய்" என அப்பூதி நாயனரை சிறப்பித்தருளினர்.

இவ்வரலாற்றில் நாம் சிந்திக்க வேண்டியது "அப்பர் பக்தி சிறந்ததா?" அல்லது "அப்பூதி அடிகள் பக்தி சிறந்ததா ?" என்பது அல்ல. இவ்வரலாற்றிலிருந்து நாம் தெரிந்து உணர வேண்டியவை எவை? என்பதே.

1 முதல் பாடலில் "தாண்டவம் புரியவல்ல தம்பிரானருக்கன்பர்" என்று ஆரம்பித்த சேக்கிழார் இரண்டாவது பாடலை "களவு பொய், காமம், கோபம், முதலிய குற்றம் காய்ந்தார்" என்று ஆரம்பித்து இருக்கிறர். அதாவது கடவுள் வாழ்த்தில் 6வது குறளில் திருவள்ளுவர்,

> "பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
> நெறி நின்றர் நீடு வாழ்வார்"

என்று குறிப்பிட்டுள்ள இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர்களுள் அப்பூதி அடிகளும் ஒருவர் என்பதை சேக்கிழார் சுட்டிக் காண்பிக்கிறார். ஆக ஆண்டவனிடம் பக்தி மாத்திரம் இருந்து பயனில்லை. பொய்தீர் ஒழுக்கத்தோடு கூடியதாக இருக்க வேண்டும். இல்லை, பொய் தீர் ஒழுக்கத்தோடு கூடிய இறையுணர்வுதான் பக்தி யாகும் என்பதைத் தெளிய வேண்டும்,

2. உலகில் பெரியது எது என்பதை விளக்க வந்த ஔவைப் பிராட்டியார் "பெரிது பெரிது புவனம் பெரிது" எனத் துவங்கி "தொண்டர்தம் பெருமை சொல்லவும் அறிதே" என்று முடிக்கிறார். ஆகையால் இறைவனிடத்தில் உள்ள பக்தியோடு, அடியவர்களிடத்திலும் அன்பும் பரிவும் இருக்க வேண்டும்.

நாவுக்கரசரை அப்பூதி அடிகள் நேரில் கண்டதில்லை. அந்நிலையில் அவரின் அருட்செயல்களைக் கேள்வியுற்றதிலிருந்து அவர்பால் அளவிலா அன்பு கொண்டார். அந்த அன்பால் தன்னையிழந்து தான் செய்த பல்வேறு அறங்களை அப்பரின் நாமத்தால் அமைத்தார். நாமும் தெய்வ பக்தியோடு அடியார்களிடத்தில் அன்புடையவர்களாக இருக்கவும், நம்மால் இயன்ற அறங்களைச் செய்யவும் முயலுவோமாக.

3. அப்பூதி அடிகள் அப்பரை நோக்கி "........திருத்தொண்டின் உறைப்பாலே வென்றவர் தம் திருப்பேரோ வேறொருபேர்...... எங்குறைவீர்? நீர் தாம் யார்? இயம்பும்" எனக் கேட்டதும்

அப்பர் "பிறதுறையினின்றேற அருளு பெருஞ்சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த தெருளும் உணர்வில்லாத சிறுமையேன்யான்" என்று விடை அளித்தார்.

அப்பரின் பெயரை "வேருெருபேர்" என்று ஒரு வர், அதுவும் ஒரு சிவனடியார் சொல்லக் கேட்டதும் அப்பூதி அடிகள் அடைந்த நிலேயும் அவர் அப்பர்பால் கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்துகிறது.

அப்பர் கூறிய விடையைப் படித்ததும்

''பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னே வியந்து''

என்ற குறள்தான் நினைவுக்கு வருகிறது. அப்பருக்கே அப்படிப்பட்ட பணிவு இருந்திருக்குமானல் நமக்கெல்லாம்? இல்லே அப்பரைப் போன்றவர்களுக்குத் தான் பணிவே இருக்கும். வள்ளுவர் சொல்லியிருப்பதும் அதுதானே

4. அப்பூதி அடிகளும் அவர் இல்லத்தரசியாரும் தம் மகன் விடத்தினுல் வீந்தான், என்பதை அறிந்தும் ''அற இது தெரியா வண்ணம் அமுது செய்விப்போம் என்று எண்ணிஞர்கள். சாதாரண மக்களாயிருந்தால் அந்த அடியார் வந்ததால்தான் தம்மகனே இழக்க நேரிட்டது என்று எண்ணியிருப்பார்கள் அப்படி எண்ணியிருந்தால் அவ்வடியாரின் அன்பை இழப்ப தோடு தம்மகனேயும் இழந்திருப்பர். ஆனுல் அப்பூதி அடிகளாருக்கும் அவர்தம் மனேவியாருக்கும் தம் மகனே இழக்க நேரிட்டதே என்ற எண்ணமே தோன்றவில்லே அதற்கு மாருக ''பெரியவர் அமுது செய்யும் பேறிது பிழைக்க என்னேவருவது'' என்று தான் வருந்திஞர் கள்.

மேலே குறிப்பிட்டவைகளே அடியேன் இவ்வரலாற்றிலிருந்து உணரும்படி செய்தான் நான் வணங்கும் முருகன்.

நாமும் சிற்றின்பம் வெஃகாமல், மற்றின்பத்தை நாடுவோமானல் அறன் அல்லாதவற்றைச் செய்ய

மாட்டோம். அறன் அல்லாதவற்றைச் செய்யாமல் இருக்க பழகிக்கொண்டால் பொய்தீர் ஒழுக்க நெறியில் நிற்க முயலுவோம். பொய்தீர் ஒழுக்க நெறியில் நடை பயில ஆரம்பித்தவுடன் நாமும் மாசில் தொண்டர்களாவோம்.

அடியேனும் தற்போது மாசுடைய தொண்டனுகத் தான் இருக்கிறேன். மாசில் தொண்டனுகும் முயற்சியில் அப்பரும் அப்பூதி அடிகளும் துணை செய்வார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

THE CALL OF THE JAGADGURU

43 discourses of His Holiness "Periyaval",
rendered in English by

Prof P. Sankaranarayanan,

PRICE: Rs 4.00

PUBLISHERS:

Ganesh & Company, Madras-600017.

श्रीगुरुचरणारविन्दाभ्यां नमः ॥

ஸ்ரீமத் சங்கர பகவத்பாதர்கள்

அருளிச் செய்த

॥ आत्म पूजा ॥

ஆத்ம பூஜா

தமிழ் விளக்கம் :

ப்ரஹ்மஸ்ரீ கோபாலகிருஷ்ண கனபாடிகள் என்கிற
ஸ்ரீ B. கோபால ஐயர் அவர்கள்
அத்யயன பட்டர், பழநி.

अहमेको विशिष्टोस्मीत्येवमावाहयेच्छिवम् ।
आसनं कल्पयेत्पश्चात्स्वप्रतिष्टात्मचिन्तनम् ॥ १ ॥

யான் ஏகனய் விசிஷ்டனயிருக்கின்றேன் என்றிவ்வாறு சிவத்தை ஆவாஹனம் செய்க. பின்னர் ஸ்வப்பிரதிஷ்டையாகிய ஆத்மசிந்தனமான ஆசனத்தைக் கற்பிக்க.

पुण्यपापरजस्सङ्गो ममनास्तीति चिन्तनम् ।
पाद्यं समर्पयेद्विद्वान्सर्वकर्मविनाशनम् ॥ २ ॥

புண்ணிய பாபரஜசின் (துகளின்) சங்கம் எனக்கில்லை யென்னும் சிந்தனமான சர்வ கர்மங்களையும் கெடுக்கும்பாத்தியத்தினை வித்வானனவன் சமர்ப்பிக்க.

अनेककालविधृताऽतुलाज्ञानजलाञ्जलिम् ।
विसृजेदात्मलिङ्गस्य चैवमर्घ्यं समर्पणम् ॥ ३ ॥

அனேக காலமாய்த் தாங்கியுள்ள அக்ஞான ஜலாஞ்சலியை விடுக. இவ்வாறு ஆத்மலிங்கத்திற்கு அர்க்யம் ஸமர்ப்பித்தலாம்.

आत्मानन्दजलेनैव सर्वलोकपरिप्लुतः ।
अक्लेद्योहमितिध्यानमभिषेचनमात्मनः ॥ ४ ॥

ஆத்மானந்த ஜலத்திலேயே சர்வலோகத்தையும் மூழ்கச் செய்வதும் ஒன்றினால் நனைக்கப்படாததும் யானென்னும் தியானம் ஆத்மாவின் அபிஷேகமாம்.

निरावरणचैतन्य प्रकाशोस्मीति चिन्तनम् ।
आत्मलिङ्गस्य सद्वस्त्रं अत्यन्तं चिन्तयाम्यहम् ॥ ५ ॥

நிராவரண சைதன்ய ப்ரகாசன்யான் என்று சிந்தித்தலாகிய ஆத்மலிங்கத்தின் ஸத்வஸ்த்ரத்தினை அத்யந்தம் யான் சிந்திக்கின்றேன்.

त्रिगुणात्माशेषलोकमालिका सूत्रमस्म्यहम् ।
इति निश्चयमेवात्रचोपवीतं परं मतम् ॥ ६ ॥

முக்குண வடிவ சகலலோகமாலிகை யான், சூத்திரம் யான் என்னும் நிச்சயமே இங்கு மேலாக மதிக்கப்பட்ட உபவீதமாம்.

समस्तवासनामिश्र प्रपञ्चोयं धृतोमया ।
नान्येनेत्यनुसन्धानं आत्मनश्चन्दनं भवेत् ॥ ८ ॥

சகல வாசனையும் கலந்த இப்பிரபஞ்சம் என்னும் தரிக்கப் பட்டுள்ளது. வேறொருவராலில்லையென்னும் அனுசந்தானம் ஆத்மாவுக்குச் சந்தனமாகிறது.

रजस्सत्वतमोवृत्तित्यागरूपैस्तिलाक्षतैः ।
आत्मलिङ्गं यजेन्नित्यं जीवन्मुक्ति प्रसिद्धये ॥ ८ ॥

ரஜஸ், ஸத்வம், தமஸ் என்னும் விருத்திகளை விடுதல்வடிவ திலாக்ஷதை (எள் அரிசி)களால் ஆத்மலிங்கத்தினை ஜீவன் முக்திப் பிரசித்தியின் பொருட்டு நித்தியம் பூஜிக்க.

ईश्वरोगुरुरात्मेतिचात्वभेद विवर्जितैः ।
बिल्वपत्रैः द्वितीयैः आत्मलिङ्गं यजेद्दिनम् ॥ ९ ॥

ஈசுவரன், குரு, ஆத்மாவென்னும் பேதமின்றிய அத்விதியமான வில்வபத்திரங்களால் ஆத்மலிங்கத்தினை தினமும் பூஜிக்கக் கடவன்.

समस्तवासनात्यागधूपं तस्यविचिन्तयेत् ।
ज्योतिर्मयात्मविज्ञानं दीपं संदर्शयाम्यहम् ॥ १० ॥

சகல வாசனையும் விடுதலாகிய தூபத்தினை அதற்குச்சிந்திக்கக்கடவன். ஜோதிமய ஆத்மவிக்ஞானமாகிய தீபத்தினைச் செவ்வையாய்க் காட்டுகின்றேன் யான்,

आत्मलिङ्गस्यनैवेद्यं ब्रह्माण्डाख्यं महोदनम् ।
आत्मानन्दरसास्वादमृत्युरस्योप सेवनम् ॥ ११ ॥

பிரம்மாண்டமென்னும் மஹோதனம் ஆத்மலிங்கத்திற்கு நைவேத்தியமாம். ஆத்மானந்த ரசத்தைச்

சுவைத்தலாகிய மிருத்தியு இதன் உபசேவன (வியஞ்சன)மாம்

अज्ञानोच्चिष्ट कालिकाक्षालनं ज्ञानवारिणा ।
विशुद्धस्यात्मलिङ्गस्य हस्तप्रक्षालनं स्मरेत् ॥ १२ ॥

அக்ஞானமாகிய எச்சிலை ஞான ஜலத்தால் கழுவுதல் ஆத்மலிங்கத்தின் கைகழுவுதலென்று கருதுக.

रागादिगुणशून्यस्य शिवस्य परमात्मनः ।
सरागविषयाद्यासत्याग ताम्बूलचर्वणम् ॥ १३ ॥

இராகாதி குணமின்றிய சிவமாகிய பரமாத்மாவிற்கு இராகத்தோடு விஷயாத்தியாசத்தினை விடுதல் தாம்பூலம் மெல்லுதலாம்.

अज्ञानध्वान्तविध्वंसप्रचण्डमतिभास्करम् ।
आत्मनो ब्रह्मताज्ञानं नीराजनमिहात्मनः ॥ १४ ॥

அக்ஞான இருளைக் கெடுக்கும் பிரசண்ட சந்திர சூரியனென்னும் ஆத்மாவின் பிரம்மத் தன்மை ஞானம் இங்கு ஆத்மாவுக்கு நீராஞ்சனமாம் (கற்பூர தீபமாம்)

विविधा ब्रह्मसद्दृष्टिमालिका समलङ्कृतम् ।
पूर्णब्रह्मात्मिका दृष्टि पुष्पाञ्जलिमनुस्मरेत् ॥ १५ ॥

பலவித பிரம்ம ஸதிருஷ்டியாகிய மாலிகைகளால் செவ்வையாய் அலங்கரிக்கப்பட்டதாகிய பூர்ணப் பிரம்ம வடிவ திருஷ்டியாகிய புஷ்பாஞ்சலியினைக் கருதுக.

परिभ्रमति ब्रह्माण्ड साहस्राणि महेश्वरे ।
कूटस्थाखिलरूपेस्मिन्निति ध्यानं प्रदक्षिणम् ॥ १६ ॥

நிச்சலமும் எல்லா வடிவமுமான இம்மகேசுவரனிடத்து ஆயிரக்கணக்கான பிரம்மாண்டங்கள் சுழலுகின்றன என்னும் தியானம் பிரதக்ஷிணமாம்.

विश्ववंद्योहमेवात्र कोवावंद्यो मदन्यतः ।
इति निश्चयमेवस्य आत्मलिङ्गस्य वन्दनम् ॥ १७ ॥

இங்கு எல்லோராலும் வணங்கத்தக்கவன் யானே. என்னைவிட வேறு வணங்கத் தக்கவன் யாவன் என்னும் நிச்சயமே ஆத்மலிங்கத்தின் வந்தனமாம்.

सत्यविज्ञानमात्रोहं सन्मात्रोहं निरञ्जनः ।
सर्वातीतस्वरूपोहमित्येवं ब्रह्मतर्पणम् ॥ १८ ॥

அழிவற்ற ஞானமே என் உண்மையான ஸ்வரூபம் ஸத்வம் மட்டுமே என் ஸ்வரூபம் பற்றற்ற நிலையே என் ஸ்வரூபம் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட நிலையே என் ஸ்வரூபம் எனத்தியானம் செய்வதே ப்ரம்மதர்பணம் ஆகும்.

இவ்வாறு ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அருளிச் செய்த ஆத்ம பூஜை முடிந்தது.

[தஞ்சை வெ. குப்புசாமி ராஜு அவர்களின் மொழிபெயர்ப்பான, ஸ்ரீ பஞ்சீகரணாதி' என்ற புத்தகத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டது.]

VEDANTIC THOUGHTS FROM UPANISHADS.

M. Balasubrahmanyan M.A. (Econ) M.Com., LL. B.,
Diploma in Statistics, French and Russian.
Lecturer in Commerce, A. M. Jain College

The final phase of veda and the realisation of vedic ideals is known as Vedanta. This word "VEDA" comes from the Samskrit expression 'VID' which means to know, to reflect and possess. The familiar quotation reminds us of the importance of vedanta. As veda reveals about immortality as well as the attainment of Brahman (Purushartha) it is essential to study.

Vedic thoughts and expressions are given from generation to generation through hearing, retaining in mind, and then cramming. That is why it is called **Karna Paramparagatha Rithi**. Veda is able to unfold the extraordinary capacity of Divine. It is not mere virtue only that it teaches but gives the best revelation of the Paramatman i.e., Brahman. Initially mantras form the base. Brahmanas succeed the mantras and followed by the Aranyakas. Upanishads are the theistic and philosophic thoughts and expressions relating to Hindu ideals. Upanishads are not the utterances of any particular savant or seer but the wholesome expressions of many seers and saints. Through research the Theosophical Society has brought the theme of Upanishads roughly numbering 116. Only about thirteen of the above number has been fully

annotated and explained by great Acharyas. In fact Shankarabhagavatpadal in his Prastanatriya has revealed the dazzling scintillating ideas from ten upanishads which are "**Isa Kena Katha Prasna Munda Mandukya Taittri Aitreyamcha Chandogya Brihadaranyaka Ttata**"

Thus the quintessence of vedic and vedantic philosophy is contained in the upanishads. Apparently, they are engaged in the majestic task of transforming the sacrificial religion prevalent in the past into a great mystical religion. The sublimity of their soaring meditation, the infinite range of their outlook of life, their fearless exposition of soul consciousness, their determined assertion of the verities of existence and lastly, their broad synthesis have all been responsible to evoke a feeling of profound awe and respect. Like oil contained in the sesamom seed, vedanta is contained in every part of Upanishads says MUKTIKOPANISHAD.

ISAVASYOPANISHAD gives a precise but mathematical definition of Brahman. Had Broach Spinoza who identified the universe with the Almighty known it he would be the happiest person. He not only opposed every Christian theology but vehemently pointed out that the Creator and the Universe are one and the same. Full is that and full is this. Out of the full comes the full. When full is removed from the full, full itself remains.

Svetasvatara Upanishad defines Brahman as all pervading whose hands feet eyes and mouth are all around It is concentric, and surrounding throughout. Vedic end is Brahman. It is in several forms. It is the light of all lights, beyond the limits of darkness and understanding.

Samkya theory is expounded in Prasnopanishad. One looks at the Atman as an Enigma. Another one proclaims it as wonderful and a third one hears more about it. Even then nobody understands its truth. Samkarabaghavat-padal in his commentary on KATOPANISHAD points out that people rarely understand the implications of Brahman Even a handful of the multitude does not know what it means. The infinite Brahman is regarded as both transcend-ental and immanent. The best way of indicating Brahman as an analogy is the apparent sleep of the spinning top, going round and round at fullest speed. Outwardly it looks motinless. Brihadaranyaka Upanishad gives out the prayer:"Lead me from the unreal to the real! Lead me from darkness to light! and lead me from death to immortality!

The description of Brahman is contained in Munda-kopanishad as well as Isavasyopanishad. As it is minute it cannot be understood. Though it appears far apart it is close by. Our entry into and exit from this world aswell as living in this world are due to Him. Grand divine, inconceivable in form and smaller than the small, it shines forth. It is farthest and yet it is here at hand, hidden in the hearts of those who see it.

Ekam sat vipra bahuda vadanti. Men of learning say that God is one but he is known by umpteen names. The superiority of Brahman is known from a story given in KENOPANISHAD. Once Brahman won a victory for the gods. God of fire and wind, who thought that they were individually responsible for the victory were engaged in self adulation. Indra sent one god after the other to find out who that Brahman was. Brahman placed before

them a small piece of straw and directed them to show their valour. Neither the god of fire could burn it nor could the god of wind tilt the straw at all ! Through Uma the daughter of Himavat, Indra came to know about the capacity of Brahman.

In Chandogyopanishad, the teacher Ghora Angirasa compares the various periods of man's life with the various parts of sacrifice and lays down that austerities, alms-giving, uprightness are essential along with non-violence and truthfulness. These correspond to the gifts one makes to the priests. Brihadaranyaka Upanishad points out that one should practise the virtues indicated by the syllable DA-DA-DA which means self-control, charity and compassion. Mundakopanishad warns that all ceremonies and sacrificial rites are like leaky boats which are quiie inadequate to cross the river of life.

Knowledge of arts and science of the day would not be sufficient to reach the abode of Brahman. In the version of Chandogyopanishad, Narada approaches Sanatkumara and tells him that he knew all scriptures and arts of the times but that he did not not know ATMAN. "MANTRAVIDEVA ASMI NA ATMAVIT"

Svetasvatara Upanishad gives out in more allegoric terms and explanations about Rudra and Eswara as one and the same. He is omnipresent, omniscient and immanent. Even a spec of a seed he can develop into multitudes. Saints could visualise him within themselves.

The embodiment of Karma is contained in the Isavasyopanishad. The only creator of this world is the

Almighty. We should sacrifice everything to Him. One can enjoy only his share or that which is alloted to one. One should not crave for other's wealth.

Even before the 6th B.C. when Pythogoras, Confucius Buddha and Zoraster tried to develop a new philosophy of religious faith, the upanishads were there. Indian thinkers quietly elaborated a system of intellignt monism. These are the most illuminating ones which are accepted inherently by their descendents. The upanishads furnish the regnant philosophy for India. The recorded systematic philosophy of Hinduism are contained in the Upanishads.

Max Muller calls attention to the fact that more new editions of Upanishad and Sankara are being published in India than Descartes and Spinoza in Europe. Paul Deussen in his 'Philosophy of Upanishad' calls this as New Testament to the Hindu. Arthur Schopenhauer, the chief of modern pantheists of west, points out that the Upanishads had been the solace of his life. Mr. C. S. Braden in his ,'THE SCRIPTURES OF MANKIND" (New York 1952) calls them as scattered excerpts of rare beauty and insight. These show a profound understanding of the great problems of religion and human thoughts. Dr.S. Radhakrishnan calls the upanishads as scriptures of ancient wisdom.

உ

சிவ சிவ

சிவாலய உற்சவ விளக்கம்

சித்தாந்த வித்தகர், கயப்பாக்கம்

திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் எழுதியது

சிவாலயங்களில் மூர்த்தி பேதங்களைச் சிவாகம முறைப்படி பிரதிட்டை செய்துள்ளனர் நம்முன்னோர். இவைகளெல்லாம் பெரும்பாலும் சிலைகளினால் ஆக்கப்பட்டவை, இவைகள் வெளியில் வர இயலா. ஆதலால் நம் முன்னோர்கள் கோயிலுக்கு வர இயலாதவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், வயோதிகர்கள், பெண்கள் முதலியோர்களும் ஆண்டவனை வழிபட்டு அவனருளைப் பெற்று உய்யவேண்டும் என்றெண்ணியே மூலத்தான மூர்த்திகள் போலவே, பஞ்சலோகங்களால் (பொன், வெள்ளி, செம்பு, பித்தளை, ஈயம்) திருவுருவங்களை அவ்வேலை செய்யத் தகுதியுள்ள ஸ்தபதிகளைக் கொண்டு, அமைத்து ஆலயங்களிலே மந்திர பூர்வமாக எழுந்தருளச் செய்துள்ளார்கள். இவ்வுருவங்களுக்குப் பூஜைகள் நடத்துவதுடன், அலங்காரம் செய்து வாகனங்களிலே அமைத்துத் திருவீதிகளில் ஆலயத்தைக் சுற்றிவரத் திருவிழாக்களையும் ஏற்பாடு செய்தனர். அப்போது ஆலயத்திற்கு வர இயலாத

வர்கள் தங்கள் இருப்பிடங்களில் இருந்தே ஆண்டவனைத் தரிசனம் செய்து அவன் திருவருளைப்பெற்று நல்வாழ்வு வாழலாம்.

திருவிழாக்கள் என்றாலும் மகோற்சவம் என்றாலும் ஒன்றே, இவை பலவகைப்படும். இவைகளும் சிவாகமப்பிரமாணப்படியேதான் நிகழும். நித்திய உற்சவம் தினந்தோறும் செய்வது. நைமித்திக உற்சவம் காரணம் பற்றி நிகழ்வன. அதாவது பங்குனி உத்தரம், மாசி மகம், சித்திரைப் பௌர்ணமி, வைகாசி விசாகம், தைப்பூசம் முதலியவைகளாகும். இவற்றைத் திருவள்ளுவர் திருக்குறளில் "வான்சிறப்பு" என்னும் அதிகாரத்தில் குறித்துள்ளார்.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"

இதற்குப் பரிமேலழகர் அருளிய உரையைக் கவனிக்கலாம். "தேவர்களுக்கும் இவ்வுலகின் மக்களாற் செய்யப்படும் விழாவும், பூசையும் நடவாது, மழை பெய்யாதாயின்.

நைமித்திகத்தோடு நித்தியமென்றாகலின், செல்லாதென்றார். உம்மை சிறப்பும்மை நித்தியத் திற்றுழ்வு தீரச்செய்வது நைமித்திகமாதலின் அதனை முற்கூறினார்."

ஆதலால் திருவிழாக்கள் தொன்றுதொட்டு நம் ஆலயங்களில் நடந்துவந்துள்ளன என்பது கண்கூடு. உதாரணமாக ஒன்று கூறுகின்றேன். ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், அதாவது இன்றைக்குச் சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருஞான சம்பந்த சுவாமிகள் சென்னையிலுள்ள திருமயிலாப்பூர் என்னும் தலத்திற்குத் தலயாத்திரையாக எழுந்தருளி வந்தபோது ஒரு நிகழ்ச்சி அங்கு நடந்தது. அதாவது

சிவநேசச் செட்டியாரின் மகள் பூம்பாவை என்பாள் அம்பிகைக்கு மலர்தொடுக்க நந்தவனம் சென்று பூப் பறித்த போது பாம்பு கடித்து விஷம் தலைக்கேறி இறந்துவிட்டாள். இவள் உடலைத் தகனம் செய்து அதன் எலும்பையும் சாம்பலையும் ஒரு குடத்தில் இட்டுக் கன்னிமாடம் சமைத்து அதில் இதனை வைத்துப் பூசித்து வர ஏற்பாடு செய்திருந்தார். திருமயிலைக்கு வந்த திருஞானசம்பந்த சுவாமிகளை வணங்கிச் சிவநேசச் செட்டியார் நிகழ்ந்ததைத் தெரிவித்தார். அவரிடம் கருணைகொண்ட சுவாமிகள் குடத்தைக் குளக்கரையில் வைத்துக் கபாலீச்சரப் பெருமானை வணங்கிப் பதிகம் பாட அக்குடத்திலிருந்த என்பும் சாம்பலும் ஒன்றுகூடி உருவம் பெற்றுப் பூம்பாவையாக எழுந்தாள் என்பது பெரிய புராணத்தால் அறியலாம். அப்போது சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகத்தில அவ்வாலயத்தில் நடைபெற்ற திருவிழாக்களைக் குறித்து உள்ளமையால், நம் சிவாலயங்களில் மிகப் பழமையான காலத்திலிருந்தே திருவிழாக்கள் நடந்து வந்தன என்பது தெரியவரும். அப்பதிகத்திலுள்ள பாடல்களில் நைமித்திக உற்சவங்கள் குறிக்கப்பெற்றுள்ளன என்பதை அன்பர்கள் நினைவு கூர்தல்வேண்டும்: அவையாவன :- "ஐப்பசி ஓணவிழா" "கார்த்திகை நாள் விளக்கீடு" "ஆதிரை நாள்" "தைப்பூசம்" "மாசிக்கடலாட்டு" "பங்குனியுத்தர நாள்" "அட்டமி நாள்" "பொற்றுப்பு" "பெருஞ்சாந்தி" முதலிய விழாக்கள் பேசப்பட்டுள்ளன. இங்கு ஒன்று அவசியம் நான் சொல்லியே தீரவேண்டும். அதாவது "பெருஞ்சாந்தி" என்ற சொல் "பவித்ரோற்சவத்தையே" குறிக்கும். இதனை அறியாதார் சிலர், "குடமுழுக்கு" அல்லது "கும்பாபிஷேகம்" என்கிறார்கள். அது சரியல்ல. இச்சொல்லின் பொருள் பவித்ரோற்சவம் தான்.

நித்தியத்தில் ஏற்படும் தாழ்வுகள் தீரவே நைமித்திகத்தை எற்பாடு செய்தனர். இவைகளில் ஏதும் தாழ்வு ஏற்படக்கூடாது என்பது அவர்கள் சித்தம். ஒரு வேளை அபுத்திபூர்வமாகச் சில குறைகள் ஏற்பட்டால் அக்குறைபாடுகளையும் நீக்கக் கருதிய முன்னோர்கள், இப்பவித்ரோற்சவத்தையமைத்தனர். 'பவித்திரம்' என்றால் பரிசுத்தம் என்று பொருள், இது சிவாலய விஷ்ணு ஆலயங்களில் எல்லாம் ஆண்டுக்கு ஒருமுறை நிகழும். இதன் விதிகளையும் சிவாகமங்களில் காணலாம்.

இனி, ஆலயங்களில் பெருவிழா (மகோற்சவம், பிரம்மோற்சவம்)க்களும் ஆண்டுக்கு ஒருமுறை சிவாகமமுறைப்படிக் "கொடியேற்றம்" (துவஜாரோகணம்) முதல் 'கொடி இறக்கல்' (துவஜ அவரோகணம்) ஈறாக நடைபெறும். இதன் தத்துவங்களையும் நாம் உணரவேண்டும்.

கொடியேற்றத்தின் தத்துவம் : ஒரு தேசத்தின் அரசனின் ஆட்சிக்கு அறிகுறி அவன் கொடி ஆகும். சாதாரண உலக பழமொழி "அவன் கொடி கட்டி ஆள்கிறான்" என்பது. இதன் பொருள் என்ன? கொடி உயரப் பறந்தால் அவன் ஆட்சி நன்றாக இருக்கிறது; குடிகள் அமைதியாகவும் சுபிட்சமாகவும் வாழ்கிறார்கள். நாட்டில் காலத்தில் மழை பெய்கிறது; நிலவளமுண்டு; மக்கள் தம்முள் பகை, பொறாமை முதலிய கெட்டகுணங்களின்றி வாழ்கிறார்கள் என்பது.

இது போலவே, கோயில்களின் பெருவிழாவின் முதல் நாள் கொடி மரத்தில் கொடியை மந்திரங்கள் பூர்வமாக ஏற்றினால், மக்கள் ஆணவ மல அரசு வலியிழந்து செயலிழந்து நடுங்க உயிர்கள் பேரானந்தப் பெருவாழ்வினையடையும். இதனால் உயிர்களது மல நீக்கமும் முத்திப் பேறும் உண்டாகும். இவ்வுண்

மையை உமாபதி சிவாசாரிய சுவாமிகள் தாம் அருளிய 'கொடிக்கவி' என்னும் சித்தாந்த சாத்திரத்தில் பின் வருமாறு அருளியுள்ளார் :-

"வாக்காலு மிக்க மனத்தாலு மெக்காலும்
தாக்கா உணர்வரிய தன்மையனை-நோக்குப்
பிரித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கு மருணல்கக் கொடி"

"[1]அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்தும்-நெஞ்சழுத்திப்
பேசு மெழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி"

குறிப்பு:-பஞ்சாட்சரம்-சிவாய நம; எட்டெழுத்து-ஓம் அம் உம் சிவாய நம; ஆறெழுத்து-ஓம் சிவாய நம; நாலெழுத்து-ஓம் சிவாய

இனி இப்பெருவிழாக்களின் தத்துவங்களைக் கவனிக்கலாம்.

இறைவன் உலகத்தையும், உயிர்களுக்கு உடம்புகளையும் (ஏனென்றால் உயிர்கள் கடவுள்போல் அநாதி நித்யமாதலின். ஒருகால்தோன்றி ஒருகால் அழிவன வல்ல, ஆதலால் உயிர்களுக்கு உடம்புகளை மட்டும் என்றது) படைக்கின்றான். பின்னர் அவற்றைக் காப்பாற்றுகின்றான். அதன்பின் கடைசியாக அவ்வுடம்புகளை அழிக்கின்றான். உடம்பினுள்ளிருக்கும் உயிர்கள், ஆண்டவனை அடையவொட்டாமல் திரோதான சத்தியினால் மறைக்கின்றான். கடைசியாக அவ்வுயிர்கள் ஈடேறும் பொருட்டு அவைகளுக்கு அருள் புரிகின்றான். இவற்றைத்தான் இறைவனது ஐந்தொழில் என்றும் பஞ்சகிருத்யம் என்றும் அறிஞர் கூறுவர்.

இவ்வைந்தொழிலேயும் இயற்றுபவன் ஆண்ட வனே என்பதை விளக்கும் பொருட்டே ஆலயங்களில் பெருவிழாக்களே (பிரம்மோற்சவம்) ஏற்பாடு செய்தார்கள்.

பெரும்பாலும், சிவாலயங்களில் முதல் நாள் அன்று ஆண்டவனை அன்னவாகனத்தில் அமர்த்தி அலங்கரித்து விழாச் செய்வார்கள். இதன் தத்துவம்: அன்னம்-பிரமதேவனது வாகனம் என்பர். எனவே, இறைவன் பிரமதேவன்பால் அதிட்டித்து நின்று உலகத்தைப் படைத்தலேக் குறிக்கும் என்பர் அறிஞர். நான்காவது நாள் அன்று நாகவாகனத்தில் இறைவன் எழுந்தருளிப் பவனிவருவது அனைவருக்கும் தெரியும். காப்புக் கடவுளாகிய திருமாலின் வாகனம் நாகம் ஆதலால் இறைவன் திருமாலினிடம் அதிட்டித்து நின்று படைத்த உலகத்தைக் காப்பாற்றுகின்ருன் என்பதாகும். பிறகு ஏழாவது நாள் அன்று தேரிலும், எட்டாவது நாளன்று குதிரை வாகனத்திலும் ஆண்டவன் திருவிழாக்கொள்வது. படைத்துக் காத்த உலகத்தை துடைக்கின்ருன் (சம்மாரம் செய்கிருன்) என்பதைக் குறிக்கும். ஒன்பதாவது நாளன்று கொள்ளும் கோலம் பிட்சாடனர் கோலமாகும், இது இறைவனது நான்காவது தொழிலாகிய மறைத்தலேக் குறிக்கும். எப்படியென்ருல், பிட்சாடனர் அலங்காரத்தில் கறுப்புப் பட்டுக் கயிறு சேர்க்கப்படும். கறுப்பு, திரோதான சக்தியின் நிறமாதலால் இவ்விழா மறைத்தலேக் குறிக்கும். கடைசி தினத்தன்று சிவபெருமான் தீர்த்தமாடி மக்களுக்கும் தீர்த்தம் அருளுகின்ருன், என்பதான அருளேக்குறிக்கும். இத்தொழில் ஆண்டவனது ஐந்தாவது தொழில் ஆகும்.

எனவே, பெருவிழாவால் நிகழும் நன்மைகளேயும் படிப்பினேகளேயும் உணராத சாதாரண மக்கள் திரு

விழா வீண் செலவு என்பர். அவர் அறிவு அவ்வளவில் இருந்ததே என எண்ணி வருந்துவதல்லால் நாம் வேறு என்ன செய்வது ?

உலக நிலேயில் பொருளாதாரத் துறையிலிருந்து இதையாராய்ந்து பார்த்தாலும் இதன் அவசியத்தை உணர்தல் கூடும், இதனைத் தற்கால நிலேயில் பார்ப்போமானால் இது "பொதுவுடைமை"யைக் குறிக்கும். எப்படியென்றால் பின்வருமாறு விளக்கம் சொல்லலாம்.

ஒரு ஊரில் ஒரு கோயிலில் பெருவிழா என்று வைத்துக்கொள்வோம். அவ்வூரிலுள்ள மக்கள் அனைவரும் தங்கள் கவலைகளையெல்லாம்மறந்து ஆண்டவனை வணங்கி அவனருளைப் பெறவேண்டுமென்றும், விழாக்காணத் தங்கள் தங்கள் வீடுகளுக்கு வரும் நண்பர்களையும், உறவினர்களையும் வரவேற்று உபசரிக்க வேண்டுமென்றும் ஆர்வம் கொள்வர். வீடுகளை வெள்ளையடித்துத் தூய்மைப் படுத்துவார்கள். கோயிலையும் அவ்வாறே சுத்தப்படுத்துவார்கள். இவ்வேலையைச் செய்யும் வகையினர் பயன்பெறுவார்கள், ஆலயங்களிலுள்ள வாகனங்களையும், ஆபரணங்களையும், புதுக்குவார்கள். இவ்வகையில் ஒரு சாராருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். உற்சவத்திற்கு வேண்டிய துணிமணிகளை எல்லாம் நிறைய வாங்குவர் ஆலய அறங்காவலர்கள். இதுபோலவே ஊரிலுள்ள குடிமக்களும் தங்களை அலங்கரித்துக் கொள்ளப் புது துணிமணிகளை வாங்குவார்கள். இதனால் ஜவுளிக் கடைக்காரர் பிழைப்பார்கள். சுவாமி தூக்கும் ஒருவகை சாராரான ஆள்கள் பிழைப்பர். இவற்றிற்கு வேண்டிய பொருள்களையெல்லாம் வழங்கும் கடை வியாபாரிகளுக்கெல்லாம் ஒருவித வாய்ப்பு ஏற்படும். திருவிழாவிற்கு வேண்டிய மண்பாண்டங்களை வழங்கும் ஒரு குலத்தவரும் பிழைப்பர். மேளம் வாசிப்போர் தாளம் போடு

வோர் முதலிய சங்கீதத்துறையினரும் இக்காலத்தில் நல்ல வருவாயைப் பெற்று மகிழ்வர். பாணவேடிக்கைகளால் ஒருவகையினருக்கு வரும்படி ஏற்படும். சுவாமிகளை அலங்காரம் செய்ய ஏராளமான புஷ்பம் தேவைப்படும், இதனைக் கொடுத்து உதவும் ஒரு சாரார் பயன் பெறுகிறார்கள். இப்படி ஒரு ஊரிலுள்ள அந்தணர், அரசர். வணிகர், வேளாளர் மற்றைய வருணத்தவர் யாவரும் ஒரு பெரு விழாவால் ஆன்மலாபமும் அடைகிறார்கள் என்றால், உற்சவங்களில் வீண்செலவு எது என்று ஆராய்ந்து பாருங்கள்.

இது எப்படிப் பொதுவுடைமையைக் குறிக்கும் என்றால் விழாக்களைப் பணம் செலவிட்டு உபயம் செய்பவர் பெரும்பாலும் தனவந்தர்களாயிருப்பார்கள். இவர்களிடம் நம் ஊரிலுள்ள எல்லா வகையினரும் பிழைக்கவேண்டும், ஏதாவது கொஞ்சம் பொருள் உதவுங்கள் என்று கேட்டால் கொடுக்கவே மாட்டார்கள், இது யாவருடையவும் அனுபவம். ஆனால், அவர்களையே நாம் இவ்வூர்க்கோயிலில் ஒரு விழாச் செய்யவேண்டும், அதற்குப் பொருள் கொடுத்து உதவுங்கள் என்று கேட்டால் உடனே பெயரையும் புகழையும் கருதி நிரம்பப் பணம் கொடுப்பார்கள். இதனை மேலே சொன்ன வகையில் அவ்வூரிலுள்ள எல்லா வருணத்தவரும் பயன்பெற்றுய்யும் பொருட்டுப் பெற்றுச் செலவு செய்யலாம்.

இதனைத்தான் "பொதுவுடைமை" என்று அழைக்கலாம் என்பர் அறிஞர் பெருமக்கள்.

ஆகவே பெருவிழாக்களால் மக்கள் அதிகமான லாபத்தையடைகிறார்கள். விழாவில் உள்ள பல நிகழ்ச்சிகளைக்கண்டு பலர் மகிழ்ச்சியடைவது கண்கூடு. இதற்காகவேதான் நம் முன்னோர்கள் திருவிழாக்களை ஏற்பாடு செய்தார்கள். நல்ல வாகனங்களை நிர்மாணம்

செய்தார்கள். திருவுருவங்களுக்குப் பலவிதமான ஆப ரணங்களால் அலங்காரம் செய்யச் செய்தார்கள். மேளதாளங்களை ஏற்பாடு செய்தார்கள். பாண வேடிக்கைகளை அமைத்தார்கள். ஆட்டக் கச்சேரி, பாட்டுக் கச்சேரிகளையும் நிகழச் செய்தார்கள். மக்கள் மனோபாவம் பலவகைப்படும். ஆண்டவனை வணங்க வேண்டும் என்ற எண்ணமில்லாதவர்கள்கூட மேளக் கச்சேரியை ரசிக்க வருவார்கள். கடைசியில் ஆண்டவ னுக்கு ஒரு வணக்கம் செய்துவிட்டுச் செல்வர். பாண வேடிக்கை காண வருபவர்கள் அதுமுடிந்ததும் ஆண்ட வனை வணங்கிவிட்டுத்தான் செல்வர். ஆண்டவனுக்கு அலங்காரம் செய்யப்பட்டுள்ள ஆடை ஆபரணங்களைக் கண்டு ரசிப்பது முடிந்ததும் ஆண்டவனுக்கும் ஒரு கும்பிடுபோட்டுச் செல்வார்கள். மக்கள் எப்படியாவது ஆஸ்திகர்களாகத் திகழ வேண்டுமென்பதுதான் நம் முன்னோர் கொண்ட நோக்கம். இவ்வுண்மைத் தத்து வங்களை உணராத மக்கள் திருவிழாக்களுக்குச் செல வாகும் பணம் வீண் என்று சொல்லித் திரிவார்கள்.

இனியாகிலும், நம் மக்கள் அலட்சியம் செய்யாமல் தத்துவங்களை உணர்ந்து ஆஸ்திகர்களாக விளங்கும் பொருட்டு, ஆலயங்களில் இவ்விழாக் காலங்களில் எல் லாம் அறங்காவலர்கள் தக்க அறிஞர்களைக் கொண்டு சமயப் பிரசாரங்களை ஏற்படுத்தி மக்கள் அறிவைத் துலக்கவேண்டுமென்பது என் வேண்டுகோள்.

இவ்வுண்மைகள் இன்னும் பலவுண்டு. விரிப்பிற் பெருகும் என்று இதனுடன் நிறுத்திக்கொள்ளுகிறேன். மேலும் இத்தத்துவங்களை அறிந்துகொள்ள விரும்பு வோர், பிம்பாகமம், சிவோற்சவப்படலத்தைக் காண வும்.

சிவ சிவ

தர்ம சாஸ்த்ர ப்ரவசன ஸாரம்—1

தர்மக்ஞ, சிரோமணி, வித்யாவாசஸ்பதி

ப்ரம்மஸ்ரீ மாயூரம் ராமநாத தீக்ஷிதர் அவர்கள்

[சென்னை மேலமாம்பலம் ஸ்ரீ சங்கர மடத்தில் 25—10—72 முதல் 29—10—72 வரையில் ஐந்து தினங்கள் நிகழ்த்திய ப்ரவசனங்களின் சுருக்கம்]

1. பிரதி தினம் காலை எழுந்தது முதல் செய்யவேண்டிய காரியங்கள்

ब्राह्मे मुहूर्ते उत्थाय चिन्तयेदात्मनोहितम् ।

சூர்யோதயத்திற்கு முன் இரண்டு நாழிகைகளுக்கு முந்திய காலம் ப்ராஹ்மமுஹூர்த்தம் எனப்படும். அந்த நேரத்தில் தேவர்கள் மற்றும் பித்ருக்கள் நமது க்ருஹத்திற்கு வருகிறார்கள். அப்பொழுது படுக்கையை விட்டு எழுந்திருந்து அவர்களை வணங்கி இன்று என்னென்ன தர்மகாரியங்கள் செய்யலாம் என்று சிந்திக்க வேண்டும். உடன் பிரம்மா, விஷ்ணு, சிவபெருமான், ஆதித்யாதி நவக்கிரஹங்கள் இவர்களைப் பிரார்த்திக்க வேண்டும்.

ब्रह्मा मुरारिस्त्रिपुरान्तकश्च भानुश्शशी भूमिसुतोबुधश्च
गुरुश्चशुक्रश्च शनिराहुकेतवः कुर्वन्तु सर्वे मम सुप्रभातम् ।

பிறகு நம்முடைய வாழ்க்கையில் இன்று ஒரு நாள் சென்றது இனிவராது, நம்முடைய சிரேயஸ்ஸிற்காக நாம் என்ன செய்தோம் என்பதை யோசிக்கவேண்டும்

ஏதாவது தானம் செய்தோமா, அல்லது செய்வித்தோமா, பொய் சொல்லாமல் இருந்தோமா என்று சிந்திக்க வேண்டும். இதற்குப் பிறகு ஜல மல விஸர்ஜனம் செய்ய வேண்டும் பகலில் வடக்கு முகமாகவும், இரவில் தெற்கு முகமரகவும் ஜல மல விஸர்ஜனம் செய்ய வேண்டும். மண், ஜலம் இவைகளைக் கொண்டு சுத்தி செய்துகொண்டு முறையே நான்கு, எட்டு முறை வாய்கொப்பளிக்க வேண்டும்.

பல் துலக்குவது ஆல், கருவேலம் முதலிய குச்சிகளைக் கொண்டு அல்லது பல்பொடியால் ஆள்காட்டி விரலல்லாமல் நடுவிரலைக் கொண்டு செய்து 16 முறை வாய்கொப்பளிக்க வேண்டும். கிழக்கு முகமாகவே பல் துலக்க வேண்டும்.

ஸ்நாநம்:- ஸ்நாநம் செய்வதால் சரீரத்திலுள்ள அழுக்கு அகலுவது மட்டுமன்றி, மனதிலுள்ள அழுக்கும் (பாபமும்) அகலுகிறது. ஆகையினால் அதை முறையுடன் ஸங்கல்பம், ஸூக்த ஜபம், ப்ரோக்ஷணம், அகமர்ஷணஜபம், தேவபித்ரு தர்ப்பணம் முதலிய ஐந்து அங்கங்களுடன் செய்யவேண்டும். ஆறுகளில் ப்ரவாஹத்தின் எதிர்முகமாகவும், ஏரிகுளங்களில் சூர்யாபிமுகமாகவும் ஸ்நாநம் செய்யவேண்டும். பிறகு யக்ஷ்ம தர்ப்பணம், சிகோதகம், வாஸ உதகம் இவைகளை அவச்யம் செய்ய வேண்டும்.

2. நாற்பது காரியங்களில் அவசியம் செய்ய வேண்டியவை

முன் பல ஜன்மங்களில் செய்த புண்யவசத்தால் பிராமணப் பிறப்பு வருகிறது. ஆகையினுல் சரீரம் உண்டாகும்பொழுதே ஸம்ஸ்காரங்கள் (சுத்தி) செய்யப்படுகின்றன. அவைகளில்

கர்பாதானம்

ருதுவிலிருந்து பதினறு நாட்கள் வரை கர்பம் உண்டாகும். அதில் முதல் நான்கு நாட்கள் கழித்து ஏகாதசி, பூர்ணிமா, அமாவாஸ்யை, ஜன்ம நக்ஷத்ரம் மாதப் பிறப்பு முதலிய நாட்களை விலக்கி நல்ல நாளில் நல்ல லக்னத்தில் உண்டாவது நல்லது. ஒற்றைப் படை அதாவது 5, 7, 9 முதலிய நாட்களில் பெண்ணு கவும், இரட்டைப்படை அதாவது 6, 8, 10, முதலிய நாட்களில் ஆணுகவும் உண்டாவதாக சாஸ்த்ரம் கூறுகிறது.

பும்ஸவனம்

பும்ஸவனம் என்பது கர்பம் தரித்த மூன்ருவது மாதத்தில் செய்ய வேண்டியது. கர்பம் ஆண் பெண் என்ற பிரிவை அடையுமுன் செய்ய வேண்டியது. ஆலமரத்தில் கிழக்கு அல்லது வடக்கு முகமாகச் செல்லும் (வளரும்) கிளையில் இருபுறமும் பழங்கள் உள்ள மொட்டாகக் கொண்டுவந்து பாலுடன் அரைத்து வலது மூக்கில் மந்திரம் சொல்லிப் பிழிய வேண்டும் அவரவர் ஸூத்ரப்படி ஹோமம் முதலியவை செய்ய வேண்டும். இதனைச் சரிவரச் செய்தால் ஆண் குழந்தையே பிறக்கும் என்பது சாஸ்த்ரம்.

ஸீமந்தம்

இது நான்காவது மாதத்தில் செய்யவேண்டும். தவறினல் பின்பும் செய்யலாம். இதில் முக்கியமானது கர்ப்பிணியின் சிரஸில் நெற்றியின் நடுவில் மேல் பாகத்திலிருந்து—மகிடு (வகிடு) — அத்திக்கிளையாலும் காட்டுப் பன்றியின் முள்ளாலும் ரேகை செய்கிறது. இதன் வழியாய் கர்ப்பத்திற்கு ஜீவன் செல்வதாக சாஸ்த்ரம் கூறுகிறது. அவரவர் ஸூத்ரப்படி செய்ய வேண்டும்.

ஜாதகர்மா

குழந்தை பிறந்து ஸ்தன்யபானம் செய்வதற்கு முன் அவரவர் ஸூத்ரப்படி மாவு, தயிர், தேன், ஹிரண்யம், நெய் இவைகளை மந்திரத்துடன் சாப்பிடச் செய்ய வேண்டும். பிறகு சில ஸூத்ரப்படி தவிடு, கடுகு கலந்து பலீகரண ஹோமம் குழந்தையின் ரக்ஷைக்காகச் செய்ய வேண்டும்.

நாமகரணம்

பதினோராவது நாள் அல்லது ஒரு வருஷத்திற்குள் பெயர் இரட்டைப்படை எழுத்துக்கள் உள்ள ராம, சிவ, மஹாதேவ, நாராயண என்பனபோன்ற பெயர் வைக்க வேண்டும். மற்றவை அவரவர் ஸூத்ரப்படி செய்யவேண்டும்.

அன்னப்ராசனம்

ஆறுவது மாதம் அன்னப்ராசனம் செய்ய வேண்டும். மந்த்ரபூர்வமாகச் செய்யவேண்டும். பால், நெய், தேன், தயிர் கலந்த அன்னத்தைக் கொடுக்கலாம்.

சௌளம்

மூன்றுவது வயதில் ஸூத்ரப்படி சிகைவைக்க வேண்டும். ச்ரௌத ஸ்மார்த்த கர்மாக்களுக்கு யக்ஞோபவீதம் எவ்விதம் அவச்யமோ அவ்விதம் சிகையும் அவச்யம். சிகையில்லாமல் செய்வது பயனற்றது. சிகையில்லாதவர் சிகையின் ஸ்தானத்தில் ஐந்து தர்பங்களால் செய்யப்பட்ட பவித்ரத்தையாவது வலதுகாதில் வைத்துக் கொண்டு செய்வது நல்லது.

உபநயனம்

வேதாத்யயநம் மிகவும் அவச்யம். அதற்கு அதிகாரத்தைக் கொடுப்பது உபநயனம். முழுவதும்

வேதாத்யயநம் செய்யாமற்போனாலும் நாம் அவச்யம் செய்ய வேண்டிய ஸந்த்யாவந்தனம், பிரம்மயக்ஞம், தேவபூஜை அமாதர்ப்பணம் மாத்ரு பித்ரு ச்ராத்தம் முதலியவற்றில் வேத மந்திரங்கள் இருப்பதால் அவற்றைத் தெரிந்து கொள்ள உபநயனம் அவச்யமாகிறது. இது கர்பாஷ்டமம் (ஏழு வயதில்) செய்வது முக்கியம். 12 வயது வரை கௌணபக்ஷம். 15 வயதுவரை ஆபத் காலங்களில் செய்யலாம். அதற்கு பிறகு செய்வதானால் அதற்குச் சில பரிஹாரங்கள் செய்த பிறகே செய்ய வேண்டும். அதை முறையுடன் அறிந்து செய்யவும்.

அவரவர் ஸூத்ரப்படி அக்னிமுகம்-குமார போஜனம், வபனம், புதுவஸ்திரம், ஹோமம் முதலியது செய்து பிரம்மோபதேசம் (காயத்ரீ உபதேசம்). காயத்ரீ மந்திரத்தில் ஐந்து பாகங்கள் அமைந்திருக்கின்றன. ப்ரணவம், வ்யாஹ்ருதித்ரயம்-ஸாவித்ரீ மந்திரத்தின் மூன்று பாதங்கள் இவை பிரித்து ஜபம் சொல்ல வேண்டும். சேர்த்துச் செய்தால் விபரீத பலன். காலையில் நின்று கொண்டும் மாலையில் உட்கார்ந்தும் காயத்ரீ ஜபம் செய்ய வேண்டும். மற்றவை 'ஸந்தியா வந்தனம்' என்ற தலைப்பில் பார்க்கவும்.

நான்கு வேத விரதங்கள்

அந்தந்த வேத பாகங்களை அத்யயனம் செய்வதற்காக அக்னியில் ஹோமம் செய்வது-உபக்ரமம்-உத்ஸர்ஜனம் என்று பெயர். இதை முறையுடன் செய்து வேதம் அத்யயனம் செய்தால் வீர்யவத்தாக ஆகும். தற்காலத்தில் விவாஹம் செய்யும் முன் எல்லாவற்றையும் சேர்த்துச் செய்கிறார்கள். இது ஆபஸ்தம்பம் முதலிய யஜுர் வேத ஸூத்ரத்தில் ப்ராஜாபத்யம். ஸௌம்யம், ஆக்நேயம், வைச்வதேவம் என்று நான்கு விதம். ஸாம வேதத்தில் எட்டு விதம் (அஷ்டவ்ரதங்

கள்) அவற்றை முறையுடன் செய்வது விசேஷ பலனைக் கொடுக்கும்.

ஸமாவர்த்தனம்

வேதாத்யயநம் பூர்த்தியான பிறகு குருகுலத்தை விட்டுப் பிரியும் சமயம் செய்ய வேண்டியது. இதற்கு ஸ்நாநகர்ம என்று பெயர். இது ஆனபிறகு ஸ்நாதகன் என்று பெயர். அவனுக்குரிய தர்மங்கள் பெரும்பாலானவை க்ருஹஸ்தன் செய்ய வேண்டியவையே இது நான்கு ஆச்ரமங்களிலும் சேராதது. ஆகையால் 'நிராச்ரமி' - (ஆச்ரமமில்லாமல் இருப்பது) அசாஸ்த்ரீயமானதால் சீக்கிரத்தில் விவாஹம் செய்து கொள்ள வேண்டும்.

விவாஹம்

விவாஹம் பெண்களுக்கு உபநயனம் போல் ஏழு வயதில் செய்வது முக்கியம். அதற்கு முன்னும் செய்யலாம். ருது ஆகும்வரை கௌணகாலம். ருது ஆனல் விவாஹம் சாஸ்த்ரீயமாகாது. விவாஹம் ஆகாமல் வீட்டில் ருதுவானல் அவளுக்கு விருஷளீ என்று பெயர் அவளை விவாஹம் செய்து கொள்பவன் வ்ருஷளீபதி. அவன் தர்மகார்யங்கள் செய்ய அதிகாரமற்றவன், அவனுடன் யாதொரு சம்பந்தமும் கூடாதென்று தர்ம சாஸ்த்ரம் கூறுகிறது.

இதற்குப் பரிஹாரம் ஆச்வலாயந மஹரிஷி கூறியிருக்கின்றார். பெண்ணுக்குத் தந்தை ருதுவின் ஸங்க்யையைக் கணக்கிட்டு அந்த ஸங்க்யையுள்ள கோதானம் அல்லது ருது ஸங்க்யையுள்ள பிராம்ணபோஜனம் ஸங்கல்பம் செய்து செய்ய வேண்டும்.

பெண் மூன்றுநாள் பால் ஆஹாரம் செய்து ரத்னம் இழைத்த ஆபரணத்தை ருது ஆகாத பெண்ணிற்கு ஸங்கல்பம் பூர்வம் தானம் செய்ய வேண்டும்.

அவளை மணக்கும் வரன் கூச்மாண்ட ஹோமம் கூச்மாண்டம் என்ற மந்திரங்களைச் சொல்லிச் செய்ய வேண்டும். அதற்குரிய சங்கல்பம் செய்து கொண்டு, இவ்விதம் மூவரும் மூன்று காரியங்களைச் செய்து பிறகு விவாஹம் செய்தால் சாஸ்த்ரீயமாகும். இதைச் செய்யாமல் நான்கு நாள் ஔபாஸநம் செய்தாலும் விவாஹம் சாஸ்த்ரீயமாகாது. விவாஹம் பற்றிய மேலும் பல விஷயங்களை "தர்ம சாஸ்த்ர ப்ரவசன ஸாரம்-2"ல் காணலாம்.

பஞ்சமஹாயக்ஞும்

வைச்வதேவம் என்பதை பஞ்சமஹாயக்ஞும் என்று சொல்கிறேம். இது ஐந்து விதமான பாபங்களைப் போக்குகிறபடியால் அப்பெயர் ஏற்பட்டது. ஐந்து வித பாபங்களான : நெல் குத்துவது, தான்யங்களை அரைப்பது, அடுப்பை எரிய வைப்பது, ஜலகும்பம் துடைப்பத்தால் சுத்தி செய்வது. இவை ஐந்திலும் பிராணி ஹிம்ஸை ஏற்படுவதால் (தான்யமும் பிராணி போல்) இவை ஐந்தும் பாபத்தைக் கொடுக்கின்றன. இவை விலக்கக்கூடிய கார்யங்களும் அல்ல. தினம் செய்தே தீர வேண்டியிருக்கிறது. இதைப் போக்கடிக்கச் கொஞ்சம் அன்னத்தைக் கொண்டு தேவயக்ஞும், பித்ருயக்ஞும், மனுஷ்யயக்ஞும், பூதயக்ஞும், ப்ரும்மயக்ஞும் என்ற ஐந்து யக்ஞுங்களைத் தினம் செய்ய வேண்டும். கீதையில் பகவான் "யக்ஞ சிஷ்டாம்ருத புஜ: யாந்தி ப்ரம்மஸநாதனம்" என்று இதைச் செய்து சாப்பிடுபவர் ப்ரம்மஸ்வரூபத்தை அடைகின்றனர் என்று கூறுகிறார்.

இவ்விதம் 40 ஸம்ஸ்காரங்களில் 19 ஸம்ஸ்காரங்கள் கூறப்பெற்றன. மேலும் பாகயக்ஞுங்கள், ஏழு, ஹவிர் யக்ஞுங்கள் ஏழு, ஸோமஸம்ஸ்தை ஏழு, ஆக 21 கூறப்பட்டுள்ளன. ஸம்ஸ்காரங்கள் சித்திரத்தில்

உள்ள பிம்பம் வர்ணங்கள் கொடுத்தால் நன்கு ப்ரகாசிப்பது போல் ப்ராஹ்மண்யத்தைப் பூர்த்தி செய்து விளங்க வைக்கின்றன.

3. பித்ருகார்யம்

அந்தணருக்கு அவச்யமான கார்யங்களில் பித்ரு கார்யம் மிகவும் முக்கியம். தேவ பித்ரு கார்யாப்யாம் ந ப்ரமதிதவ்யம்'' என்று வேதம் கூறுகிறது. பொருளை யும் ஆவியையும் பொருட்படுத்தாமல் புதல்வரை வளர்க் கும் தாய் தந்தையர்க்கு தனயன் செய்யும் கைமாறு பித்ரு கார்யமேயாகும். மனிதர்களுக்கு தினம் பசி; தேவர்களுக்குப் பதினைந்து நாட்களில் பசி; பித்ருக் களுக்கு மாதம் ஒரு முறை பசி. அதுவே அமாவாஸ்யை ஒவ்வொரு அமாவாஸ்யையிலும் பிராம்மண போஜனம், ஹோமம் செய்து ச்ராத்தம் செய்வதே முக்யம், சக்தி யற்றவர்கள் ஹிரண்ய ச்ராத்தம் செய்யலாம். அதற் கும் சக்தியற்றவர்கள் தில (எள்ளு) தர்ப்பணம் செய்ய லாம். இதை எவ்விதத்திலும் விடக்கூடாது. வருஷந் தோறும் மரித்த திதியில் ச்ராத்தம் செய்வது ப்ரத்யாப் திகம். இதை அன்ன ரூபமாகவே செய்ய வேண்டும். இது செய்யத் தவறினால் கோடி ஜன்மாக்களில் கீழ்ப் பிறப்பில் பிறந்து துன்பத்தை அனுபவிக்கிருன். மஹாளய பக்ஷத்தில் 15 நாட்கள் அசக்தர்கள் ஒரு நாளாவது ச்ராத்தம் செய்ய வேண்டும். அஷ்டகா என்பதை அவரவர் சக்திக்குத் தக்கவாறு செய்தே தீர வேண்டும்; மாதப் பிறப்பு, யுகாதி (அக்ஷய த்ருதீயை) ரதஸப்தமீ, வ்யதீபாதம், இவைகளில் திலதர்ப்பணம் மட்டுமாவது செய்வது உசிதமானது. ஒரு வருஷத்தில் 96 ச்ராத்தங்கள் ''ஷண்ணவதி'' தெரிந்து கொண்டு செய்வது ச்ரேயஸ்கரமானது.

ச்ராத்தம் செய்து பித்ருக்களைத் திருப்தி செய்து வைப்பதால் சரீரத்தில் ஆரோக்யம், ஜீரண

சக்தி, குடும்ப ஒற்றுமை, அன்னபான ஸமிருத்தி கொடையில் விருப்பம், தேஜஸ் இவை உண்டாகின்றன.

4. ஸ்திரீகள் அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்கள்

